# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

# திருநெல்வேலி

# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

# TIRUNELVELI

## தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

## DIRECTORATE DISTANCE CONTINUING EDUCATION

## TIRUNELVELI

# பக்தி இலக்கியம்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி – 627 012.

# பக்தி இலக்கியம்

## முதலாமாண்டு - இரண்டாம் பருவம்

**Learning Objective:**

- ❖ தமிழின் பக்தி இலக்கிய வரலாற்றையும் வளத்தையும் அறிதல்
- ❖ சைவ இலக்கியங்களின் நோக்கையும் போக்கையும் இலக்கிய அழகுகளையும் அறிய முதன்மையான சைவ இலக்கியப் பனுவற்பகுதிகளைக் கற்றல்.
- ❖ வைணவ இலக்கியங்களின் நோக்கையும் போக்கையும் இலக்கிய அழகுகளையும் அறிய முதன்மையான வைணவ இலக்கியப் பனுவற்பகுதிகளைக் கற்றல்.
- ❖ பிற்கால பக்தி இலக்கியப் போக்கினை உணரும் வகையில் அருணகிரி நாதர், தாயுமானவர், இராமலிங்கர் அகிய முப்பெரும் ஆளுமைகளின் பனுவற்பகுதிகளைப் பயிலல்.
- ❖ இசுலாமிய, கிறித்தவப் பக்தி இலக்கியப் போக்கை உணரும் வகையில் தெரிவு செய்த பகுதிகளைப் பயிலல், சமயப் பொதுநோக்கு நிலையைக் கொண்ட பனுவற்பகுதிகளையும் பயிலல்.

### அலகு - 1 காரைக்காலம்மையார், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர்

- ❖ காரைக்காலம்மையார் - பதினொராந் திருமுறை - திருவிரட்டைமணிமாலை முழுமையும் (20 பாடல்கள்).
- ❖ திருநாவுக்கரசர் - திருஅங்கமாலை - தலையே நீவணங்காய் என தொடங்கும் பதிகம்.

- ❖ திருஞானசம்பந்தர் - முதல் திருமுறை - திருவையாற்றுப் பதிகம் - புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி பாடல் முதல் ''அன்னமலி பொழில்புடைசூழ் ஐயாற்றெம்'' பாடல் வரை.

**அலகு - 2 சுந்தரர், மாணிக்கவாசகர்**

- ❖ சுந்தரர் - ஏழாம் திருமுறை (திருவெண்ணெய் நல்லூர்ப் பதிகம், திருக்கோளிலிப் பதிகம்)
- ❖ மாணிக்கவாசகர் - திருவம்மானை (20 பாடல்கள்)
- ❖ திருக்கோத்தும்பி (20 பாடல்கள்)

**அலகு - 3 பெரியாழ்வார், நம்மாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார்**

- ❖ பெரியாழ்வார் - 3-ம் திருமொழி - முதற்பத்து - மாணிக்கங் கட்டி முதல் 10 பாடல்கள் (44 - 53)
- ❖ நம்மாழ்வார் - 3-ம் திருமொழி - விற்பெரு வழிழவும் முதல் 10 பாடல்கள் (1068 - 1077)
- ❖ ஆண்டாள் - நாச்சியார் திருமொழி - 20 பாடல்கள் - தையொரு திங்களும் முதல் 20 பாடல்கள்.
- ❖ குலசேகராழ்வார் - 6-ம் திருமொழி - பெருமாள் திருமொழி - ஏர்மலர்ப் பூங்குழல் - முதல் 10 பாடல்கள் (698 - 707)

**அலகு - 4 அருணகிரிநாதர், தாயுமானவர், இராமலிங்க அடிகள்**

- ❖ **அருணகிரி நாதர் - திருப்புகழ் (5 பாடல்கள்)**

1. கைத்தல நிறைகனி
2. முத்தைத்தரு
3. கலகலெ னச்சில
4. கழைமுத்து மாலை

5. பத்தியால் யானுனைப்

❖ **கந்தரலங்காரம் (5 பால்கள்)**

1. தேன் என்று பாகு என்று
2. தண்டா யுதமும்
3. சேல்பட் டழிந்தது
4. விழிக்குத் துணைதிரு
5. மண்கம ழுந்தி

❖ தாயுமானவர் - (15 பாடல்கள்)

❖ இராமலிங்க அடிகள் - பிள்ளைப் பெரு விண்ணப்பம்

**அலகு - 5 குணங்குடி மஸ்தான் சாகிபு, வேதநாயக சாத்திரியார், வேதநாயகர்.**

❖ குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள் - ஆனந்தக்களிப்பு - கொடிகட்டிக் கொண்டெழு என்னிலை தன்னை அறிந்தே (244 - 253)

❖ வேதநாயக சாத்திரியார் பாடல்கள் 5 பாடல்கள்

1. யார் அசர் ஆரோ? யார் இவர் ஆரோ? - பாடல் எண்: 1539
2. வானம் பூமியோ பராபரன் - பாடல் எண்: 1548
3. கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன் - பாடல் எண்: 1759
4. நெஞ்சே நீ கலங்காதே - பாடல் எண்: 1774
5. இயேசு நாயகா! சாமி மனம் - பாடல் எண்: 1831

❖ வேதநாயகர் - சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்

1. ஐயனே உன் அழகைக் காண (43)
2. ஏனின்னம் தாமதமையா (47)
3. அபயம்நீ யருளுவாய் (74)
4. உன்னையெனக்குக்காட்டையா (84)
5. மனமேநீ ஈசனாமத்தை (140)

## அலகு - 1

## காரைக்காலம்மையார் - பதினொராந் திருமுறை

## திருவிரட்டை மணிமாலை

### காரைக்காலம்மையார்

திருஇரட்டைமணிமாலை என்பது கட்டளைக் கலித்துறை முன்னும் வெண்பாப் பின்னுமாக அந்தாதித் தொடையால் பாடப் பெறுவதாகும். இரட்டை மணிமாலை என்னும் நூலை முதன் முதலாக பாடியவர் காரைக்கால் அம்மையார் என்ற பலரும் எண்ணுகின்றனர். இவ் இரட்டை மணி மாலைக்கு முற்பட்டதாக வேறோர் இரட்டை மணி மாலையும் கிடைத்துள்ளது.

உலக வாழ்வில் துன்பம் உண்டாகும் பொழுது உள்ளம் தளராது இறைவனையே போற்றுதல் வேண்டும். இறைவன் ஆனணயின்றி இவ்வுலகத்தில் எதுவும் நிகழாது என்பதை உணர்ந்து மறவாது போற்றும் அடியார்களை இறைவன் மீண்டும் பிறவாது காத்தருளுகின்றான்.

என் தோள் முக்கண் எமானாகிய இறைவனுடைய திருவடிகளை வணங்கிய போற்றுவோர் கடலனைய துன்பங்கள் அனைத்தையும் கடந்து ஈறில்லாத திருவடிப் பேற்றை எய்தி மகிழ்வர். மறைகட்கு எல்லாம் தலையாய திருஐந்தெழுத்தினை உருவேற்றிப் போற்றுவோர் இறைவன் கழல் அடைவர் மெய்யடியார்களைப் போற்றுவோரைக் கண்டு வினைகள் எல்லாம் நில்லாது ஒழிந்து போகின்றன. தீவினை வந்து அடையாதவாறு திருஐந்தெழுத்தை ஓதினால் உய்தி பெறலாம். இத்தகைய நுண் பொருள்கள் எல்லாம் இம்மாலையிற் காணலாம்.

**பாடல்: 1**

**கிளர்ந்துந்து வெந்துயர் வந்தடும் போதஞ்சி நெஞ்சம்என்பாய்த்**

**தளர்ந்திங் கிருத்தல் தவிர்திகண் டாய்தள ராதுவந்தி**

**வளர்ந்துந்து கங்கையும் வானத் திடைவளர் கோட்டுவெள்ளை**

**இளந்திங் களும்எருக் கும்மிருக் குஞ்சென்னி ஈசனுக்கே**

**விளக்கம்**

முன்வினை தூண்ட அது காரணமாக வெங்கும்பிக் காயத்துள் வந்து சேரும் பிறவித் துன்பம் அடர்ந்து வருத்தும் சமயத்தில் நெஞ்சம் என்று சொல்லப்படுகின்ற மனமே, அதற்கு நீ அஞ்சி தளர்ந்திருத்தலைத் தவிர்ப்பாயாக கங்கையையும் பிறையையும் எருக்கம் பூவையும் சென்னியில் அணிந்திருக்கும் ஈசனுக்குத் தளராமல் வணக்கம் செய்.

**பாடல்: 2**

**ஈசன் அவன்அல்லா தில்லை எனநினைந்து**

**கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து - பேசி**

**மறவாது வாழ்வாரை மண்ணுலகத் தென்றும்**

**பிறவாமைக் காக்கும் பிரான்**

**விளக்கம்**

சிவனைத் தவிர வேறு தெய்வம் இல்லை என்று நினைத்து, கடவுளின் பெருமையையும் தன்னுடைய சிறுமையையு எண்ணி நாணத்தை அடைந்து மனத்தில் இருத்தி, அவனது புகழைப் பேசி மறவாமல் வாழ்வாரை மறுபடியும் பிறவி எடுக்காதவாறு செய்பவன் அவனேயாவான்.

**பாடல்: 3**

பிரானென்று தன்னைப்பன் னாள்பர வித்தொழு வார்இடர்கண்

டிரான்என்ன நிற்கின்ற ஈசன்கண் டீர்இன வண்டுகிண்டிப்

பொராநின்ற கொன்றைப் பொதும்பர்க் கிடந்துபொம் மென்றுறைவாய்

அராநின் றிரைக்குஞ் சடைச்செம்பொன் நீள்முடி அந்தணனே

**விளக்கம்**

தலைவன் என்று தன்னைப் பல நாளும் துதித்துத் தொழுகின்றவரது துன்பங்களைப் பாரத்துக் கொண்டிராதவன். அவன் யாரெனில் கூட்டமான வண்டுகள் நெருங்கியுள்ள கொன்றை மாலையாகிய பொந்தில் உள்ள பாம்பு ஒலி செய்கின்ற சடையாகிய நீண்ட செம்பொன் முடியினையுடைய அந்தணனே யாவான்.

**பாடல்: 4**

அந்தணனைத் தஞ்செமென் றாட்பட்டார் ஆழாமே

வந்தணைந்து காத்தளிக்கும் வல்லாளன் - கொந்தணைந்த

பொன்கண்டாற் பூணாதே கோள்நாகம் பூண்டானே

என்கண்டாய் நெஞ்சே இனி

**விளக்கம்**

அழகிய தண்ணருளையுடைய சிவபிரானை அடைக்கலம் என்று ஏற்றுக்கொண்டவர்கள் பிறவிக் கடலில் ஆழ்ந்து விடாதவாறு வந்து அருள் செய்யும் பேராற்றலை உடையவன் கொத்தாகப் பொருந்திய பொன் ஆபரணங்கள் அணியாமல் தீமையைச் செய்யும் பாம்பை பூண்டிருப்பவனை நெஞ்சே நீ நினை என்பதாம்.

**பாடல்: 5**

இனிவார் சடையினிற் கங்கையென் பாளைஅங் கத்திருந்த

கனிவாய் மலைமங்கை காணில்என் செய்திகை யிற்சிலையால்

**முனிவார் திரிபுரம் மூன்றும்வெந் தன்றுசெந் தீயில்முழ்கத்**

**தனிவார் கணைஒன்றி னால்மிகக் கோத்தளஞ் சங்கரனே**

**விளக்கம்**

நீண்ட சடையில் உள்ள கங்கையைக் கண்டு இடப்பாகத்தில் உள்ள உமாதேவியார் நாணினால் நீ என்ன செய்வாய்? சினம் பொருந்திய திரிபுரங்கள் மூன்றையும் வெந்தழியுமாறு ஒப்பற்ற கயையைக் கோத்த சங்கரனே! இப்போது என்ன செய்வாய் என்று ஏளனமாய்க் கேட்பது போல் உள்ளது.

**பாடல்: 6**

**சங்கரனைத் தாழ்ந்த சடையானை அச்சடைமேற்**

**பொங்கரவம் வைத்துகந்த புண்ணியனை - அங்கொருநாள்**

**ஆவாவென் றாழாமைக் காப்பானை எப்பொழுதும்**

**ஓவாது நெஞ்சே உரை**

**விளக்கம்**

சங்கரனை தொங்குகின்ற சடையை உடையவனை அந்தச் சடையில் சினம் பொங்கி எழுகின்ற பாம்பை உடைய புண்ணியனை இறக்கும் அன்று துன்பத்தில் அமிழ்ந்தாமல் காப்பாற்றுகின்றவனை இடைவிடாமல் நெஞ்சே நீ துதிப்பாயாக.

**பாடல்: 7**

**உரைக்கப் படுவதும் ஒன்றுண்டு கேட்கிற்செவ் வான்தொடைமேல்**

**இரைக்கின்ற பாம்பினை என்றும் தொடேல்இழிந் தோட்டந்தெங்கும்**

**திரைக்கின்ற கங்கையும் தேன்நின்ற கொன்றையும் செஞ்சடைமேல்**

**விரைக்கின்ற வன்னியுஞ் சென்னித் தலைவைத்த வேதியனே**

**விளக்கம்**

சொல்லப்படுவதும் ஒன்றுண்டு. அது யாதெனில் செவ்வானத்தைக் கற்றையாகத் தொகுத்தது போன்ற தொகுதியின் மேல் ஒலிக்கின்ற பாம்பை எப்போதும் தொடாதே ஏனெனில் அது இறங்கி ஓடி விடும். அலை வீசுதலைச் செய்கின்ற கங்கையும் தேன் பொருந்திய கொன்றையும் செஞ்சடை மேல் மணம் வீசுகின்ற வன்னியும் தலையில் வைத்துள்ள வேதியனே.

**பாடல்: 8**

**வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்**

**காதியனை ஆதிரைநன் னாளானைச் - சோதிப்பான்**

**வல்லேன மாய்ப்புக்கு மாலவனும் மாட்டாது**

**கில்லேன மாஎன்றான் கீழ்**

**விளக்கம்**

மறையை அருளியவனை மறையின் உட்பொருளாக உள்ளவனை வேதத்துக்கு ஆதியாக இருப்பவனை திருவாதிரை நன்னாளுக்கு உரியவனை அடியை ஆராய்ந்து கண்டறியும் பொருட்டு வலிமை தங்கிய பன்றியாய்ப் புகுந்து திருமாலும் அடியைக் காணமாட்டாது அறிய மாட்டேன் போற்றி என்றான்.

**பாடல்: 9**

**கீழா யினதுன்ப வெள்ளக் கடல்தள்ளி உள்ளுறப்போய்**

**வீழா திருந்தின்பம் வேண்டுமென் பீர்விர வார்புரங்கள்**

**பாழா யிடக்கண்ட கண்டன்எண் தோளன்பைம் பொற்கழலே**

**தாழா திறைஞ்சிப் பணிந்துபன் னாளும் தலைநின்மினே**

**விளக்கம்**

கீழான துன்ப வெள்ளக் கடலை அணுகாமல் அப்புறப்படுத்தி, உள்ளூறப் போய் வீழாதிருந்து இன்பம் வேண்டும் என்று சொல்வீர்கள் பகைவர்களது முப்புரங்கள் பாழாகுமாறு செய்த நீல கண்டன் எட்டுத் தோள்களை உடையவன் அவனது பைம் பொற் கழலைப் பொழுது போக்காமல் போற்றிப் பணிந்து எக்காலமும் சலியாது உறுதியுடன் நில்லுங்கள் உங்கள் கோரிக்கை கூடும் என்பதாம்.

**பாடல்: 10**

**தலையாய ஐந்தினையுஞ் சாதித்துத் தாழ்ந்து**

**தலையா யினஉணர்ந்தோர்காண்பர் - தலையாய**

**அண்டத்தான் ஆதிரையான் ஆலாலம் உண்டிருண்ட**

**கண்டத்தான் செம்பொற் கழல்**

**விளக்கம்**

தலைமை பெற்ற திருஐந்தெழுத்தை இடைவிடாது கூறி எண்ணத்தால் செய்து. வணங்கி தலைமை பெற்ற பொருள்களை உணர்நதவர்கள் காண்பார்கள் தலைமை பெற்று உலகங்களை உடையவன் திருவாதிரைக்கு உரியவன் நஞ்சையுண்டு இருண்ட கண்டத்தை உடையவனது செம்பொற் கழலைக் காண்பார்கள் என முடிக்க.

**பாடல்: 11**

**கழற்கொண்ட சேவடி காணலுற் றார்தம்மைப் பேணலுற்றார்**

**நிழற்கண்ட போழ்தத்து நில்லா வினைநிகர் ஏதுமின்றித்**

**தழற்கொண்ட சோதிச் செம் மேனிஎம் மானைக்கைம் மாமலர்தூய்த்**

**தொழக்கண்டு நிற்கிற்கு மோதுன்னி நம்மடுந் தொல்வினையே**

**விளக்கம்**

வீரக்கழலணிந்த திருவடியைக் கண்ட அடியவரைப் போற்றியவர் சாயலைப் பாரத்த போது சமானமில்லாத தழலைப் போன்ற ஒளியுடைய செம்மேனி எம்மானை மலர் கொண்டு அருச்சித்துத் தொழுதலைப் பாரத்தும் பொருந்தி நம்மை வருந்தும் பழமையான தீவினைகள் நிற்கமாட்டா என்பதாம்.

**பாடல்: 12**

**தொல்லை வினைவந்து சூழாமுன் தாழாமே**

**ஒல்லை வணங்கி உமையென்னும்- மெல்லியல்ஓர்**

**கூற்றானைக் கூற்றுருவங் காய்ந்தானை வாய்ந்திலங்கு**

**நீற்றானை நெஞ்சே நினை**

**விளக்கம்**

துன்பத்தை உண்டாக்கும் தீவினை வந்து சூழாமுன் காலந் தாழ்த்தாது விரைவாக வணங்கி, உமாதேவி என்று கூறப் பெறும் மெல்லியலாளை ஒரு பாகத்தில் உடையவனும், எமநனைத் தண்டித்தவனும் பொருந்தி விளங்குகின்ற திருநீற்றை அணிந்தவருமாகிய சிவபெருமானை நெஞ்சே நினைப்பாயாக.

**பாடல்: 13**

**நினையா தொழிதிகண் டாய்நெஞ்ச மேஇங்கோர் தஞ்சமென்று**

**மனையா ளையும்மக்கள் தம்மையும் தேறியோர் ஆறுபுக்கு**

**நனையாச் சடைமுடி நம்பன்நந் தாதைநொந் தாதசெந்தீ**

**அனையான் அமரர் பிரான்அண்ட வாணன் அடித்தலமே**

**விளக்கம்**

நெஞ்சமே! இங்கு ஒரு பற்றுக் கோடு என்று மனைவியையும் மக்களையும் நினையாமல் ஒழிவாயாக, மனம் தேறி ஒப்பற்ற கங்கையாறானது புகுந்தும் ஈரமாகாத சடை முடியை உடையவனும் நம் தந்தையும் ஒளி குறைவு படுதல் இல்லாத செம்மையான தீயைப் போன்றவனும் தேவர்களுக்குத் தலைவனும் எல்லா உலகங்களிலும் நிறைந்து இருப்பவனுமாகிய இறைவனது பாதங்களைப் பற்றுக் கோடாகக் கொள்வாயாக என்பதாம்.

**பாடல்: 14**

**அடித்தலத்தின் அன்றரக்கன் ஐந்நான்கு தோளும்**

**முடித்தலமும் நீமுரித்த வாறென் - முடித்தலத்தில்**

**ஆறாடி ஆறா அனலாடி அவ்வனலின்**

**நீறாடி நெய்யாடி நீ**

**விளக்கம்**

நீ உன் திருவடிகளால் முன்பு இராவணனது இருபது தோள்களும் திருமுடிகளும் முரிந்தொழியுமாறு செய்த வகை எங்ஙனம்? உன் தலையில் கங்கையாறு படியுமாறு செய்பவன். அனலை ஏந்துபவன் நீறாடுதலைச் செய்பவன் நெய்யாடுதலை செய்பனாகிய உனக்கு இது எங்ஙனம் சாத்தியமாயிற்று என்பதாம்.

**பாடல்: 15**

**நீநின்று தானவர் மாமதில் மூன்றும் நிரந்துடனே**

**தீநின்று வேவச் சிலைதொட்ட வாறென் நிரங்குவல்வாய்ப்**

**பேய்நின்று பாடப் பெருங்கா டரங்காப் பெயர்ந்துநட்டம்**

**போய்நின்று பூதந் தொழச்செய்யும் மொய்கழற் புண்ணியனே**

**விளக்கம்**

நீ அரக்கர்களின் மூன்று பெரிய மதில்களையும் கலந்து உடனே ஏரியுமாறு வில்லேந்திய காரணம் என்ன? திரங்கிய பெரியவாயையுடைய பேய் நின்று பாட ஊழிக்கால ஈமம் ஆடுமிடுமாகக் கொண்டு நடனமாடி பூதம் தொழச் செய்யும் வலிய வீரக்கழலையணிந்த நல்வினை வடிவினனாகிய நீ இவ்வாறு செய்தது என்? என்று முடிக்க.

**பாடல்: 16**

**புண்ணியங்கள் செய்தனவும் பொய்ந்நெறிக்கட் சாராமே**

**எண்ணியோ ரைந்தும் இசைந்தனவால் - திண்ணிய**

**கைம்மாவின் ஈருரிவை மூவுருவும் போர்த்துகந்த**

**அம்மானுக் காட்பட்ட அன்பு**

**விளக்கம்**

புண்ணியங்கள் செய்தனவும், பொய்யன வழிகளில் சாராமல் எண்ணி ஒப்பற்ற திருஐந்து எழுத்துக்களுள் பொருந்தின இதற்குக் காரணம் ஆற்றல் மிக்க கையை உடைய யானையின் தோலைப் போர்த்தியுள்ளவனும் அயன், அரன், அரி என்னும் மூவுருவமும் உடைய தலைவனுமாகிய உன்னைத் தொழுது பெற்ற அன்பினாலேயாம்.

**பாடல்: 17**

**அன்பால் அடைவதெவ் வாறுகொல் மேலதோர் ஆடரவம்**

**தன்பால் ஒருவரைச் சாரஒட் டாதது வேயும்அன்றி**

**முன்பா யினதலை யோடுகள் கோத்தவை ஆர்த்துவெள்ளை**

**என்பா யினவும் அணிந்தங்கோர் ஏறுகந் தேறுவதே**

**விளக்கம்**

உன்னை அன்பால் அடைவது எங்ஙனம்? உன் உடலின் மேல் ஓர் ஆடுகிற பாம்பு பொருந்தியிருக்கிறத. அது ஒருவரையும் தன்பக்கம் நெருங்கவிடாது. அதுவும் அல்லாமல் முன்பு இறந்து பட்டவர்களின் திலையோடுகள் மாலையாகக் கோக்கப் பெற்று வெண்மையான எலும்புகளையும் அணிந்து விடையின் மீது ஏறியுள்ளீர் உன்னை நெருங்குவது சாத்தியமா என்றபடி.

**பாடல்: 18**

**ஏறலால் ஏறமற் றில்லையே எம்பெருமான்**

**ஆறெலாம் பாயும் அவிர்சடையார் - வேறோர்**

**படங்குலவு நாகமுமிழ் பண்டமரர் சூழ்ந்த**

**தடங்கடல்நஞ் சுண்டார் தமக்கு**

**விளக்கம்**

இடபக் காளையை அல்லாமல் எம் பெருமானுக்கு வேறு வாகம் இல்லையோ? கங்கையாறு முழுமையும் பாய்கின்ற ஒளியுடைய சடையை உடையவர்க்கு அதுவும் இன்றி பாம்பு உலவுகின்றது. முன்பு தேவர்கள் பொருட்டு பெரிய கடலில் தோன்றிய நஞ்சை உண்டவருக்கு இவை தாம் கிடைத்தனவோ.

**பாடல்: 19**

**தமக்கென்றும் இன்பணி செய்திருப் பேமுக்குத் தாம்ஒருநாள்**

**எமக்கொன்று சொன்னால் அருளுங்கொ லாமிணை யாதுமின்றிச்**

**சுமக்கின்ற பிள்ளைவெள்ளேறொப்ப தொன்றுதொண் டைக்கனிவாய்**

**உமைக்கென்று தேடிப் பெறாதுட னேகொண்ட உத்தமரே**

**விளக்கம்**

சிவபிரானாகிய தமக்கு அடியவர்களாய் இருக்கின்ற எங்களுக்கு என்று கொடுத்தருள வேண்டுமென்றால் கேட்டால் அருளுவாரா? ஒப்பில்லாத வெள்ளிய இடபக் காளைப் போன்ற ஒன்றை கோவைக் கனியைப் போன்ற சிவந்த வாயையுடைய உமைக்கென்று தேடிப் பெறாமல் ஏற்றுக் கொண்ட உத்தமரே.

**பாடல்: 20**

**உத்தமராய் வாழ்வார் உலந்தக்கால் உற்றார்கள்**

**செத்த மரம்அடுக்கித் தீயாமுன் - உத்தமனாம்**

**நீளாழி நஞ்சுண்ட நெய்யாடி தன்திறமே**

**கேளாழி நெஞ்சே கிளர்ந்து**

**விளக்கம்**

எல்லாச் செயல்களாலும் சிறப்பாக வாழ்ந்திருந்தவர்களும் இறந்து போனால் உரியவர்கள் காய்ந்த மரம் கொண்டு சுடுவதற்கு முன்பு உயர்ந்தவனாய் பெரிய கடலில் வெளிப்பட்ட விஷத்தைப் பருகின நெய் முழுக்கு ஆடும் இறைவனது அன்பினாற் பொலிந்து நெஞ்சமே கேட்பாயாக அதன் கண்ணே ஆழ்வாயாக.

**திருநாவுக்கரசர்**

**பொது திருஅங்கமாலை**

இயற்பெயர்: மருள்நீக்கியார், பெற்றோர்: புகழனார், மாதினியார் ஊர்: தென்னாற்காடு மாவட்டம ் திருவாமூர், சகோதரி: திலகவதி, வாழ்ந்த காலம்: 81 ஆண்டுகள், மார்க்கம்: சரியை என்னும் தாச மார்க்கம், நெறி: தொண்டு நெறி, ஆட்கொள்ளப்பட்ட இடம்: திருவதிகை, இறைவனடி சேர்ந்த இடம்: திருப்புகலூர், இவரின் தமிழ்: கெஞ்சு தமிழ்

**படைப்புகள்:**

இவர் அளித்தது 4,5,6 ஆம் திருமுறை 4ஆம் திருமுறை - திருநேரிசை, 5ஆம் திருமுறை - திருக்குறுந்தொகை, 6ஆம் திருமுறை - திருந்தாண்டகம்

**வேறு பெயர்கள்:**

மருள்நீக்கியார் (இயற் பெயர்), தருமசேனர்(சமண சமயத்தில் இருந்த பொழுது), அப்பர்(ஞானசம்பந்தர்), வாகீசர், தாண்டகவேந்தர், ஆளுடைய அரசு, திருநாவுக்கரசர் (இறைவன் அளித்த பெயர்), சைவஉலகின்செஞ்ஞாயிறு

**செய்த அற்புதங்கள்:**

''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்னும் கொள்கையில் நின்று உழவாரப் பணி மேற்கொண்டார். ''மகேந்திரவர்மப் பல்லவனை'' சைவராக்கினார் திருமறைக் காட்டில ̇பாடியே கதவை திறக்கச் செய்தார். பாம்பு தீண்டி இறந்த அப்பூதியடிகளின் மகனை உயிர் பெற்று எழச் செய்தார். திருவையாற்றில் மூழ்கி எழுந்து, கயிலாயக் காட்சியை கண்டார். மகேந்திரவர்மப ̇பல்லவன் இவரை கல்லில் கட்டி கடலில் வீசிய போதும், ''கடலில் பாய்ச்சினும் நல்துணை ஆவது நமச்சிவாயவே'' எனப் பாடி கடலில் கல்லுடன் மிதந்து கரை சேர்ந்தார்.

**சிறப்பு**

சிவபெருமானே இவரை ''நாவுக்கரசர்'' எனப் பெயர் இட்டு அழைத்தார். ''உழவாரப்படை'' கொண்டு கோயில் தோறும் உழவாரப்பணி (புல் செதுக்கி சுத்தம் செய்தல்) மேற்கொண்டார். திருஞானசம்பந்தரை தன் தோலில் சுமந்து பல தலங்கள் சென்றுள்ளார். ''என் கடன் பணி செய்து கிடபதே'' என்னும் கொள்கையில் நின்று உழவாரப்பணி மேற்கொண்டார் இறைவனை கணவனாகவும், ஆன்மாவை மனைவியாகவும் உருவகித்து பாடியவர்.

இவர் சமண சமயத்தில் இருந்து தன் சகோதரியின் மூலம் சைவசமயத்திற்குமாறினார். இவர் சமண சமயத்தில் இருந்த போது இவரின் பெயர் ஸ்ரீ தருமசேனர் இவர் 4900 பதிகங்கள் பாடியதாக கூறப்படிகிறது. ஆனால் இன்று கிடைப்பதோ313 பதிகங்கள் மட்டுமே சங்கம் என்னும் வார்த்தை முதன் முதலில் இவரது திருப்பத்தூர்த் தேவாரத்தில், ‘‘நன் பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனகக்கிழி தருமிக்கருளினோன் காண்’’ என்ற பாடலில் வருகிறது.

கருவில் இருந்த மக்களின் உயிர்க்கு, நல்ல உடல் தந்தவர் இறைவர்! “முடி“ முதலாக ”அடி” ஈறாக உறுப்புக்கள் (அங்கங்கள்) பலவும் தந்தவர், அவர்!. அவரளித்த உறுப்புக்களைக் கொண்டு அவரைப் பணிந்து போற்றுவதே நாம் செய்ய வேண்டிய நன்றிக் கடன்!. அதனை இவ்வங்கமாலையில் கூறுகிறார், நாவரசர்!

**திருச்சிற்றம்பலம்**

**பாடல்: 82**

**தலையே நீவணங்காய் -தலை**

**மாலை தலைக்கணிந்து**

**தலையா லேபலி தேருந் தலைவனைத்**

**தலையே நீவணங்காய்.**

**விளக்கம்**

”தலைக்கணியும் “இண்டைமாலையை“ அணிந்து, கையில் மண்டையோடு கொண்டு உணவேற்கும் தலைவராம் சிவனாரைத் ‘‘தலையே!”. நீ வணங்கி, நலம் பெற்றிடு!

**பாடல்: 83**

**கண்காள் காண்மின்களோ - கடல்**

**நஞ்சுண்ட கண்டன்றன்னை**

**எண்டோள் வீசிநின் றாடும் பிரான்றன்னைக்**

**கண்காள் காண்மின்களோ.**

**விளக்கம்**

"ஓடிவந்து வேண்டியவரைக் காக்க, பாற்கடலில் சீறி எழுந்த ஆலகால நஞ்சுண்டு, நீலமணிமிடறு பெற்றவரைத் தோள்கள் எட்டும் திசையெட்டும் வீசி ஆடும் பெருமானாரைக் "கண்களே!" நீவிர் கண்குளிரக் கண்டு, பணியுங்கள்!"

**பாடல்: 84**

**செவிகாள் கேண்மின்களோ - சிவன்**

**எம்மிறை செம்பவள**

**எரிபோல் மேனிப்பி ரான்றிறம் எப்போதுஞ்**

**செவிகள் கேண்மின்களோ.**

**விளக்கம்**

"செம்பவளம் போன்றும், செந்தீயைப் போன்றும் திகழும் செம்மேனிப் பெருமானாரின் திறங்கூறும் போற்றிசைப் பாக்களைச் "செவிகளே!" நீங்கள், கேட்டுப் பயன்பெறுவீர்!"

**பாடல்: 85**

**மூக்கே நீமுரலாய் - முது**

**காடுறை முக்கணனை**

**வாக்கே நோக்கிய மங்கை மணாளனை**

**மூக்கே நீமுரலாய்.**

**விளக்கம்**

"நன்காட்டில் உறையும் முக்கண் இறைவனை, அவரின் மொழிகளையே நோக்கியவாறிருக்கும் உமைமங்கையின் மணாளரைப் போற்றிடும் மூச்சுக்காற்றையே மூக்கே!நீ வெளிப்படுத்துக!""

**பாடல்: 86**

**வாயே வாழ்த்துக்கண்டாய் - மத**

**யானை யுரிபோர்த்துப்**

**பேய்வாழ் காட்டகத் தாடும் பிரான்றன்னை**

**வாயே வாழ்த்துகண்டாய்.**

**விளக்கம்**

"தாக்க வந்த கரியின் உரிபோர்த்துப் பேய்க்கணம் ஆடும் நன்காட்டில் ஆடும் பெருமானாரை "வாயே!" நீ வாழ்த்துக"

**பாடல்: 87**

**நெஞ்சே நீநினையாய் - நிமிர்**

**புன்சடை நின்மலனை மஞ்சாடும்மலை**

**மங்கை மணாளனை நெஞ்சே நீநினையாய்.**

**விளக்கம்**

விரிந்து பரந்தாடும் செஞ்சடை கொண்ட மாசிலாமணியும், மலைமகளின் மணாளரும், ஆகிய சிவனாரை ”

நெஞ்சே!” நீ நினைத்துப் போற்றுக!““

**பாடல்: 88**

**கைகாள் கூப்பித்தொழீர் - கடி**

**மாமலர் தூவிநின்று**

**பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்**

**கைகள் கூப்பித்தொழீர்,**

**விளக்கம்**

”படங்கொண்ட பாம்பினை இடுப்பினில் இறுக்கியவரை மணக்கும் மலர்கள் பறித்து வந்து தூவிப் போற்றிக் ”கைகளே!” கூப்பித் தொழுதிடுக.

**பாடல்: 89**

**ஆக்கை யாற்பயனென் - அரன்**

**கோயில் வலம்வந்து**

**பூக்கை யாலட்டிப் போற்றி யென்னாதவிவ்**

**வாக்கை யாற்பயனென்.**

**விளக்கம்**

”சிவனாரின் கோவிலை வலமாகச் சுற்றி வந்தும் கைகளால் பூமாலைகள் தொடுத்தணிந்தும், “சிவா போற்றி!“ என்று கூறாத “இவ்வுடம்பினால்“ என்ன பயன் கிட்டும்? எப்பயனும் கிட்டாது!”

**பாடல்: 90**

**கால்க ளாற்பயனென் - கறைக்**

**கண்டனுறைகோயில்**

**கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்**

**கால்க ளாற்பயனென்.**

**விளக்கம்**

நீலமணி மிடற்றுச் சிவனுறையும் “திருக்கோகரணம்“ என்னும் பதிசென்று, கோலக் கோபுரம் கண்டும், கோவிலுறை சிவனாரைக் கண்டும் வர ”நடக்காத” ”கால்களால்” பயன் ஏதும் உண்டோ? எனில், இல்லையாம்!”

**பாடல்: 91**

**உற்றா ராருளரோ - உயிர்**

**கொண்டு போம்பொழுது**

**குற்றாலத்துறை கூத்தனல் லால்நமக்**

**குற்றார் ஆருளரோ.**

**விளக்கம்**

நம் உயிரைக் கொண்டு போகும் பொழுதில், ”திருக்குற்றாலத்தில்” ஓவிய மன்றத்தில் (ஸ்ரீசித்திரசபையில்) ஆடும் கூத்தப் எவருமில்லை! பெருமானாரையன்றி நமக்கு உற்றார்

**பாடல்: 92**

**இறுமாந் திருப்பன்கொலோ - ஈசன்**

**பல்கணத் தெண்ணப்பட்டுச்**

**சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்றங்**

**கிறுமாந் திருப்பன்கொலோ.**

**விளக்கம்**

சிவனார் படைத்தளித்த உடலில், அடியிலிருந்து முடிவரை உள்ள உறுப்புக்கள் கொண்டு, வணங்கிப் போற்றுதல் புகழ்ப்பாடல் கேட்டல் காண்டல் வலம் வரல் மலர்கள் தூவுதல் கை கூப்புதல் நினைத்தல் இன்னபிற பணிகள் செய்து பணிதல் என்பவற்றைக் கைக் கொண்டால் அடியேனும் சிவகணத்தவரோடு வாழும் வாய்ப்புக் கிட்டும்! மானேந்து கையராம் சிவனாரின் திருவடியின்கீழ் இருந்திடும் பெரும் பேறும் வாய்க்கும்! வாய்க்கவே, அவர் சேவடிக் கீழிருந்து செம்மாந்து, செம்பணி செய்வேன்!

**பாடல்: 93**

**தேடிக் கண்டுகொண்டேன் - திரு**

**மாலொடு நான்முகனுந்**

**தேடித் தேடொணாத் தேவனை என்னுளே**

**தேடிக் கண்டுகொண்டேன்.**

**விளக்கம்**

““மாலும், மலரவனும் தம்முள் பெரியவர் யார் என அறிய சிவனாரின் அடியையும், முடியையும் ஆணவத்துடன் தேடினர்! அவ்வாறு அவர்கள் தேடியும், தேடிக் காணொணாத முக்கண்தேவரை, நான் என் உளத்துள்ளே தேடிக் கண்டு கொண்டேன்!”

**திருஞானசம்பந்தர் - முதல் திருமுறை**

**திருவையாற்றுப் பதிகம்**

தேவார மூவருள் திருஞானசம்பந்தரே முதலாமவர். இவர் சீர்காழிப் பதியில் சிவபாத இருதயர் என்பவருக்கும் பகவதி அம்மையாருக்கும் திருமகனாக அவதரித்தவர். அந்தணர் குலத்தில் கவுணியர் கோத்திரத்தில் உதித்தவர். மூன்றாவது வயதில் உமையம்மையால் ஞானப்பால் ஊட்டப்பெற்று ஞானசம்பந்தரானவர். அக்காலை இவர் பாடிய பதிகமே ‘தோடுடைய செவியன்’ என்று தொடங்குவது. இவர் அழுகையால் வேதநெறி தழைத்தது. சைவத்துறைகள் விளக்கமுற்றன.

அடியார் மரபு உய்திபெற்றது. இவர் வாழ்வில் சிவன் அருளால் பல அற்புதங்கள் நிகழ்ந்தன. இறந்த வணிகனைச் ‘சடையாய்’ என்று தொடங்கும் பதிகம் பாடி உயிர் பெறச் செய்தார். திருவீழிமிழலையில் படிக்காசு பெற்றார். திருமறைக்காட்டில் வேதங்களால் பூசித்து அடைத்திருந்த கதவைத் திருநாவுக்கரசர் திறப்பித்தார். அம் மறைக்கதவை மீண்டும் மூடச் செய்தார் திருஞானசம்பந்தர்.

கோள்களால் சிவன் அடியார்களுக்குத் தீங்குவாராது என்று ‘வேயுறு தோளிபங்கன்’ என்ற பதிகம் பாடி நம்பிக்கை ஊட்டினார். மதுரையில் அனல் புனல் (வாதிடுவோர் தம் கொள்கைகளை ஒலையில் எழுதி நீரிலும் நெருப்பிலும் இடுவார்கள். அவற்றுள் அழியாமல் நிற்கும் ஒலைக்குரிய சமயம் உயர்ந்தது என ஏற்கப்படும்). வாதங்கள் செய்து சமணர்களை வெற்றிகொண்டார். ‘மட்டிட்ட புன்னையம் கானல்’ என்ற பதிகம் பாடி இறந்த பூம்பாவை என்ற பெண்ணின் எலும்பை மீண்டும் பெண் உருவம் கொள்ளச் செய்தார். ஆச்சாள்புரத்தில் சிவசோதியில் கலந்து மறைந்தார். இவர் மறைந்த நாள் ஒரு வைகாசி மூலம் என்பர். இவர் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

திருஞானசம்பந்தர் அருளிய பதிகங்களுள் இன்று நமக்குக் கிடைத்துள்ளவை 384 பதிகங்கள். பாடல் தொகை 4158. இவற்றுள் முதல் திருமுறையுள் 136 பதிகங்களும் 1469 பாடல்களும் இடம் பெற்றுள்ளன. 96 தலங்கள் இத் திருமுறையில் தேவாரப் பாடல் பெற்றுச் சிறந்துள்ளன. 1. நட்டபாடை (22), 2 தக்கராகம் (24)

3.பழந்தக்கராகம்(8) 4. தக்கேசி(12) 5. குறிஞ்சி (24) 6. வியாழக்குறிஞ்சி (25) 7. மேகராகக் குறிஞ்சி (7) ஆகிய 7 பண்களும், 'யாழ்மூரி'என்ற ஒரு பதிகமும் முதல் திருமுறையுள் இடம் பெற்றுள்ளன.

**பாடல் எண் : 1**

**புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவு அழிந்திட்டு ஐம் மேலுந்தி**

**அலமந்த போதாக அஞ்சேல் என்று அருள் செய்வான் அமரும் கோயில்**

**வலம் வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழை என்று அஞ்சி**

**சிலமந்தி அலமந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறே.**

**விளக்கம்**

ஐம்புலன்களும் தத்தம் பொறிகளை விட்டு வழிமாறி அறிவழிந்து, கபம் மேற்பட மனம் சுழன்று வருந்தும் இறுதிக் காலத்து, ”அஞ்சேல்” என்றுரைத்து அருள் செய்பவனாகிய சிவபிரான் அமரும் கோயிலை உடையது, நடனக் கலையில் வெற்றியுற்ற பெண்கள் நடனம் ஆட, அவ்வாடலுக்கேற்ற கூத்தொலிகளை எழுப்பும் முழவுகள் அதிர, அவற்றைக் கண்டு அஞ்சிய சிலமந்திகள் வானத்தில் கேட்கும் இடியோசை என்றஞ்சி மனம் சுழன்று மரங்களில் ஏறி மேகங்களைப் பார்க்கும் திருவையாறாகும்.

**பாடல் எண் : 2**

**விடலேறு படநாகம் அரைக்கசைத்து வெற்பரையன் பாவையோடும்**

**அடலேறு ஒன்று அது ஏறி அஞ்சொலீர் பலி என்னும் அடிகள் கோயில்**

**கடலேறித் திரைமோதிக் காவிரியின் உடன் வந்து கங்குல் வைகி**

**திடலேறிச் சுரிசங்கம் செழு முத்து அங்கு ஈன்று அலைக்கும்**

**திருவையாறே.**

**விளக்கம்**

கொல்லுதலாகிய குற்றம் பொருந்திய படத்தினையுடைய நாகத்தை இடையிற்கட்டி, மலையரையன் மகளாகிய பார்வதி தேவியோடு வலிமை பொருந்திய விடையேற்றின் மேல் ஏறி, அழகிய சொற்களைப் பேசும் மகளிரே! பிச்சையிடுங்கள் என்று கேட்டுச் சென்ற சிவபிரானது கோயிலையுடையது, வளைந்த மூக்கினையுடைய கடற் சங்குகள் கடலினின்றும் அலை வழியாக அதில் பாயும் காவிரியோடு வந்து இரவின்கண் திடலில் ஏறித்தங்கிச் செழுமையான முத்துக்களை ஈன்று சஞ்சரிக்கும் திருவையாறாகும்.

**பாடல் எண் : 3**

**கங்காளர் கயிலாய மலையாளர் கானப்பேராளர் மங்கை**

**பங்காளர் திரிசூலப் படையாளர் விடையாளர் பயிலும் கோயில்**

**கொங்காளப் பொழினுழைந்து கூர்வாயால் இறகு உலர்த்தி கூதல் நீங்கி**

**செங்கால் நல் வெண்குருகு பைங்கானல் இரை தேரும் திருவையாறே.**

**விளக்கம்**

சிறந்த பிரமன், திருமால் ஆகியோரின் முழு எலும்புக்கூட்டை அணிந்தவரும், கயிலாய மலையில் உறைபவரும், கானப்பேர் என்னும் தலத்தில் எழுந்தருளியவரும், மங்கை பங்கரும் முத்தலைச் சூலப்படை ஏந்தியவரும், விடை ஊர்தியை உடையவரும் ஆகிய சிவபிரானார் எழுந்தருளிய கோயிலை உடையது, சிவந்த கால்களையுடைய வெண்ணிறக் குருகுகள் தேன் நிறைந்த சோலைகளில் நுழைந்து கூரிய தம் அலகுகளால் தம் இறகுகளைக் கோதிக் குளிர் நீங்கிப் பசுமையான சோலைகளில் தமக்கு வேண்டும் இரைகளைத் தேடும் திருவையாறாகும்.

பாடல் எண் : 4

**ஊன் பாயும் உடைதலைக் கொண்டு ஊர் ஊரின் பலிக்கு உழல்வார் உமையாள் பங்கர்**

**தான் பாயும் விடையேறும் சங்கரனார் தழலுருவர் தங்கும் கோயில்**

**மான் பாய வயலருகே மரமேறி மந்தி பாய் மடுக்கள் தோறும்**

**தேன் பாய மீன்பாயச் செழுங்கமலமொட்டு அலரும் திருவையாறே.**

விளக்கம்

புலால் பொருந்தியதாய், முடை நாற்றமுடைத்தாய் உள்ள தலையோட்டைக் கையில் ஏந்தி, ஊர்கள்தோறும் பலியேற்று உழல்பவரும், உமை பாகரும், பாய்ந்து செல்லும் விடையேற்றை உடையவரும், நன்மைகளைச் செய்வதால் சங்கரன் என்ற பெயரை உடையவரும், தழல் உருவினருமாகிய சிவபிரான் எழுந்தருளிய கோயிலையுடையது, மான் துள்ளித் திரிய, வயலருகே உள்ள மரங்களில் ஏறி மந்திகள் பாய்வதால் மடுக்களில் தேன்பாய, அதனால் மீன்கள் துள்ளவும் செழுமையான தாமரை மொட்டுக்கள் அலரவும், விளங்குவதாகிய திருவையாறாகும்.

பாடல் எண் : 5

**நீரோடு கூவிளமும் நிலாமதியும் வெள்ளெருக்கும் நிறைந்த கொன்றைத்**

**தாரோடு தண்கரந்தை சடைக்கு அணிந்த தத்துவனார் தங்கும் கோயில்**

**காரோடி விசும்பளந்து கடிநாறும் பொழிலணைந்த கமழ் தார் வீதித்**

**தேரோடும் அரங்கேறி சேயிழையார் நடம் பயிலும் திருவையாறே.**

விளக்கம்

கங்கை நதி, வில்வம், பிறைமதி, வெள்ளெருக்கு, கொன்றை மலர் நிறைந்த மாலை, குளிர்ந்த கரந்தை ஆகியவற்றைச் சடையின்கண் அணிந்த தத்துவனாகிய சிவபிரான் தங்கியுள்ள கோயிலையுடையது, மேக மண்டலம் வரை உயர்ந்து சென்று வானத்தை அளந்து மணம் பரப்பும் பொழில்கள் சூழ்ந்ததும், மணம் வீசும் வீடுகளை உடைய தேரோடும் வீதிகளில் அரங்குகளில் ஏறி அணிகலன்கள் புனைந்த இளம் பெண்கள் நடனம் ஆடுவதுமாகிய திருவையாறாகும்.

**பாடல் எண் : 6**

**வேந்தாகி விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் நெறிகாட்டும் விகிர்தனாகிப்**

**பூந்தாம நறுங்கொன்றை சடைக்கு அணிந்த புண்ணியனார் நண்ணும் கோயில்**

**காந்தாரம் இசை அமைத்துக் காரிகையார் பண்பாடக் கவினார் வீதித்**

**தேம் தாம் என்று அரங்கேறிச் சேயிழையார் நடமாடும் திருவையாறே.**

**விளக்கம்**

காட்டும் வள்ளலாய், மணங்கமழும் கொன்றை மாலையைச் சடையின்மிசை அணிந்தவனாய் புண்ணிய வடிவினனாய் விளங்கும் சிவபிரான் எழுந்தருளிய கோயிலையுடையது, மகளிர் காந்தாரப் பண்ணமைத்து இசைபாட அழகிய வீதிகளில் அமைந்த அரங்கங்களில் ஏறி அணிகலன்கள் பூண்ட இளம் பெண்கள் தேம், தாம் என்ற ஒலிக் குறிப்போடு நடனம் ஆடும் திருவையாறாகும்.

**பாடல் எண் : 7**

**நின்றுலா நெடுவிசும்பில் நெருக்கி வரும் புரம் மூன்றும் நீள்வாய் அம்பு**

**சென்றுலாம் படி தொட்ட சிலையாளி மலையாளி சேரும் கோயில்**

**குன்றெலாம் குயில் கூவக் கொழும்பிரச மலர்பாய்ந்து வாசம் மல்கு**

**தென்றலார் அடிவருடச் செழுங்கரும்பு கண்வளரும் திருவையாறே.**

**விளக்கம்**

நீண்ட வானவெளியில் நின்று உலவி, தேவர்கள் வாழ்விடங்களை அழித்து வந்த முப்புரங்களையும், நீண்ட கூரிய அம்பு சென்று உலவும் படி கணை தொடுத்த வில்லாளியும், கயிலை மலை ஆளியுமாகிய சிவபிரான் சேர்ந்துறையும் கோயிலையுடையது, சிறுமலைகளில் குயில்கள் கூவவும், செழுமையான தேன் நிறைந்த மலர்களைத் தீண்டி மணம் மிகுந்து வருவதாகிய தென்றல் காற்று அடிவருடவும், அவற்றால் செழுமையான கரும்புகள் கண் வளரும் வளமுடைய திருவையாறாகும்.

**பாடல் எண் : 8**

**அஞ்சாதே கயிலாயமலை எடுத்த அரக்கர்கோன் தலைகள் பத்தும்**

**மஞ்சாடு தோள் நெரிய அடர்த்து அவனுக்கு அருள்புரிந்த மைந்தர் கோயில்**

**இஞ்சாயல் இளந்தெங்கின் பழம் வீழ இளமேதி இரிந்து அங்கு ஓடி**

**செஞ்சாலிக் கதிருழக்கிச் செழுங்கமல வயல் படியும் திருவையாறே.**

**விளக்கம்:**

அஞ்சாமல் கயிலை மலையை எடுத்த அரக்கர் தலைவனாகிய இராவணனின் தலைகள் பத்தையும் வலிமை பொருந்திய அவன் தோள்களோடு நெரியுமாறு அடர்த்துப் பின் அவனுக்கு அருள் புரிந்த சிவபிரான் எழுந்தருளிய கோயிலை

உடையது. இனிய தோற்றத்தையுடைய இளந்தென்னையில் காய்த்த நெற்று விழ, அதனைக் கண்டு அஞ்சிய எருமை இளங்கன்று அஞ்சி ஓடி செந்நெற் கதிர்களைக் காலால் மிதித்துச் செழுமையான தாமரைகள் களையாகப் பூத்த வயல்களில் படியும் திருவையாறாகும்.

**பாடல் எண் : 9**

**மேலோடி விசும்பணவி வியனிலத்தை மிக அகழ்ந்து மிக்கு நாடும்**

**மாலோடு நான்முகனும் அறியாத வகை நின்றான் மன்னும் கோயில்**

**கோலோடக் கோல்வளையார் கூத்தாட குவிமுலையார் முகத்தில் நின்று**

**சேலோடச் சிலையாடச் சேயிழையார் நடமாடுந் திருவையாறே.**

**விளக்கம்**

அன்னமாய் மேலே பறந்து சென்று வானத்தைக் கலந்தும், அகன்ற நிலத்தை ஆழமாக அகழ்ந்தும் முயற்சியோடு தேடிய நான்முகன், திருமால் ஆகியோர் அறிய முடியாதவாறு ஓங்கி நின்ற சிவபிரான் உறையும் கோயிலையுடையது, கூத்தர்கள் கையில் வைத்து ஆட்டும் அபிநயக் கோலுடன் திரண்ட வளையல்களை அணிந்த மகளிர் கூத்தாட, திரண்ட தனங்களையுடைய அச்சேயிழையார் முகத்தில் கண்களாகிய சேல்மீன்கள் பிறழவும், வில் போன்ற புருவங்கள் மேலும் கீழும் செல்லவும், நடனமாடும் திருவையாறாகும்.

**பாடல் எண் : 10**

**குண்டாடு குற்றுடுக்கைச் சமணரொடு சாக்கியரும் குணமொன்றில்லா**

**மிண்டாடும் மிண்டர் உரை கேளாதே ஆள் ஆமின் மேவித் தொண்டீர்**

**எண்டோளர் முக்கண்ணர் எம் ஈசர் இறைவர் இனிது அமரும் கோயில்**

**செண்டாடு புனல் பொன்னிச் செழுமணிகள் வந்து அலைக்கும்**
**திருவையாறே.**

**விளக்கம்**

இழிசெயல்களில் ஈடுபடுவோராய்ச் சிறிய ஆடையினராய்த் திரியும் சமணர்களும், சாக்கியர்களும் கூறும் நன்மை பயவாத சொற்களையும், வஞ்சனை பொருந்திய உரைகளையும், கேளாமல், தொண்டர்களே! நீவிர் சிவபிரானை அடைந்து அவருக்கு ஆட்படுவீர்களாக. எட்டுத் தோள்களையும், முக்குணங்களையும் உடைய எம் ஈசனாகிய இறைவன் இனிதாக எழுந்தருளியிருக்கும் கோயிலையுடையது, பூக்களைச் செண்டுகள் போல் உருட்டி ஆட்டிக் கொண்டு வரும் நீர் நிறைந்த காவிரி செழுமையான மணிகளைக் கரையில் கொண்டு வந்து சேர்க்கும் திருவையாறு என்னும் தலமாகும்.

**பாடல் எண் : 11**

**அன்னமலி பொழில் புடை சூழ் ஐயாற்று எம்பெருமானை அந்தண் காழி**
**மன்னிய சீர் மறை நாவன் வளர் ஞானசம்பந்தன் மருவு பாடல்**
**இன்னிசையால் இவைபத்தும் இசையுங்கால் ஈசன் அடி ஏத்துவார்கள்**
**தன்னிசையோடு அமருலகில் தவநெறி சென்று எய்துவார் தாழாதன்றே.**

**விளக்கம்**

அன்னப் பறவைகள் நிறைந்த பொழில்கள் புடை சூழ்ந்து விளங்கும் திருவையாற்றுப் பெருமானை, அழகிய தண்மையான சீகாழிப்பதியில் வாழும் சிறப்பு மிக்க, வேதங்கள் பயிலும் நாவினன் ஆகிய புகழ் வளரும் ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய பாடல்களாகிய இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தையும் ஓதி, ஈசனடியை ஏத்துபவர்கள் புகழோடு தவநெறியின் பயனாக விளங்கும் அமரர் உலகத்தைத் தாழாமல் பெறுவர்.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | திருஞானசம்பந்தர் பற்றி குறிப்பு வரைக. | K4 | CO5 | PO4 |
| 2 | காரைக்கால் அம்மையாரின் பக்தி சிறப்பை விவரி. | K3 | CO2 | PO2 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | திருவிரட்டைமணிமாலையில் நீவிர் அறிநத செய்தியினைக் கூறுக. | K2 | CO2 | PO1 |
| 4 | திருநாவுக்கரசரைப் பற்றி விவரி. | K5 | CO3 | PO2 |
| 5 | திருஅங்கமாலையில் திருநாவுக்கரசர் இறைவனை எவ்வாறு போற்றுகிறார் என்று | K4 | CO3 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | திருவிரட்டை மணிமாலையில் இடம்பெறும் நிகழ்வினை பற்றி விவரிக்க. | K2 | CO1 | PO4 |
| 2 | காரைக்கால் அமையாரின் பதினொராக் திருமுறைப் பற்றி விவரி | K4 | CO4 | PO5 |
| 3 | திருஅங்கமாலை பதிகத்தில் சொல்லப்படும் கருதிதினை வெளிப்படுத்துக. | k5 | CO5 | PO2 |
| 4 | தலையே நீவணங்காய் எனத்தொடங்கும் பதிகத்தில் சொல்லப்படும் செய்தினை புலப்படுத்துக. | K3 | CO4 | PO1 |
| 5 | திருவையாற்றுப் பதிகத்தில் கூறப்படும் கருத்துக்களை விவரி | K2 | CO3 | PO3 |

## அலகு - 2

## சுந்தரர் - ஏழாம் திருமுறை

## திருவெண்ணெய்நல்லூர்

## (நடுநாட்டுப்பதி)

திருமுனைப்பாடி நாட்டுத் திருநாவலூரில் ஆதி சைவ குலத்தில் சடையனாருக்கும், இசைஞானியாருக்கும் கி.பி 694இல் மகனாகப் பிறந்தார் எனக் கூறப்படுகிறது. இவர் நம்பி ஆரூரர் என்றும் வழங்கப்படுகிறார். இவரை அந்நாட்டு அரசன் நரசிங்க முனையரையன் என்பவர் தத்தெடுத்துக் கொண்டார். பல கலைகளில் தேர்ச்சி பெற்று திருவெண்ணெய் நல்லூரில் வளர்ந்து வந்தார்.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் போன்று சுந்தரர் வாழ்க்கையிலும் பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன.

1. திருவாரூரில் - இறைவன் திருவருளால் நெல் மலையும் அவற்றை பரவையார் வீட்டிற்கு எடுத்துச் செல்வதற்குரிய ஆட்களையும் தருவித்தமை.

2. திருக்கருகாவூரில்- வெயிலின் கொடுமையைத் தணித்தற் பொருட்டு ஒரு குளிர்ந்த பந்தல் உருவானது. சுந்தரருக்கு உணவும் தண்ணீரும் சிவபெருமானே அந்தணர் வடிவம் கொண்டு கொடுத்தமை.

3. திருப்புகலூரில் - தலைக்கு அணையாக வைக்கப்பட்டிருந்த செங்கற்கள் எல்லாம் இறைவன் அருளால் பொன் கட்டிகளாக மாறியமை.

4. திரு ஆரூரில் - சிவபெருமான் தம்முடைய கண்களைப் பறித்த தோடல்லாமல், தமக்கு மற்றொரு கண்ணைத் தருவதைத் தாமதப்படுத்துகின்றாரே என்று தோழமை உணர்வுடன் இறைவனை ‘‘வாழ்ந்து போதிரே’’ என்று கடிந்துக்

கொள்கிறார். இறுதிப் பாடலாக, ‘‘கார் ஊர் கண்டத்து’’ எனத் தொடங்கும் பாடலைப் பாடிய அளவில் இறைவன் சுந்தரருக்கு மற்றொரு கண்ணையும் தந்து அருளினார்.

சுந்தரர் கோட்புலி நாயனாரின் ஊராகிய திருநாட்டியத்தான் குடி என்ற ஊரை நெருங்கிய போது, கோட்புலி நாயனார் சுந்தரரை எதிர் கொண்டழைத்து அவரைத் தம் வீட்டிற்கு அழைத்துச் சென்று அமுது படைத்தார். சிங்கடியார், வனப்பகையார் என்னும் தம் இரு புதல்வியரை அழைத்துச் சுந்தரரின் திருவடிகளைத் தொழும்படி கூறினார். சுந்தரர் அவர்கள் இருவரும் தமக்கு நற்புதல்வியர் என்று கூறி தமது மடி மீது வைத்துத் தூய அன்புள்ளத்தோடு அவர்களை உச்சி முகர்ந்து அவர்களுக்கு வேண்டுவனவற்றை அளித்தார். தம் பாடல்களிலும் சுந்தரர் தம்மை, ‘‘சிங்கடி அப்பன்’’ என்றும் ‘‘வனப்பகை அவள் அப்பன்’’ என்றும் குறிப்பிட்டுள்ளார்.

திருவாரூரில் பரவையாருக்கும் சுந்தரருக்கும் ஏற்பட்ட ஊடலின் போது இறைவனே பரவையார் வீட்டிற்குத் தூது சென்று சமாதானம் செய்து வைத்ததாகக் கூறப்படுகிறது. ஒரு பெண்ணிற்காக, சுந்தரர் இறைவனை தூது அனுப்பினார் என்று, திருப்பெருமங்கலம் ஏயர்கோன் என்னும் கலிக்காம நாயனார் வெகுண்டெழுந்தார். கலிக்காமரின் சினத்தைத் தணிக்க, இறைவன் கலிக்காமருக்குச் சூலை நோயைத் தந்தார் என்றும் அதனைத் தீர்க்கச் சென்ற சுந்தரரைக் காண விரும்பாத கலிக்காமர் தம் வயிற்றைக் கிழித்து உயிர் நீத்தார் என்றும் கூறப்படுகிறது. அதைக் கண்ட சுந்தரர் துடித்துப் போய் தானும் உயிர் துறக்க முற்பட்ட போது சிவபெருமான் தடுத்து, கலிக்காமரை மீண்டும் உயிர் பெறச் செய்தார் என்றும் பிறகு சுந்தரரும் கலிக்காமரும் நண்பர்களாயினர் என்றும் சொல்லப்படுகிறது.

**கயிலை அடைதல்**

சுந்தரர் தம்முடைய நண்பராகிய சேர மன்னரின் வேண்டுகோளுக்கிணங்க வஞ்சி மாநகர் அடைந்து அங்கு சில நாட்கள் தங்கி இறைவனை வணங்கி இருந்தார். ஒரு நாள் சேர மன்னர் நீராட சென்றிருந்தபோது சுந்தரர் திருக்கயிலைக்கு மீளும் நாள்

வந்ததாகக் கண்டு திருவஞ்சைக்களத்துக் கோயிலைப் பணிந்து இறைவன் திருவடிகளைப் போற்றி இவ்வுலகின் பாச வாழ்க்கையை அறுத்திட வேண்டினார். கயிலைநாதர் வெள்ளானை மீது சுந்தரரை ஏற்றிக் கொண்டு வருமாறு அயன் முதலிய தேவர்க்குக் கட்டளையிட அவ்வாறே அவர்கள் திருவஞ்சைக்களத்துக் கோயிலின் முன் நின்ற நம்பி ஆரூரர்க்கு இறைவனின் கட்டளையை அறிவித்தனர். சுந்தரரும் அதனை ஏற்றுக்கொள்ள விண்ணவர் அவரை வெள்ளை யானை மேலேற்றி ஐவகை நாத மொலிப்ப அழைத்துச் சென்றனர்.

தென்பெண்ணையாற்றின் தென்கரைப்பதி இது. கம்பரைப் போற்றிய, “கடையப்ப வள்ளல்“ வாழ்ந்த பதி. நடுநாட்டுத் திருநாவலூரில், “சடையனார்“-“இசைஞானியார்“ என்பவர்க்கு மகனாகப் பிறந்தவர், “நம்பியாரூரர்“ என்னும் சுந்தரர். திருமுனைப்பாடி நாடாண்ட சிற்றரசர், இம்மகனைக் கண்டு விரும்பிப், பெற்றோர் இசைவுடன் வளர்த்து வந்தார். கல்வியில் ஓங்கிய இவருக்கு, “முந்நூலணி விழா“வைப் பெற்றோர் நடத்தினர். மணப்பருவம் வரவே, புத்தூர்ச் “சடங்கவி“ என்பவர் மகளைப் பேசி, மணம் செய்ய, ஆவன செய்தனர்.

உரிய நாளில் பெற்றோரும் உற்றாரும் சென்றனர், “புத்தூர்“ மணநிகழ்வு தொடங்கும்போது,“முதிய மறையவர் வடிவில்“ ““சிவனார்”, மணப்பந்தலுக்கு வந்தார்!.

“இம்மணமகன் என் அடிமை!“ என்றார். சான்றாக “ஓலை“ காட்டினார். மணமகன் அவ்வோலையைப் பறித்துக் கிழித்துப் போட்டான். வழக்கு, முதியவரின் ஊரான “வெண்ணெய் ” நல்லூர்” அவைக்கு” வந்தது!. அவையோரிடம் “மூலஓலை“ தந்தார், முதியவர். அதைப் படித்ததும் “நீ இவருக்கு அடிமையே!““ என்று தீர்ப்பு வழங்கினர்.

முதியவர், தாம் வாழுமிடம் காட்ட அவ்வூர்க் கோவிலுள் புகுந்தார். புகுந்தனம் ன் தோன்றியவெண்ணெய்ப்பிலுள் புண்ணுதலாரே, தன்முன் தோன்றியவர், என்பதறிந்தார். பணித்தார்!. சிவனாரே எதிரில் தோன்றினார்! அவரைத் தொழுதார்?

அழுதார்! உம்மைப் போற்றிப் பாட விழைகிறேன். தொடங்குவது எப்படி எனக் கூறியருள்வீர்! என வேண்டினார்.

நீ. உம்மூரில் எம்மைப் “பித்தரோ“ என்றாயே, அதையே தொடக்கமாகக் கொண்டு பாடுவாய்! என்றார், சிவனார். உடனே, நம்பி, தந்த “முதற்பா“ இது!

**இறைவர்:** தடுத்தாட்கொண்டபிரான்

**இறைவி:** வேற்கண்நல்லாள்

**திருச்சிற்றம்பலம்**

**பாடல் எண்: 1**

**பித்தாபிறை சூடீபெரு மானே அரு ளாளா**

**எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை**

**வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்**

**அத்தாஉனக் காளாயினி அல்லேன்என லாமே.**

**விளக்கம்**

‘‘பித்தர் போலும் மேனியரே! பிறை சூடியவரே! பெருமா னாரே! அருளாளரே! தென்பெண்ணைத் தென்கரையில், ‘‘அருள் துறை’’ என்னும் கோவிலில் குடிகொண்ட அத்தரே! இனி, எதனாலும் மறவாத என்மனத்துள் உம்மை வைத்துள்ளீர்!. வைத்த நாள் முதலே அடியவன். உம் அடிமையானேன். அப்படியிருக்கையில், அன்று “நான், உம் அடிமையில்லை! ‘‘என வழக்காடியது இழுக்கன்றோ!’’.

**பாடல் எண்: 2**

**நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத் துன்னைப்**

**பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்**

**வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்**

**ஆயாஉனக் காளாயினி அல்லேன்என லாமே.**

**விளக்கம்**

‘‘வேய்களை அடித்துக் கொண்டு ஓடிவரும் தென் பெண்ணைத் தென்கரை “வெண்ணெய்நல்லூர்“ அருள்துறையில், அடியவராகிய பசுக்களைக் காக்கும் ஆயரே! இளமையில் நாயேன், பேயெனத் திரிந்து உம்மை எண்ணாதிருந்து இளைத்தேன்!. நான் இப்பொழுது உம் திருவருளைப் பெற்றவனானேன். உமக்கு ஆட்பட்ட நான், உம் அடிமை இல்லையென்றது. இழுக்கேயன்றோ!”.

**பாடல் எண்: 3**

**மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்**

**பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி**

**மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்**

**அன்னே உனக் காளாயினி அல்லேன்என லாமே.**

**விளக்கம்**

‘‘வயிரங்கள், மணிகள், பொன் என்பவற்றை வாரி வரும் பெண்ணைத் தென்கரை, “வெண்ணெய்நல்லூர்’’, அருள் துறையில் அன்னைபோல் என்னைக் காப்பவரே! முன்னமே நான் உமக்கடிமை! அப்படியிருக்க, நான் உன் அடியவன் அல்லன் என்று வழங்காடியது பொருந்துமா? மன்னவரே! நான் மறவாது உம்மை என் மனத்துள் வைத்துள்ளேன்.”.

**பாடல் எண்: 4**

**முடியேன்இனிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்றம் ஊர்தீ**

**கொடியேன்பல பொய்யே உரைப் பேனைக்குறிக் கொள்நீ**

**செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்**

**அடிகேளுனக் காளாயினி அல்லேன்என லாமே.**

**விளக்கம்**

‘‘அடியுடன் செடிகளை அடித்துவரும் பெண்ணைத் தென்கரை “வெண்ணெய்நல்லூர்’’ அருள்துறையில் உறையும் இறைவரே! ஏறூர்பவரே! அன்றே உமக்கு ஆட்பட்ட நான். அடிமையில்லை என்றது தவறே!. என்னைத் தெளிவித்து ஆட்கொண்டதால், இனி, நான், இங்குப் பிறக்கவும், இறக்கவும், மூப்பெய்தவும் மாட்டேன்!. குறிக்கோள் எதுவுமின்றிப் பொய்யே புகன்ற என்னை, நீவிர் இனிக் குறிக்கொண்டு காத்தருள்வீர்!”.

**பாடல் எண்: 5**

**பாதம்பணி வார்கள்பெறும் பண்டமது பணியாய்**

**ஆதன்பொரு ளானேன்அறி வில்லேன்அரு ளாளா**

**தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்**

**ஆதீஉனக் காளாயினி அல்லேன்என லாமே.**

**விளக்கம்**

‘‘மலர்த்தாதுகளை எடுத்து வரும் பெண்ணையின் தென்பால் உள்ள வெண்ணெய்நல்லூர் அருள்துறையில் வாழ் தென்னலே! பிறைசூடியவரே! செந்தீயைப் போலும் செம்மேனியரே! மக்களின் நலம் எண்ணாத முப்புரத்தவர் அரண்களை எரியுண்ணச் செய்தவரே!. முன்னமே நான் உமக்கு அடிமையாக இருப்பதை அறியாது, அ∴தில்லை என்பது, ஒல்லுமா?. அதனால் நான், “அறிவிலி“ என்னும் சொல்லுக்குப் பொருளானேன்!. இப்படியுள்ள எனக்கும், உம் அடி பணிபவர் பெறும் பெரும்பேற்றைப் பெற அருள்வீர்!”.

**பாடல் எண்: 6**

**தண்ணார்மதி சூடீ தழல் போலுந்திரு மேனீ**

**எண்ணார்புரம் மூன்றும்எரி யுண்ணநகை செய்தாய்**

**மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்**

**அண்ணாஉனக் காளாயினி அல்லேன்என லாமே.**

**விளக்கம்**

''வெண்மணலை அள்ளிவரும் பெண்ணைத் தென்பால்,'' வெண்ணெய்நல்லூர் ''அருள் துறையில் உறையும் அண்ணலே! தண்பிறையணிந்தவரே! செந்தீ நிறத்தவரே! முப்புரத்தசுரரின் கோட்டைகட்குக் கேட்டைச் செய்தவரே! முன்னைய அடிமையாயிருந்தும் நான், அ∴தில்லையென்றால், அது, சரியில்லைதான்!''

**பாடல் எண்: 7**

**ஊனாய்உயிர் ஆனாய் உடல் ஆனாய்உலகானாய்**

**வானாய்நிலன் ஆனாய்கடல் ஆனாய்மலை ஆனாய்**

**தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்**

**ஆனாயுனக் காளாயினி அல்லேன்என லாமே.**

**விளக்கம்**

''உடைந்து கொட்டிய தேனடைகளைக் கொண்டு வரும் பெண்ணையின் தென்பால் வெண்ணெய்நல்லூர், அருள்துறையில் அமர்ந்த ஏறூரும் பெருமானாரே! ஊனுடலில் உறையும் உயிராக, உலகாக, விண்ணாக, மண்ணாக, வரைகளாக, திரைகடல்களாக உள்ளவர், நீர்!. நான், உமக்கு முன்னமே அடிமையென்பதை அறியாது, "அடிமையில்லை!" என்றது, என் தவறே!".

**பாடல் எண்: 8**

**ஏற்றார்புரம் மூன்றும்எரி உண்ணச்சிலை தொட்டாய்**

**தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வானீர்**

**ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்**

**ஆற்றாயுனக் காளாயினி அல்லேன்எனலாமே.**

**விளக்கம்**

“பற்பலரின் பகையை ஏற்ற முப்புரத்தசுரரின் மூவரண்களை எரியம்பால் எரித்தவரே!. செந்தீ நிறத்தவரே! ஏறூர்தியரே! பெண்ணையின் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள்துறையில் வாழும் கங்கை தாங்கு சடையப்பரே! நான். உமக்கு முன்னமே அடிமையாக இருப்பதை அறியாது. ”அடிமையில்லை!” என்றது தவறுதான்!.”

**பாடல் எண்: 9**

**மழுவாள்வலன் ஏந்தீமறை ஓதீமங்கை பங்கா**

**தொழுவார் அவர் துயர் ஆயின தீர்த்தல்உன தொழிலே**

**செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்**

**அழகாஉனக் காளாயினி அல்லேன்என லாமே.**

**விளக்கம்**

“வலக்கையில் மழுவேந்தியவரே! மங்கை பங்கரே! வளம்பல கொழித்தும், செழித்தும் ஓடிவரும் பெண்ணையின் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையில் வாழும் அழகரே! முன்னமே உமக்கு ஆட்பட்ட நான். “அடிமையில்லை!“ என வழக்காடியது இழுக்கே! உம்மைத் தொழுபவரின் துயர்களைத் தீர்ப்பது உம் தொழில்! எனக்கும் அதைச் செய்தருள்வீர்!”.

**பாடல் எண்: 10**

**காரூர்புனல் எய்திக்கரை கல்லித்திரைக் கையாற்**

**பாரூர்புகழ் எய்தித்திகழ் பன்மாமணி உந்திச்**

**சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்**

**ஆரூரனெம் பெருமாற்காள் அல்லேன்என லாமே.**

**விளக்கம்**

‘‘கார் கொட்டிய நீர்கூடிக் கரைகளைச் சாடி, வழியிலுள்ள ஊர்களைச் செழிப்புறச் செய்தும், மணிகளையும் வாரிவரும் பெண்ணையின் தென்பாலுள்ள “வெண்ணெய்நல்லூர் அருள்துறையில் உறையும் பிறையணி இறைவராம் உம்மை “நான் உம் அடிமை!“ என்னும் உண்மையுணராது,“அடிய னில்லை!“ எனச் சொல்வது ஒல்லுமா? எனின், ஒல்லாது!““

**திருக்கோளிலிப் பதிகம்**

**(பொன்னித் தென்கரைப்பதி)**

தம், “தாளிணை“ப் பாடியும் அடியவர்க்குக் கோளினால் நேரும் தீங்கினைப் போக்கிக் காக்கும் சிவனார் வாழ்பதி. ”கோளிலி!”. கோள் ஸ்ரீ கிரகம் ‚ இலிஸ்ரீ இல்லாது போக்கும் பதிஸ்ரீகோளிலி, திருக்கோளிலியை, இன்று, “திருக்குவளை“ என்கின்றனர்.

கோளிலி அருகில், “குண்டையூர் உள்ளது. அங்கு வாழும் பெருநிலக்கிழார் ஒருவர், அங்குத் தம் வயலில் விளைந்த நெல்லை “ஓங்கு மலையெனக் குவித்து, ”இதனை நும் ஆரூர்க்கு எடுத்துச் செல்வீர்” எனக் கேட்டுக் கொண்டார். சுந்தரரிடம்!. சுந்தரர், கோளிலிச் சிவனாரிடம்,

“குண்டையூர்க்கிழார்“, கொடுத்த நெல்லை எடுத்துச் செல்ல எனக்கு ஆள் இல்லை! “நீர், உதவுவீர்!“ என வேண்டினார்.

”ஆள் இலை, எம்பெருமான்! இவை அட்டித்தரப் பணியே!” (பா.199)

என்பது சுந்தரரின் செந்தமிழ்பாவடி!.

சிவனாரும், அந்நெல்லை, இரவோடிரவாக ஆரூரில் சேர்க்க உதவினார்!.

இறைவர் : கோளிலியப்பர்

இறைவி : வண்டார்குழலி

திருச்சிற்றம்பலம்

**பாடல் எண்: 199**

**நீள நினைந்தடி யேனுமை**

**நித்தலுங் கைதொழுவேன்**

**வாளன கண்மட வாளவள்**

**வாடி வருந்தாமே**

**கோளிலி எம்பெரு மான்குண்டை**

**யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்**

**ஆளிலை எம்பெரு மானவை**

**அட்டித் தரப்பணியே.**

**விளக்கம்**

‘‘கோளிலி” எம்பெருமானாரே! எம்மையாளும் உம்மை நெடிது நினைந்து அடிபடிந்து கைகூப்பித் தொழுகிறேன். வாள்போலும் கண்களுடைய என் “பரவை“: வாடி வருந்தாதிருக்கப் பெருநிலக்கிழாரிடம் “குண்டையூரில்“ அடியவன் “நெல்,“ மிக மிகப்

பெற்றுள்ளேன். அந்நெல்லை ஆரூர் கொண்டு செல்ல எனக்கு ஆள் இல்லை!. இந்நெல் ஆரூர் செல்ல அருள்வீர்!" எனச் சுந்தரர் வேண்டினார்.

**பாடல் எண்: 200**

**வண்டம ருங்குழ லாளுமை**

**நங்கையோர் பங்குடையாய்**

**விண்டவர் தம்புர மூன்றெரி**

**செய்தவெம் வேதியனே**

**தெண்டிரை நீர்வயல் சூழ்திருக்**

**கோளிலி எம்பெருமான்**

**அண்டம தாயவ னேயவை**

**அட்டித் தரப்பணியே.**

**விளக்**கம்

''கொடிய முப்புரத்தசுரரின் பறக்கும் மூவரண்களும் மடிய, "எரி" யம்பு எய்து எரித்தழித்தவரே! நீர் அலையும், நெல்விளையும் வயல்களும், சூழ்ந்த "கோளிலி" எம்பெருமானாரே! அண்டம் பலவும் கடந்த கடவுளே! இந்நெல், ஆரூர் சேர அருள்வீர்!"

**பாடல் எண்: 201**

**பாதியோர் பெண்ணைவைத் தாய்பட**

**ருஞ்சடைக் கங்கைவைத்தாய்**

**மாதர்நல் லார்வருத் தம்மது**

**நீயும் அறிதியன்றே**

**கோதில் பொழில்புடை சூழ்குண்டை**

**யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்**

**ஆதியே அற்புத னேயவை**

**அட்டித் தரப்பணியே.**

**விளக்கம்**

மேனி, “இடத்தில்“ உமையெனும் மடப்பாவையை வைத்தீர்! விண்கங்கை தங்கிடத் தலையில் இடமீந்தீர்!. “பரவை“ படும் துயரை நீவிர் அறிவீர்! முன்னைப் பழம் பொருளாகி விந்தை புரிபவரே! குண்டையூரில் நான் பெற்ற நெல்லை, ஆரூர் கொண்டு செல்ல அருள்வீர்!“.

**பாடல் எண்: 202**

**சொல்லுவ தென்னுனை நான்தொண்டை**

**வாயுமை நங்கையைநீ**

**புல்கி இடத்தில்வைத் தாய்க்கொரு**

**பூசல்செய் தாருளரோ**

**கொல்லை வளம்புற விற்குண்டை**

**யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்**

**அல்லல் களைந்தடி யேற்கவை**

**அட்டித் தரப்பணியே.**

**விளக்கம்**

‘‘கோளிலிச் சிவனாரே! நான் உம்மிடம் சொல்லுவது இதுவன்றி வேறில்லை! தொண்டைக் கனி போலும் வாயுடைய உமையை நீர் உம்மேனி இடப்பங்கிலும், கங்கைமங்கையைத் தலையிலும் தாங்கியுள்ளீர்! பெண்டிர் இருவரை வாழ்க்கைத் துணையாகக் கொண்டிருந்தும் “பூசல்“ எதுவும் நேர்வதில்லை!. புன்செய் மிக்க

குண்டையூரில் நன்செய் நெல்லை நான் மிகப் பெற்றுள்ளேன்!. அந்நெல்லை, ஆரூரில் சேர்க்க அல்லல் படும் எனக்கு ஒல்லையில் உதவுவீர்!''

**பாடல் எண்: 203**

**முல்லை முறுவல் உமையொரு**

**பங்குடை முக்கணனே**

**பல்லயர் வெண்டலை யிற்பலி**

**கொண்டுழல் பாசுபதா**

**கொல்லை வளம்புற விற்றிருக்**

**கோளிலி எம்பெருமான்**

**அல்லல் களைந்தடி யேற்கவை**

**அட்டித் தரப்பணியே.**

**விளக்கம்**

''முல்லையரும்பன்ன பல்லையுடைய உமைக்கு இடப்பாகம் தந்தவரே! மூன்று கண்களுடன் தோன்றுபவரே! தலையோடேந்தி உணவேற்கும் "பாசுபதரே!'' கொல்லை வளங்கொண்ட "கோளிலியில்" நான் படும் அல்லலை, ஒல்லையில் ஒழித்தருள்வீர்!''.

**பாடல் எண்: 204**

**குரவம ருங்குழ லாளுமை**

**நங்கையோர் பங்குடையாய்**

**பரவை பசிவருத் தம்மது**

**நீயும் அறிதியன்றே**

**குரவம் ரும்பொழில் சூழ்குண்டை**

**யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்**

**அரவ மசைத்தவ னேயவை**

**அட்டித் தரப்பணியே.**

**விளக்கம்**

‘‘குரவமலரைக் கூந்தலில் அணிந்த ஏந்திழை உமைக்கு இடப்பாகம் ஈந்தவரே! அரவினை, அரைக்கசைத்தவரே! எல்லாம் அறிந்த நீர், “பரவை“ படும் பசித்துயரையும் அறிந்திருப்பீரே! குரவம் பரவிய பொழில் சூழ்ந்த குண்டையூரில், நான் பெற்ற நெற்குவியலை அவளகம் சேர்த்திட அருள்வீர்!”.

**பாடல் எண்: 205**

**எம்பெரு மானுனை யேநினைந்**

**தேத்துவன் எப்பொழுதும்**

**வம்பம ருங்குழ லாளொரு**

**பாகம மர்ந்தவனே**

**செம்பொனின் மாளிகை சூழ்திருக்**

**கோளிலி எம்பெருமான்**

**அன்பது வாயடி யேற்கவை**

**அட்டித் தரப்பணியே.**

**விளக்கம்**

‘‘எம் பெருமானாரே! உம்மை எப்போதும் எண்ணிப் போற்றுவன், நான்! மணமலர்க் குழலாள் உமையை இடப்பாகம் கொண்டவரே! பொன்னொளிர் மாடங்கள் மிக்க “கோளிலியில்“ வாழ்பவரே! குண்டையூர் நெல்லைக் கொண்டு போய் “ஆரூர்“ சேர்த்திட அருள்வீர்!”

**பாடல் எண்: 206**

**அரக்கன் முடிகரங் கள்அடர்த்**

**திட்டவெம் மாதிபிரான்**

**பரக்கும் அரவல்கு லாள்பர**

**வையவள் வாடுகின்றாள்**

**குரக்கினங் கள்குதி கொள்குண்டை**

**யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்**

**இரக்கம தாயடி யேற்கவை**

**அட்டித் தரப்பணியே.**

**விளக்கம்**

““அரக்கன் இராவணன் கயிலை எடுக்கவே, அவன் தலை - தோள்-தாள்களை அடர்த்தவரே! முன்னைப் பழம் பொருளே! அரவின் படம் போலும் அல்குலையுடைய “பரவை“, ஆரூரில் பசியால் வாடுகிறாள். குரங்குகள் குதிக்கும் குண்டையூரில் பெற்ற நெல்லைக் கொண்டுபோய் “ஆரூர்“ சேர்த்திட அருள்வீர்!”.

**பாடல் எண்: 207**

**பண்டைய மால்பிர மன்பறந்**

**தும்மிடந் தும்மயர்ந்துங்**

**கண்டில ராயவர் கள்கழல்**

**காண்பரி தாயபிரான்**

**தெண்டிரை நீர்வயல் சூழ்திருக்**

**கோளிலி எம்பெருமான்**

**அண்டம தாயவ னேயவை**

**அட்டித் தரப்பணியே.**

**விளக்கம்**

"தம்முள் போட்டியிட்ட, "மாலும், மலரவனும்", முறையே "பன்றி - வடிவு" கொண்டு மண்தோண்டிக், கீழே கீழே சென்றும், அன்னவடிவு கொண்டு விண்ணோக்கி,மேலே மேலே சென்றும் அவர் காணவொண்ணாவாறு அண்ணாமலையாக அழற்பிழம்பாக ஓங்கிய சிவனாரே! அண்டமெங்கும் நிறைவு கொண்டவரே! "கோளிலிப்" பெருமானாரே! "குண்டையூரில்" நான் பெற்ற நெற்குவியலை, "ஆரூர்" கொண்டு போய்ச் சேர்க்க அருள்வீர்!

**பாடல் எண்: 208**

**கொல்லை வளம்புற விற்றிருக்**

**கோளிலி மேயவனை**

**நல்லவர் தாம்பர வுந்திரு**

**நாவல வூரனவன்**

**நெல்லிட ஆட்கள்வேண்டிநினைந்**

**தேத்திய பத்தும்வல்லார்**

**அல்லல் களைந்துல கின்அண்டர்**

**வானுல காள்பவரே.**

**விளக்கம்**

‘‘கொல்லை வளமிக்க கோளிலி வாழ் சிவனாரை, நல்லவர் போற்றும் “திருநாவலூரன்“, “நம்பியாரூரன்“, ”குண்டையூர்- நெல்லை” ஆரூர் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டிப் போற்றிய பாக்கள் பத்தினையும், பாடவல்லவரின் அல்லல் இல்லையாகிப் போகும்!. விண்ணவர்க்கும் மேலான “பொன்னுலக வாழ்வும் வாய்க்கும்!”.

**மாணிக்கவாசகர் - திருஅம்மானை**

**ஆனந்தக்களிப்பு**

**(ஒப்புமை பற்றி வந்த ஆறடித்தரவு கொச்சகக் கலிப்பா)**

**திருச்சிற்றம்பலம்**

மாணிக்கவாசகர் சைவ சமயக் குரவர்கள் நால்வரில் ஒருவராவர். முன்னைய மூவரும் தேவாரம் பாடியிருக்க இவர் பாடிய நூல்களாவன: திருவாசகமும் திருக்கோவையாருமாகும். இவர் பொ.ஊ. 9-ஆம் நூற்றாண்டில் வரகுண பாண்டியன் காலத்தைச் சேர்ந்தவர். இவர் அரிமர்த்தன பாண்டியனிடம் தலையமைச்சராகப் பணியாற்றினார்.

மாணிக்கவாசகர், சிறந்த சிவ பக்தரான இரண்டாம் வரகுணன் (பொ.ஊ. 863–911) காலத்தில் வாழ்ந்தவர். இவர் பாடிய பாடல்கள் ”திருவாசகம்” என அழைக்கப்படுகின்றன. பக்திச் சுவையும் மனதை உருக்கும் தன்மையும் கொண்ட திருவாசகப் பாடல்கள், தமிழில் சிறந்த இலக்கியங்களின் வரிசையில் வைத்து எண்ணப்படுகின்றது. தமிழ் கற்ற மாணவரான ஜி. யு. போப் இதற்குத் தக்க சான்றாவார். ”சிறை பெறா நீர் போல் சிந்தை வாய்ப் பாயும் திருப்பெருந்துறையுறை சிவனே” (பா.392) என்பதாலும், ”இமைப் பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்

வாழ்க." எனும் அடிகளால் தமிழின் அருட் திறத்தையும் வாதவூரரிற்கும் இறைவனுக்குமான நெருக்கத்தையும் உணரலாம். "நரியைக் குதிரைசெய்" எனும் திருநாவுக்கரசர் பாடல் மூலம் இவர் காலத்தால் அப்பருக்கு முந்தியவர் எனக் கருதப்படுகிறது.

ஞான நெறியைப் பின்பற்றிய இவர் 32 ஆண்டுகளே வாழ்ந்து ஆனி மகத்தில் சிதம்பரத்தில் சாயுச்சிய முக்தியடைந்தார் (சிவனடி சேர்ந்தார்). இவருக்கு அருள்வாசகர், மாணிக்கவாசகர், திருவாதவூரடிகள், மணிமொழியார், தென்னவன் பிரமராயன் என்ற பெயர்களும் உண்டு.

தல புராணத்திலிருந்து திரட்டிய தகவல்களாக அபிதான சிந்தாமணி கூறுவது: "திருவாதவூரார் பாண்டிய நாட்டில் சம்புபாத சரிதருக்கும், சிவஞானவதிக்கும் மகனாகப் பிறந்தார். இவர் கல்வி கேள்விகளில் சிறந்து, மன்னன் அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராகப் பதவி அமர்ந்தார். அரிமர்த்தன பாண்டியன் மதுரையை இருப்பிடமாகக் கொண்டு ஆண்டுவந்தான். தன் புலமையால் "தென்னவன் பிரமராயன்" எனும் பட்டத்தையும் பெற்றார்.

உயர்ந்த பதவி, செல்வம், செல்வாக்கு எல்லாம் இருந்தபோதும் இவை வாழ்வின் இறுதி நோக்கமல்ல என்பதை உணர்ந்த திருவாதவூரார் சைவசித்தாந்தத்தை ஆராய்ந்து சிவ வழிபாடு மேற்கொண்டு ஒழுகி வரலானார்.

**பாடல் எண் : 1**

**செங்கண் நெடுமாலும் சென்றிடந்துங் காண்பரிய**

**பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி**

**எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு**

**தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்**

**அங்கணண் அந்தணனாய் அறைகூவி வீடருளும்**

**அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்**

**விளக்கம்**

அம்மனை யாடும் சிவந்த கணணையுடைய நெடிய திருமாலும், (வராகமாய் மண்ணைத்) தோண்டிப் போயுங் காணமுடியாத ஒளிவிளங்குந் தாமரைபோலுந் திருவடிகளோடு நிலவுலகத்தே புகுந்தருளி, நம்முடைய பிறப்பைத் தொலைத்து எம்போலியரையும் அடிமையாக் கொண்டு, வலிய அழைத்து. வீட்டினை நல்கும்.தென்னை மரங்கள் செறிந்த பொழிலையுடைய அழகிய நல்ல திருப்பெருந்துறை யுடையானாகிய அழகிய திருநோக்கினனாகியும் சிறந்த பேரருளாளனாகியு மிருப்பவனது அருளழகு ததும்பும் நெடிய கழலணிந்த திருவடிகளையே நாம் பாடுவோமாக.

**பாடல் எண் : 2**

**பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தார்**

**ஆராலுங் காண்டற் கரியான் எமக்கெளிய**

**பேராளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி**

**வாரா வழியருளி வந்தென் உளம்புகுந்த**

**ஆரா அமுதாய் அலைகடல்வாய் மீன்விசிறும்**

**பேராசை வாரியனைப் பாடுதுங்காண் அம்மானாய்.**

**விளக்கம்**

நிலவுலகிலுள்ளாரும் வானுலகிலுள்ளாரும் கழுலகிலுள்ளாரும், இவற்றிற்குப் புறமாய் வேறுலகிலுள்ளாரும், ஆகிய யாவராலும் (தமது முயற்சியாலே) காணவொண்ணாத பெருமான், நமக்கு எளிவந்தருளிய பெருமையுடையவன், பாண்டிப்பெருமான், பெருந்துறையில் வீற்றிருப்பவனாய், வந்து எனக்கு மால் மிகும்படி செய்து (பிறவிக்கு) மீளாத நெறிதந்து, என்னுடைய உள்ளத்தே கோயில்கொண்ட,

தெவிட்டாத அருமருந்தாய், (முன்னொரு காலத்திலே பரதவர் தலைவன் பொருட்டு) கொந்தளிக்குங் கடலிலே மீனைப்பிடிக்க வலைவீசிய, (அன்பர்க்குப்) பெருவிருப்பாய் கடல் போல்வானை, நாம் பாடுவோமாக.

**பாடல் எண் : 3**

**இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும்**

**அந்தரமே நிற்கச் சிவன்அவனி வந்தருளி**

**எந்தரமும் ஆட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்**

**சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறையான்**

**பந்தம் பறியப் பரிமேற்கொண் டான்தந்த**

**அந்தமிலா ஆனந்தம் பாடுதுங்காண் அம்மானாய்**

**விளக்கம்**

இந்திரனும் பிரமனும் திருமாலும். (அதிகார வகையினராகிய) பிற தேவரும், (பொதுவான) விண்ணவரும். வானுலகிலே (இறையருளை நாடி) நிற்கவும், (அவர்களைக்) கடந்து சிவ பெருமான் இந்நிலவுலகிலே எழுந்தருளி, திருத்தோளி லணியப்பட்ட திருநீறுடையானாய் (பக்குவம் போதாத) எம்போலியரையும் எமதுள்ளத்துட் புகுந்து அதனை (அன்பால்) உருகுவிக்குஞ் சிறப்புப் பொருந்திய திருப்பெருந்துறைப் பெருமான், ஆண்டுகொண்டருளி, (பாண்டியன் முதலோர) பாசத்தளை அறுபட்டொழியக் குதிரைமே பொழுந்தருளினன். அவன் எமக்குக் கொடுத்தருளிய எல்லையற்ற பேரின்பத்தை வியந்து பாடுவோமாக.

**பாடல் எண் : 4**

**வான்வந்த தேவர்களும் மாலயனோ டிந்திரனும்**

**கான்நின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய**

**தான்வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்டு**

**ஊன்வந்து ரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்து**

**தேன்வந்து அமுதின் தெளிவின் ஒளிவந்த**

**வான்வந்த வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்.**

**விளக்கம்**

வானுலகஞ் சேர்ந்துள்ள விண்ணவரும், திருமால். பிரமன், இந்திரன் என்பாரும். (தவம் புரிவான்) காட்டிலே நின்று (யாதும் உட்கொள்ளாது) உடம்புலரப் பெற்றும், உடல்மீது புற்றானது வளரப்பெற்றும், காணப்பெறாத கடவுள் தானே (ஆசானாக) எழுந்தருளி வந்து நாய்போலும் எனக்குத் தாயைப் போல முதற்றரமான கருணை தந்தருளி, புறத்தே, உடம்பு மயிர் சிலிர்த்து உள்ளே மூச்செழுந்து மகிழ்ச்சியடைதற் கேதுவாகிய, தேன் தன்மையுடையதாய். அமுதத் தெளிவுபோல்வதாய், ஒளி பொருந்தியதாய் இருதயாகாசத்திற்றோன்றிய பெருமைமிக்க திருவடியை நாம் பாடுவோமாக.

**பாடல் எண் : 5**

**கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை**

**வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்**

**கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை**

**வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்**

**தில்லை நகர்புக்குச் சிற்றம் பலம்மன்னும்**

**ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய்.**

**விளக்கம்**

தனது தன்மையைக் கற்றறியாத உள்ளத்தையுடைய கீழ்ப்பட்ட நாய்போன்ற என்னை அருட் பித்தேற்றுவித்த வல்லமையுடையானாய் அழகிய நல்ல பெருந்துறை வீற்றிருப்பவனாய் (எனது நெஞ்சமாகிய) கல்லினைக் குழைத்துப் பழத்தின் தன்மையதாகக் செய்து. தனது பேரருள் வெள்ளத்திலே ஆழ்வித்து, எனது இருவினைகளைத் தொலைத்த அந்தணனை, தில்லைப்பதி புகுந்து ஞான அம்பலத்திலே நிலைபெற்று விளங்கும் விரைவுடைய காளையூர்தி யுடையானை நாம் பாடுவோமாக.

**பாடல் எண் : 6**

**கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்**

**தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்**

**காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டி**

**தாள்தா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி**

**நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த**

**ஆட்டான்கொண் டாண்டவா பாடுதுங்காண் அம்மானாய்.**

**விளக்கம்**

பாங்கியே! ஒருத்தன் என்பொருட்டுச் செய்த உய்தி நெறியைக் கேட்டனையா? தீட்டிய சுதை பொருந்திய மதில்கள் பக்கத்திலே சூழப்பெற்ற அழகிய நல்ல திருப்பெருந்துறைப் பெருமான் எனக்குக் காட்டத்தகாத அரிய உண்மைகளெல்லாங் காட்டித் தனது திருவடித் தாமரைகளைக் காண்பித்துத் தன் அருளாகிய தேனைக் காண்பித்து, சிவபரம் பொருளைக் காண்பித்து. உலகினர் நம்மை இகழ்ந்து சிரிக்கவும், நாம் மேலாகிய வீட்டின்பத்தை அடையவும் என்னைத் தான் அடிமைகொண்ட விதத்தை நாம் பாடுவோமாக

**பாடல் எண் : 7**

**ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்**

**சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்**

**மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை**

**நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்**

**தாயான தத்துவனைத் தானே உலகேழும்**

**ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய்.**

**விளக்கம்**

இடையறாது நினைவார் நெஞ்சில் வீற்றிருக்கும் (அங்கனம் நினையாதார்க்குத்) தூரத்தே உள்ளவனை, வீரனை, அழகிய நல்ல திருப்பெருந் துறையிலே வீற்றிருந்தவனை, அந்தணனை, மங்கையை ஒரு பாதியிற் கொண்டவனை, நாய்த்தன்மை யுடையேமாகிய நம்மை அடிமையாக ஆண்டு கொண்ட தலைவனை, (நமக்குத்) தாயாகிய மெய்யனை, தானாகவே (மூவிடத்துள்ள) ஏழுலகத்திலுங் கலந்து அவையாய் நிற்பானை அரசனை நாம் பாடுவோமாக.

**பாடல் எண் : 8**

**பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்**

**பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்**

**விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்**

**கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை**

**மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு**

**புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.**

**விளக்கம்**

பண்களைக் கொண்ட பாடலைப் பாடும் பண்பினை உண்டாக்கியருளிய, மாதுதங்கிய பாகமுடையான், விரும்பத் தக்கான், திருப்பெருந் துறை யுடையான், விண்ணுலகில் நிலை நிறுத்திய புகழுடையான், அகன்ற பூமியின்கண் ஆண்டவனாய் விளங்குபவன், கண் அமைந்த நெற்றியினையுடைய எல்லாம் கடந்த முதல்வன், முழக்க மிக்க மதுரைமாநகரிலே (பிட்டு வாணிச்சிக்காக) மண்சுமந்து, (உதிர்ந்த பிட்டாகிய) கூலி வாங்கி, மதுரை மன்னனால் அடிபட்டு, அதனாலேற்பட்ட புண்ணை யுடைய அவனது அழகிய திருமேனியை நாம் பாடுவோமாக.

**பாடல் எண் : 9**

**துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்**

**கொண்ட புரிநூலான் கோலமா ஊர்தியான்**

**கண்டங் கரியான்செம் மேனியான் வெண்ணீற்றான்**

**அண்டமுத லாயினான் அந்தமிலா ஆனந்தம்**

**பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளும்**

**அண்டம் வியப்புறுமா பாடுதுங்காண் அம்மானாய்.**

**விளக்கம்**

மதியின் ஒரு கலையாகிய பிறையணிந்தவன், மறை களையுடையான், பெருந்துறைப் பெருமான், முப்புரிகொண்ட நூல் அணிந்தவன், அழகிய காளைவாகனத்தன், நீலகண்ட முடையான். சிவந்த திருமேனியான். வெள்ளிய திருநீறணிந்தவன், உலகத் தொகுதிகட்கு முதல்வன் ஆனவன் ஆயபெருமான், எல்லையற்ற பேரின்பத்தை.(அநாதியேயுள்ள) பழைய முறையிலேயே, பழைய அடியார்களுக்கு, உலகினர் அதிசயிக்கு மாறு நல்கியருளும் விதத்தை நாம் பாடுவோமாக.

**பாடல் எண் : 10**

**விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை**

**மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்**

**தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்**

**பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்**

**கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட**

**அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்.**

**விளக்கம்**

விண்ணுலகங்களை அரசாளும் இறையவர்கட்கு மேலான அறிவுநூலாசானை, மண்ணுலகில் ஆட்சிபுரியும் வேந்தர்க்கு மேன்மைதரும் பொருளாகி நின்றவனை. குளிர்ச்சி பொருந்திய தமிழ்மொழியினைப் பாதுகாக்குங்கருணை மிகுந்த பாண்டியனா னானை, உமை நங்கை தங்கிய பகுதியானை, (யாம்) விரும்புகின்ற திருப்பெருந்துறையிலே பெருமை மிக்க திருவடிகளைக் காண்பித்தருளி நாயனைய என்னை அடிமையாகக் கொண்ட ண்ட திருவண்ணாமலை உண்ணலை நாம் பாடுவோமாக.

**பாடல் எண் : 11**

**செப்பார் முலைபங்கன் தென்னன் பெருந்துறையான்**

**தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்குந் தன்மையினான்**

**அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த**

**அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே**

**ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தா ருள்ளிருக்கும்**

**அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய்.**

**விளக்கம்**

சிமிழ்க்கிணையான நகிலையுடைய அம்மைபாகன். அழகிய நல்ல திருப்பெருந்துறையுடையான், (தன்) திருவடியை அடைந்தவர்கள் உள்ளத்தைத் தவறாதே உருகுவிக்கும் இயல்பினன். அந்தப் பாண்டியன் நாட்டைச் சிவலோகமாகச் செய்த கங்கை பொருந்திய சடையுடை எந்தை, (தனது) இன்பம் மிக்க மாணடிகட்கே ஈடாகக் கொடுக்கப்பட்ட உள்ளத்தையுடையவர் களது அகத்தே குடிகொண்டிருக்கும் எல்லாவற்றிற்கும் அப்பாலாகிய சுத்த புவனங்கட்கும் அப்பாலாக உள்ள தலைவனை நாம் பாடுவோமாக

**பாடல் எண் : 12**

**மைப்பொலியுங் கண்ணிகேள் மாலயனோ டிந்திரனும்**
**எப்பிறவி யுந்தேட என்னையுந்தன் இன்னருளால்**
**இப்பிறவி ஆட்கொண் டினிப்பிறவா மேகாத்து**
**மெய்ப்பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபேறாய்**
**எப்பொருட்குந் தானேயாய் யாவைக்கும் வீடாகும்**
**அப்பொருளாம் நம்சிவனைப் பாடுதுங்காண் அம்மானாய்.**

**விளக்கம்**

மை விளங்குகின்ற கண்ணையுடைய பெண்ணே! (நான் சொல்வதைக்) கேட்பாயாக. திருமாலும் பிரமனும் இந்திரனும், எல்லாப் பிறவிகளிலும் தன்னைத் தேடவும், (அவர்கட்குத் தோன்றாது.). தகுதியற்ற எனக்குத் தோன்றி, என்னைத் தனது இனிய அருளினாலே. இந்தப் பிறவியிலே குருவாய் வந்து ஆண்டுகொண்டு, மேற் பிறவி எடாத வண்ணம் காப்பாற்றி, மெய்யான பொருளின்கண் விளங்குபவனாய், மெய்யே நிலையான இடமாக வுடையவனாய், எல்லாப் பொருள் களுக்குஞ் சார்பாய், எல்லாம் முடியுமிடமாயுள்ள அத்தகைய பரம்பொருளாகிய நமது சிவபெருமானை நாம் பாடுவோமாக.

**பாடல் எண் : 13**

**கையார் வளைசிலம்பக் காதார் குழையாட**

**மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்**

**செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்**

**கையானை எங்குஞ் செறிந்தானை அன்பர்க்கு**

**மெய்யானை அல்லாதார்க் கல்லாத வேதியனை**

**ஐயா றமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய்.**

**விளக்கம்**

நமது கைகளிலேயுள்ள வளையல்கள் ஒலிப்ப. காதிற் பொருந்திய தோடுகள் ஆட, சாந்தணிந்த கூந்தல் அவிழ்ந்து அசைய (அதன் கண் உள்ள மலர் விரிதலால்) தேன் ஒழுக, (அதனை யுண்ண) வண்டுகள் ரீங்காரஞ் செய்ய, சிவந்த மேனியானை, அல்லது நேர்மை யுடையானை, வெள்ளிய திருநீறு தரித்தவனை, உயிர் தாமாகப் போய் அறியமுடியாத இடத்தை யுடையவனை, எவ்விடத்தும் நிறைந்தவனை, அன்பர்க்கு உண்மையாய் விளங்குவானை, அன்பிலார்க்கு விளங்காத அறிவனை, திருவையாற்றில் வீற்றிருந்த பெருமானை நாம் பாடுவோமாக.

**பாடல் எண் : 14**

**ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்**

**ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை**

**ஊனையும் நின்றுருக்கி என்வினையை ஓட்டுகந்து**

**தேனையும் பாலையுங் கன்னலையும் ஒத்தினிய**

**கோனவன்போல் வந்தென்னைத் தன்தொழும்பிற் கொண்டருளும்**

**வானவன் பூங்கழலே பாடுதுங்காண் அம்மானாய்.**

**விளக்கம்**

ஆனையாயும் புழுவாயும் மனிதராயும் வானவராயும் பிற பிறவிகளை யுடையனவாயும் பிறந்தும் இறந்தும் இளைப்புற்றேனை (ஆட்கொண்டு உள்ளத்தை மாத்திரமல்லாமல்) எனது உடம்பையும். உளம்நின்று உருகுவித்து, எனது இருவினையை ஓட்டுதலை விரும்பி, தேனும் பாலும் சர்க்கரையும் போலத் தித்திப் பானாயுள்ள தலைவனைப் போல ஆசானா யெழுந்தருளி என்னைத் தனது தொண்டிலே ஏற்றுக்கொண்டருளிய சிதாகாயத்தனது அழகிய திருவடிகளையே நாம் பாடுவோமாக.

**பாடல் எண் : 15**

**சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்றன் வேள்வியினில்**

**இந்திரனைத் தோள்நெரித்திட் டெச்சன் தலையரிந்**

**தந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல்தகர்த்துச்**

**சிந்தித் திசைதிசையே தேவர்களை ஓட்டுகந்த**

**செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்**

**மந்தார மாலையே பாடுதுங்காண் அம்மானாய்.**

**விளக்கம்**

தக்கன் செய்த யாகத்திலே, சந்திரனை மெலிவித்து, இந்திரனது புயங்களை நெரியும்படி தாக்கி, யாகத்தலைவனின் தலையைக் கொய்தொழித்து, வானிலே செல்லும் விளக்கமுடைய பகலவனது பற்களை உடைத்து, விண்ணவர்களைத் திக்குத் தோறுஞ் சிதறியோடும்படி செய்தலை விரும்பிய. சிவந்த மாலையணிந்த, சோலைப்

பக்கமெங்குஞ் சூழ்ந்துள்ள, அழகிய நல்ல திருப்பெருந் துறையுடையானது மந்தாரப் பூமாலையை வியந்து நாம் பாடுவோமாக.

**பாடல் எண் : 16**

**ஊனாய் உயிராய் உணர்வாய்என் னுட்கலந்து**

**தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்**

**வானோ ரறியா வழிஎமக்குத் தந்தருளும்**

**தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்**

**ஆனா அறிவாய் அளவிறந்த பல்லுயிர்க்கும்**

**கோனாகி நின்றவா கூறுதுங்காண் அம்மானாய்.**

**விளக்கம்**

உடம்பாகவும், அறிவாகவும், உயிராகவும். என் கண்ணே கலந்து நின்றருளித் தேனும் அமுதமும் இனிய வெல்லமும் ஆக இனிமை தந்து, விண்ணவர் அறிதற்கரிய வீட்டு நெறியை எங்களுக்குக் காட்டியருளும், வண்டுகள் பொருந்திய கொன்றைமலரணிந்த அண்ணலாய். நிரம்பிய சிறந்த விளக்க முடைய நீங்காத பேரறிவுருவினனாய், எல்லை கடந்த பலகோடி உயிர்களுக்குந் தலைவனாய் நின்ற முறையை நாம் பாடுவோமாகடி

**பாடல் எண் : 17**

**சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள்தோள்**

**கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்று**

**ஊடுவேன் செவ்வாய்க் குருகுவேன் உள்ளுருகித்**

**தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்**

**வாடுவேன் பேர்த்து மலர்வேன் அனலேந்தி**

**ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்.**

**விளக்கம்**

அழகிய கொன்றை மாலையை (த் தலையில்) அணிவேன். அணிந்து சிவபிரானது எழுச்சிமிக்க தோள்களைச் சேர்வேன். சேர்ந்த, அவனைப் புணர்ந்து, அதினுள்ள களிப்பால் அறிவு மயங்கிப் புலவி யெய்துவேன். பின்னர், புலவி நீங்கி, அவனது சிவந்த இதழைப் பெற உருகி நிற்பேன். நெஞ்சம் உருகி அவனைத் தேடுவேன். தேடி அவனது திருவடியையே நினைந்திருப்பேன். அவனருளைப் பெறாது மெலிவேன். அதனைப் பெற்று மீண்டும் மகிழ்வேன். தழலைக் கையிலேந்தி ஆடுகின்ற கூத்தனுடைய செய்ய (கமல) பாதங்களையே நாம் பாடுவோமாக.

**பாடல் எண் : 18**

**கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை**

**வெளிவந்த மாலயனுங் காண்பரிய வித்தகனைத்**

**தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையில்**

**எளிவந் திருந்திரங்கி எண்ணரிய இன்னருளால்**

**ஒளிவந்தென் உள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ**

**அளிவந்த அந்தணனைப் பாடுதுங்காண் அம்மானாய்.**

**விளக்கம்**

கிளியின் குரல்போல மெல்லிய சொல்லினை யுடைய அம்மையின் ஒளி விளங்கும் பாகத்தானை, (இறைவனடி முடி காண்பான்) வெளிப்போந்து முயன்ற திருமாலும் பிரமனும் காண்டற் கரிய அறிவனை, தெளிவு தரும் ஞானத்தேனை, சிறப்புப் பொருந்திய திருப்பெருந் துறையிலே எளியனாய் எழுந்தருளி நினைத்தற்கரிய (எதிர்பாராத) இனிய கருணையாலே. ஒளியுருவனாய்த் தோன்றி நெஞ்சினுள்ளே

உயிரறிவின் கண்ணே அருட்பே ரொளி விளங்குமாறு அருள்புரிந்த அழகிய பேரருளானை நாம் பாடுவோமாக.

**பாடல் எண் : 19**

**முன்னானை மூவர்க்கும் முற்றுமாய் முற்றுக்கும்**

**பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்**

**மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத்**

**தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை**

**என்னானை என்னப்பன் என்பார்கட் கின்னமுதை**

**அன்னானை அம்மானைப் பாடுதுங்காண் அம்மானாய்.**

**விளக்கம்**

மும்மூர்த்திகளுக்கு முற்பட்டவனை, எல்லாப் பொருளு மாய், அவற்றிற்கு முற்பட்டவனாயும் பிற்பட்டவனாயு முள்ளானை, சடை, பிறை முதலிய தலைக்கோல முடையானை, விரும்பத்தக்க திருப்பெருந் துறையிலே மன்னியவனை, சிதாகாயத்தனை, மங்கை பொருந்திய பங்கனை, அழகிய திருவானைக்காவி லுறைவானை, தெற்கிலுள்ள பாண்டிநா டுடையானை, எனக்கு இனியவனை, என் அப்பனே யென்று அன்பாலழைப்பவர்கட்கு இனிய அமுதத்தை ஒப்பானை, எந்தையை நாம் பாடுவோமாக.

**பாடல் எண் : 20**

**பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்**

**கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்**

**குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்**

**சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் தொல்புகழே**

**பற்றிஇப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்**

**பற்றியபே ரானந்தம் பாடுதுங்காண் அம்மானாய்.**

**விளக்கம்**

(அன்பரல்லாத) ஏனையோர்க்கு இன்ன தன்மையனென்று அறியக்கூடாத பெருமான், திருப்பெருந்துறை யுடையான், வெற்றிதருங் குதிரைமேல் எழுந்தருளி வந்து தன்னடி யாராகிய (அடிகள், பாண்டியன் என்பாரது) மும்மலங்களை யொழித்து அன்புப்பண்பினை யேற்றுச் சீராட்டி, (பல பிறவிகளிலே)உயிரைச் சூழ்ந்து கிடந்த குடும்பப் பாசத்தைத் தொலைப்பானுடைய பண்டைப் புகழினைப் பொருளாக் கொண்டு, இந்த வினைக்கட்டு அறவே பொழிதலை நாம் அடையும் பொருட்டு, நம்மை விடாது பிடித்த பேரின்பத்தை நாம் பாடுவோமாக.

## திருக்கோத்தும்பி

**தில்லையில் அருளிச் செய்தது**

**சிவனோடு ஐக்கியம்**

**நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா**

**திருச்சிற்றம்பலம்**

**பாடல் எண் : 1**

**பூவேறு கோனும் புரந்தரனும் பொற் பமைந்த**
**நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்**
**மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்**
**சேவேறு சேவடிக்கே சென்றுதாய் கோத்தும்பீ**

**விளக்கம்**

அரசவண்டே! தாமரை மலர்மேல் ஏறித்தங்கும் நான்முகக் கடவுளும், இந்திரனும், அழகு பொருந்திய நாவிற்றங்கும் கலைமகளும், திருமாலும்,

மறைவாயுள்ள நான்கு வாக்குக்களும், காளைமேலேறிவரும் ஒளியுருவனாகிய உருத்திரனும், தேவர்களும் ஆகிய யாவரும் அறியாத விடைப்பாகனது செவ்விய திருவடி மலரையே அடைந்து, நீ (உனது வாயார) ரீங்காரஞ் செய்வாயாக.

**பாடல் எண் : 2**

**நானார்என் உள்ளமார் ஞானங்களார் என்னையார றிவார்**

**வானோர் பிரானென்னை ஆண்டிலனேல் மதிமயங்கி**

**ஊனா ருடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்**

**தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ**

**விளக்கம்**

அரச வண்டே! தேவர் பெருமானாகிய கடவுள் என்னை ஆட்கொள்ளாவிடின், நான் எத்தன்மையனா யிருப்பேனோ? எனது மனம் எத்தகையதா யிருக்குமோ? என் அறிவு என்னாகுமோ, என்னை உலகில் யார் (ஞானியென) அறி வார்கள்? அறிவு தடித்துத் தசைகலந்த உடைந்த கபாலத்தில் உண்ணும் உணவை (ஆய்த்து) கொள்ளும் சபாநாயகனின் இன்பத்தேன் பொருந்திய திருவடிக் கமலங் களையே அடைந்து ஊதுவாயாக மயங்கினார்போல

**பாடல் எண் : 3**

**தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே**

**நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்**

**அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியும்**

**குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ**

**விளக்கம்**

அரச வண்டே! தினையளவு இருக்கின்ற ஒரு மலரிலுள்ள தேனைப் பருகாமல், எண்ணுந்தோறும், காணுந் தோறும், பேசுந்தோறும் பிற எல்லாப் பொழுதினும், எல்லா எலும்புகளும் உள்ளே இளகும்படி, பேரின்பத்தேனைப் பொழியுந் திருநடமுடையான் திருவடிமலரினையே அடைந்து ஊதுவாயாக.

**பாடல் எண் : 4**

**கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்**

**என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி**

**வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்**

**சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ**

**விளக்கம்**

யாதும் உவமையாகக் கூறப்படாத எந்தை, கண்ணப்ப நாயனாரது பேரன்பிற் கீடான அன்பு பிறர்பால் இல்லாமையைக் கண்டபின், (அன்பிலாத) என்னையும் அடிமையாகக் கொண்டருளி நற்பண்புடையனாம் வண்ணம் என்னைச் செய்து (தில்லைக்கு ) வாவென்றருளிச் செய்த பெருங் கருணையும் அழகிய திருநீறாகிய பொடியுமுடைய பெருமான் திருவடி மலர்க்கே போய் ஊதுவாயாக.

**பாடல் எண் : 5**

**அத்தேவர் தேவர் அவர்தேவர் என்றிங்ஙன்**

**பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே**

**பத்தேதும் இல்லாதென் பற்றறநான் பற்றிநின்ற**

**மெய்த்தேவர் தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ**

**விளக்கம்**

(பல சமயிகள்) அந்த வானவர் முழுமுதற் கடவுள் அவர்க்கும் பெரிய வானவராயிருப்பவர் (இவர்) என்று இவ்வாறு உண்மையாகக் கடவுள் இல்லாத தெய்வங்களைக் கடவுள் என்று கூறி (வீணாக)ப் பிதற்றுகின்ற இந்நிலவுலகத்தே, பிற ஆதரவு யாதுமில்லாமல், எனது உலகப் பற்று நீங்கும்படி, நான் (சார்ந்து) கைப்பற்றி நின்ற உண்மையான தேவ தேவனுடைய (திருவடிக்கே) போய் நீ ரீங்காரஞ் செய்க.

**பாடல் எண் : 6**

**வைத்த நிதிபெண்டீர் மக்கள்குலங் கல்வியென்னும்**

**பித்த உலகிற் பிறப்போ டிறப்பென்னும்**

**சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த**

**வித்தகத் தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ**

**விளக்கம்**

மால் நிறைந்த உலகிலே தேடி வைத்த செல்வம், மனைவி. மக்கள், குலம், கல்வி, பிறப்பு, இறப்பு என்னுமிவை காரணமாக அல்லது இவற்றிற்குக் காரணமாக உளதாம். மனத்திரிபு.மனக்குழப்பம் முதலியவற்றைத் தொலைத்து. (அறிவின்) தெளிவைத் தந்த அறிவாசானாகிய கடவுளுடைய திருவடிக் கமலங்களையே அடைந்து நீ ரீங்காரஞ் செய்க.

**பாடல் எண் : 7**

**சட்டோ நினைக்க மனத்தமுதாஞ் சங்கரனைக்**

**கெட்டேன் மறப்பேனோ கேடுபடாத் திருவடியை**

**ஒட்டாத பாவித் தொழும்பரைநாம் உருவறியோம்**

**சிட்டாய சிட்டற்கே சென்றூதாய் கோத்தும்பீ**

**விளக்கம்**

சங்கரனை உள்ளத்தே சற்றே நினைப்பின் அமுதம் ஊறும். அவனது கெடுதலில்லாத திருப்பாதங்களைத் தீயேன் மறந்து விடுவேனோ? (மறவேன்). அவன் திருவடியைப் பொருந்தாத பாவஞ் செய்த அடிமைகளது வடிவத்தை நாம் பார்க்ககில்லேம் நுண்ணியனாகிய நல்லோன் திருவடிக்கே நீ போய் ரீங்காரஞ் செய்வாயாக.

**பாடல் எண் : 8**

**ஒன்றாய் முளைத்தெழுந் தெத்தனையோ கவடுவிட்டு**

**நன்றாக வைத்தென்னை நாய்சிவிகை ஏற்றுவித்த**

**என்தாதை தாதைக்கும் எம்மனைக்குந் தம்பெருமான்**

**குன்றாத செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ**

**விளக்கம்**

ஒரு பொருளாய்த் தோன்றி, விரிந்து எத்தனையோ கிளைகள் போக்கி, என்னைக் கருவி கரணங்களோடு செவ்வையாக நிலவும்படி ஏற்படுத்தி, நாய்போலும் என்னைச் சிவிகை ஏற்றினாற் போல உன்னடியாரோடு உயர்ந்த இருக்கையில் இருத்தி வைத்த,எனது தந்தைக்கும் அவன் தந்தைக்கும் எமது தாய்க்கும் முதல் வனாகிய குறைவில்லாத செல்வமுடையானிடமே போய் நீ ரீங்காரஞ் செய்க

**பாடல் எண் : 9**

**கரணங்கள் எல்லாங் கடந்துநின்ற கறைமிடற்றன்**

**சரணங்க ளேசென்று சார்தலுமே தான்எனக்கு**

**மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்கறுத்த**

**கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ**

**விளக்கம்**

எனது அகக்கருவி, புறக்கருவிகள் ஆகிய எல்லா வற்றிற்கும் அப்பாற்பட்ட நீலகண்டனது திருவடிகளைப் போய்ச் சேர்தலுமே, எனக்கு இறப்புப் பிறப்பென்னு மிரண்டால் வரக் கூடிய மயக்கத்தைத் தொலைத்த அருட்கடல் போல்வான் திருவடிகளையே சென்றடைந்து ரீங்காரஞ் செய்க.

**பாடல் எண் : 10**

**நோயுற்று மூத்துநான் நுந்துகன்றா யிங்கிருந்து**

**நாயுற்ற செல்வம் நயந்தறியா வண்ணமெல்லாந்**

**தாயுற்று வந்தென்னை ஆண்டுகொண்ட தன்கருணைத்**

**தேயுற்ற செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ**

**விளக்கம்**

அரச வண்டே! பிணிவாய்ப்பட்டு, முதிர்வடைந்து (தாயினால்) தள்ளப்பட்ட கன்றுபோல. நாய்போன்ற யான்பெற்ற பெருஞ்செல்வ மெல்லாவற்றையும் விரும்பி நுகர்ந்தறியா வகை இவ்வுலகி லிருப்ப, தாய்த்தன்மை மேற்கொண் டெழுந்தருளி என்னை ஆட்கொண்ட குளிர்ந்த பேரருளொளி பொருந்திய பெருமானுக்கே நீ போய் ரீங்காரஞ் செய்க.

**பாடல் எண் : 11**

**வன்னெஞ்சக் கள்வன் மனவலியன் என்னாதே**

**கல்நெஞ் சுருக்கிக் கருணையினால் ஆண்டுகொண்ட**

**அன்னந் திளைக்கும் அணிதில்லை அம்பலவன்**

**பொன்னங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ**

**விளக்கம்**

அரசவண்டே! (என்னை) உருகாத திண்ணிய மனமுடைய வஞ்சகன், குரங்குபோன்ற மனத்தன் என்றெண்ணி அகற்றிவிடாமல், எனது கற்போற் கடிய நெஞ்சினை உருகுவித்து அருண் மிகுதியினால் ஆட்கொண்ட, அன்னப் பறவைகள் மிகுந்த அழகிய தில்லைநகரிலுள்ள சபைக்கு நாயகனது பொற்கழலணிந்த அழகிய திருவடிக்கே போய் ஊதுவாயாக.

**பாடல் எண் : 12**

**நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்**

**பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்**

**சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளும்**

**தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ**

**விளக்கம்**

நாய்போன்ற என்னைத் தன்னுடைய திருவடிகளைப் பாடும்படி செய்த தலைவனை, பேய்த்தன்மை யுடையேனது மனக் குற்றங்களை மன்னித்தருளும் பெருந்தன்மையுடையானை, இகழ்ச்சி சிறிதுமில்லாமல் செய்யுந்தொண்டுகளை ஏற்றுக் கொண்டருளுகின்ற எனக்குத் தாயான ஆண்டவனிடமேபோய் ரீங்காரஞ் செய்க.

**பாடல் எண் : 13**

**நான்தனக் கன்பின்மை நானுந்தா னும்அறிவோம்**

**தானென்னை ஆட்கொண்டது எல்லாருந் தாமறிவார்**

**ஆன கருணையும் அங்குற்றே தானவனே**

**கோனென்னைக் கூடக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ**

**விளக்கம்**

இறைவன்பால் யான் அன்பில்லாதிருத்தலை, அவனும் நானும் தெரிவோம் (பிறர் அறியார்) அவன் என்னை அடிமையாகக் கொண்டதை (உலகினர்) எல்லாருமே தெரி வார்கள். எனக்கு உண்டான திருவருளும் அவன்பா லேற்பட்டதே. (அன்பில்லாத போது, திருவருளை அவனிடத்திருந்தே எனக்குக் கிடைத்தது போல இப்போதும் ) தலைவனாகிய அவனே, தானாக என்னை வந்து கூடும்படி, மெல்லிய முறையாக ரீங்காரஞ் செய்க.

**பாடல் எண் : 14**

**கருவாய் உலகினுக் கப்புறமாய் இப்புறத்தே**

**மருவார் மலர்க்குழல் மாதினொடும் வந்தருளி**

**அருவாய் மறைபயில் அந்தணனாய் ஆண்டுகொண்ட**

**திருவான தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ**

**விளக்கம்**

உலகிற்கு மூலமாய வித்தாய், உலகிற் கப்பாற்பட்டவனாய், இப்பாலுலகிலே இயற்கை வாசனை பொருந்திய பூப்போன்ற குழலினையுடைய உமையம்மையோடு போந்தருளியும், இரகசியப் பொருளைப் பயிற்றுவிக்கும் அருட் பேராசிரியனாக உருவெடுத்துப் புறத்தே தோன்றியும், உள்ளத்தினுள்ளே அருவாய் நிலவியும், ஆட்கொண்டருளிய, வீட்டிற்குக் காரணமான கடவுளிடமே போய் ரீங்காரஞ் செய்க.

**பாடல் எண் : 15**

**நானும்என் சிந்தையும் நாயகனுக் கெவ்விடத்தோம்**

**தானுந்தன் தையலுந் தாழ்சடையோன் ஆண்டிலனேல்**

**வானும் திசைகளும் மாகடலும் ஆயபிரான்**

**தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ**

**விளக்கம்**

நீண்ட சடைமுடியுடைய பெருமான் சிவமுஞ் சத்தியுமாக வந்து என்னை ஆட்கொள்ளவில்லையாயின். நானும் எனதுள்ளமும். தலைவனாகிய அவனுக்கு எத்துணை தூரமாய இடத்தி லுள்ளோமோ? வானுலகமும் பத்துத் திசைகளும் பெருங்கடல்களும் ஆகிய பெருமானது தேன்துளிக்குஞ் செய்ய திருப்பாத மலர்களிடமே போய் ரீங்காரஞ் செய்க.

**பாடல் எண் : 16**

**உள்ளப் படாத திருஉருவை உள்ளுதலும்**

**கள்ளப் படாத களிவந்த வான்கருணை**

**வெள்ளப் பிரான்எம்பி ரான்என்னை வேறேஆட்**

**கொள்ளப் பிரானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ**

**விளக்கம்**

மனத்தினால் நினைக்க ஒண்ணாத இறைவனது தூய இயல்பைச் சிவஞானத்தாற் காணுதலும், ஒளிப்பின்றித் தெளிவாக மகிழ்ச்சி தரவந்த பேரருள் வெள்ளத் தலைவனாகிய எம்பெருமான் எனக்குத் தனியாக வீடருளும்படி, அவனிடமே போய் ரீங்காரஞ் செய்க.

**பாடல் எண் : 17**

**பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாள்தோறும்**

**மெய்யாக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட**

**ஐயாஎன் ஆருயிரே அம்பலவா என்றவன்றன்**

**செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ**

**விளக்கம்**

நிலையில்லாத பொருள்களை அடைந்து அதன்கண் தினந் தோறும் அநுபவத்தால் ஆழ்ந்து, அவற்றையே நிலையென எண்ணிப் பயனற்றுக்கிடந்த என்னை ஆண்டுகொண்டருளிய தலைவனே, எனது அருமையாய உயிருக்குயிரே, திருச்சிற்றம் பலத்தாடுவானே, என்பன போன்றவற்றை இயம்பி, அவனது செம்மை பொருந்திய தாமரை யடிகளிடமே போய் ரீங்காரஞ் செய்க.

**பாடல் எண் : 18**

**தோலுந் துகிலுங் குழையுஞ் சுருள்தோடும்**

**பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியுஞ்**

**சூலமுந் தொக்க வளையு முடைத்தொன்மைக்**

**கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ**

**விளக்கம்**

புலித்தோலும் (மெல்லிய) ஆடையும், குண்டலமும் வட்டவடிவான தோடும். பால்போன்ற வெள்ளிய திருநீறும் புதிய சந்தனமும், பசுங்கிளியும் முத்தலைவேலுங் தொகுதியான வளையலும் உடைய பழமையான மாதொருபாக வடிவத்தையே கண்டு, மெல்லென ரீங்காரஞ் செய்க.

**பாடல் எண் : 19**

**கள்வன் கடியன் கலதியிவன் என்னாதே**

**வள்ளல் வரவர வந்தொழிந்தான் என் மனத்தே**

**உள்ளத் துறுதுய ரொன்றொழியா வண்ணமெல்லாந்**

**தெள்ளுங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ**

**விளக்கம்**

இவன் வஞ்சகன், (இரக்கமில்லாத) கொடுமையன். கீழ்க்குண முடையோன் என்று என்னை ஒதுக்காமல், அருட் கொடையாளனாகிய கடவுள், பையப்பைய எனது நெஞ்சின் கண்ணே பூரணமாகத்தோன்றி யருளினன். மனத்தின்கணுள்ள இடர்ப்பாடுக ளெல்லாவற்றையும், ஒன்றையாவது தப்பவிடாமல், தெளிவு தந்தொழித்த, திருவடியிடமே போய் ரீங்காரஞ் செய்க.

**பாடல் எண் : 20**

**பூமேல் அயனோடு மாலும் புகலரிதென்று**

**ஏமாறி நிற்க அடியேன் இறுமாக்க**

**நாய்மேல் தவிசிட்டு நன்றாய்ப் பொருட்படுத்த**

**தீமேனி யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ**

**விளக்கம்**

தாமரைப் பூவிலே வீற்றிருக்கும் நான்முகனுந் திருமாலும் வீடு புகுதல் இயலாதென்று தடுமாறி நிற்கவும், அடியேன் நிமிர்ந்து மகிழ்வெய்தி யிருக்கும் வண்ணம், நாய்க்கு மேலான ஆசனமிட்டதுபோல, எனக்கு மேலான ஞான நிலையருளி,

நான் பெருநலமடைதற் பொருட்டு என்னை மதித்தருள் செய்த நெருப்புப் போன்ற செம்மேனியுடையான் பொருட்டே போய் ரீங்காரஞ் செய்க.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | சுந்திரரின் வாழ்க்கை வரலாற்றினை கூறுக. | K4 | CO5 | PO4 |
| 2 | திருவெண்ணெய் நல்லூர்ப் பதிகத்தில் கூறப்படும் செய்தியினை விவரி? | K3 | CO2 | PO2 |
| 3 | திருக்கோளிலிப் பதிகத்தில் இறைவனை எவ்வாறு போற்றுகிறார் என்று கூறுக. | K2 | CO2 | PO1 |
| 4 | மாணிக்கவாசகரின் வரலாற்றினைக் கூறுக. | K4 | CO3 | PO2 |
| 5 | திருவம்மானைப் பதிகத்தில் இடம்பெறும் நிகழ்வினைக் கூறுக. | K2 | CO3 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | திருக்கோத்தும்பி பதிகத்தில் மாணிக்கவாசகர் இறைவனிடம் எவ்வாறு வேண்டுகிறார் என்று கூறுக | K2 | CO1 | PO4 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | ஏழாம் திருமுறையில் இறைவனாகிய சிவனை எவ்வாறு எல்லாம் போற்றுகின்றனர் | K4 | CO4 | PO5 |
| 3 | திருவெண்னெண் நல்லூர்ப் பதிகத்தில் சொல்லப்படும் இறைவனைப் போற்றும் விதத்தினைப் பற்றி எடுத்துரைக்க | k4 | CO5 | PO2 |
| 4 | திருக்கோளிலிப் பதிகத்தில் இறைவனைப் போற்றும் விதம் பற்றி ஆராய்க. | K2 | CO4 | PO1 |
| 5 | திரு அம்மானைப் பதிகத்தில் திருநீலக்கண்டனைப் எவ்வாறு புகழ்கின்றார் என்று கூறுக. | K3 | CO3 | PO3 |

## அலகு - 3

## பெரியாழ்வார் - 3 ஆம் திருமொழி

## தாலப் பருவம்

ஸ்ரீவில்லிபுத்தூரில் கலி 47 வதான உருத்ரோதன வருடம் ஆனி மாதம் சுக்ல பக்ஷம் ஏகாதசி ஞாயிற்றுக் கிழமை சுவாதி நட்சத்திரத்தில் வேதியர் குல தம்பதி முகுந்தாசார்யாருக்கும் பதுமையாருக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. விஷ்ணுசித்தர் என்று பெயரிடப்பட்ட அம்மகவே கருடனின் அம்ஸமாக கருதப்படும் பெரியாழ்வார். இவர் இயல்பாகவே வடபெருங் கோயிலுடையான் ஆன எமபெருமானிடம் பக்தி மிக்கவர். எம்பெருமானுக்கு எந்த தொண்டு செய்யலாம் என்று சிந்தித்த போது கண்ணன் கம்சனின் திருமாலாகாரரிடம் பூக்களை இரந்து அவற்றை சூடி மகிழ்ந்த நிகழ்வால் கவரப் பெற்றார். எனவே மாலை கட்டி சாத்துவதே அவனுக்கு உகந்தது என முடிவெடுத்தார். அதன்படி நந்தவனம் உண்டாக்கி மாலை கட்டி அதை பெருமானுக்கு சாத்தி மகிழ்ந்தார்.

அக்காலத்தில் பாண்டிய மன்னனான ஸ்ரீவல்லபதேவன் ஓர் இரவு நகர்வலம் வருகையில் ஒரு திண்ணையில் உறங்கிக் கொண்டிருந்த ஒரு புதியவனைக் கண்டான். அவனை எழுப்பி ‘‘நீ யார்?’’ என்று கேட்டான். அந்தப் புதியவன் ‘‘ஐயா! நான் ஒரு அந்தணன். கங்கையில் நீராடி வருகிறேன்’’ என்றான். மன்னன் அவனை ‘‘உனக்குத் தெரிந்த நீதி ஏதும் உண்டாகில் சொல்‘‘ என்று கேட்டான். அவனும் ‘‘மழைக்காலத்தின் தேவையை மற்ற எட்டு மாதங்களில், இரவின் தேவையை பகலில், முதுமையின் தேவையை இளமையில், மறுமையின் தேவையை இம்மையில் தேட முயற்சி செய்ய வேண்டும்’’ என்றான். மன்னன் மறுநாள் தன் குலகுருவான செல்வநம்பியிடம் இரவு நடந்தவை சொல்லி ‘‘நமக்கு இப்போது குறையொன்றுமில்லை. மறுமைக்காக நாம் செய்ய வேண்டிய முயற்சி என்ன?’’ என்று கேட்டான்.

செல்வநம்பி ‘‘நாட்டின் சான்றோரைத் திரட்டி அவர் முன் இக்கேள்வியை வைப்போம். சரியான விளக்கம் தருவோருக்கு தக்க பரிசாக பொற்கிழி அளிப்போம்’’ என்றான். மன்னனும் மிகுந்த பொற்காசுகளை கொண்ட பொற்கிழியை ஒரு தோரணத்தில் கட்டி சான்றோரைத் திரட்ட ஆணையிட்டான்.

ஸ்ரீவில்லிப்புத்தூரிலே பெரியாழ்வாரின் கனவில் தோன்றிய எம்பெருமான் கிழியை அறுத்து வாவென்றார். அது வேதாந்த பரமான சான்றோருக்கு நானோ ஏதும் அறியாதவன் என்ற ஆழ்வாரின் வாதத்தை பரமன் ஏற்க மறுத்தான். விழித்தெழுந்து அது விடியற் போது என்றுணர்ந்த ஆழ்வார் இது இறைவன் ஆணை என மதுரைக்குப் புறப்பட்டார்.

மதுரையில் ஆன்றோர் நிரம்பிய மன்னனின் அவையை அடைந்தபோது அரசனும் செல்வநம்பியும் அவரை வரவேற்று பணிந்தனர். அங்கிருந்த மற்ற அறிஞர்கள் வேதங்களின் சாரம் அறியாதவரை வேந்தன் வரவேற்பதா? என்று சலசலத்தனர். என்றாலும் அபிமான துங்கனான செல்வநம்பி மறுமைக்குத் தேவையான மார்க்க தரிசனம் காட்ட ஆழ்வாரை வேண்டினான். ஆழ்வாரும் ஸ்ரீமன் நாராயணனே பரமேட்டி

என்று ஸ்ருதி, ஸ்மிருதி, இதிகாச, புராண மேற்கோள்களால் விளக்கினார். அப்போது கிழிகட்டிய தோரணமானது அவர் முன் வளைந்து கிழியை அறுக்க ஏதுவாக நின்றது. ஆழ்வாரும் வேந்தரும் மாந்தரும் வியக்க விரைந்து கிழியறுத்தார்.

இது கண்ட மன்னனும், நம்பியும், மற்றுள்ள ஆன்றோரும், மக்களும் அவரைப் பணிந்தனர். மன்னன் இவருக்கு பட்டர்பிரான் என்ற விருது கொடுத்து யானை மேலேற்றி ‘‘வேதப்பயன் கொள்ள வல்ல மெய்நாவன் வந்தான்’’ என்ற விருது ஊதச்செயது தானும் தன் பரிவாரங்களும் உடன்வர நகர்வலம் வந்தான். இக்கோலகலத்தைக் காணுமாறு தன் மக்களை அரசன் பணித்தபோது தன்னுடைய பக்தனின் மாட்சிமை காண வந்தாற்போல் ஸ்ரீமன் நாராயணன் கருடன் மீதேறி, பிராட்டியருடன், தனக்குரிய ஆயுதங்கள் தரித்து, பிரம்மா ஆருத்ரன் மற்றும் இந்திரன் முதலான தேவர்கள் துதிக்க காட்சி தந்தார். ஆழ்வார் எமபெருமானின் கண்ணுக்கினிய பேரழகைக் கண்டு மனமகிழ்ச்சி அடைந்தாலும், அவர் மேல் கண்ணேறு பட்டு விடுமோ எனக் கருதி, தான் அமர்ந்திருந்த யானையின் கழுத்து மணியைத் தாளமாகக் கொண்டு, ‘‘பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரமாண்டு பலகோடி நூறாயிரம்’’ என வாழ்த்தி திருப்பல்லாண்டு பாடி அருளினார். மன்னன் மற்றுள்ள பக்தர்களையும் தன்னோடு பாடச்செய்தார்.

மனமகிழ்ந்து பணிந்த மன்னனை வாழ்த்தினார். அவன் தந்த பரிசில்களை ஏற்று வில்லிபுத்தூர் திரும்பினார். பொற்கிழியையும் பரிசில்கனையும் வட பெருங் கோயிலுடையானுக்குக் கொடுத்து விட்டு எப்போதும் போல் மாலை கட்டி சாத்தும் தொண்டைத் தொடர்ந்தார். தன் மனத்துக்கினிய அவதாரமான கண்ண பிரானின் பிறப்பு, வளர்ப்பு, ஆனிரை மேய்த்தல், தீராத விளையாட்டுக்கள் மற்றும் பக்தர்களைக் காக்கும் அவன் பேரருட் குணங்களை பெரியாழ்வார் திருமொழி எனும் திவ்ய பிரபந்தமாக உலகம் உய்யப் பாடி அருளினார்.

**பாடல் எண்: 44**

**‘‘மாணிக்கம் கட்டி, வயிரம் இடை கட்டி**

**ஆணிப் பொன்னால் செய்த, வண்ணச் சிறுத்தொட்டில்**

**பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்**

**மாணிக் குறளனே! தாலேலோ!**

**வையம் அளந்தானே! தாலேலோ!"**

**விளக்கம்**

இரண்டு பக்கங்களிலும் மாணிக்கக் கல்லையும் நடுவில் வைரத்தையும் ஒழுங்குபடக் கட்டிப், பசும் பொன்னாலே செய்த அழகிய சிறிய தொட்டிலை உனக்குப் பிரமன் விரும்பி அனுப்பினான். மாவலியிடம் வாமன வடிவில் சென்று மண் அளந்து பெற்ற நெடுமாலே, தாலேலோ!

**பாடல் எண்: 45**

**"உடையார் கனமணியோடு, ஒண் மாதுளம்பூ**

**இடை விரவிக் கோத்த, எழிற் தெழ்கினோடு**

**விடை ஏறு காபாலி, ஈசன் விடுதந்தான்**

**உடையாய்! அழேல் அழேல் தாலேலோ!**

**உலகம் அளந்தானே! தாலேலோ!"**

**விளக்கம்**

எண்ணத்தக்க விடை ஏறி வரும் சுபாலி, ஈசன் - சிவபிரான் கண்ணன் இடுப்பில் அணிவதற்காகப் பொன் மணியோடு நடுநடுவே கலந்து கோத்த இடைச்சுரிகையோடும்

கூடியுள்ள அழகிய மாதுளம் பூக்கோவையினை அனுப்பியுள்ளான். எல்லாம் உடையவனே, அழாதே ஏற்றுக்கொள். உலகம் அளந்தவனே! தாலேலோ!

**பாடல் எண்: 46**

**"என்தம் பிரானார், எழிற்திருமார்வர்க்குச்**

**சந்தம் அழகிய, தாமரைத் தாளர்க்கு**

**இந்திரன்தானும், எழில் உடைக் கிண்கிணி**

**தந்து உவனாய் நின்றான் தாலேலோ!**

**தாமரைக் கண்ணனே! தாலேலோ!"**

**விளக்கம்**

எனக்குத் தலைவனாய், அழகிய திருமார்பையுடையனாய், செந்தாமரைத் திருவடிகளையுடையவற்கு, மூன்று உலகங்களையும் ஆளும் இந்திரன் அழகுடைய கிண்கிணியைத் தனது காணிக்கையாகக் கொடுத்து நின்றான். காண்கிறவர்களைக் களிக்கச் செய்யும் தாமரை போல் திருக்கண்களை உடையவனே! தாலேலோ!

**பாடல் எண்: 47**

**"சங்கின் வலம்புரியும், சேவடிக் கிண்கிணியும்**

**அங்கைச் சரிவளையும், நாணும் அரைத்தொடரும்**

**அங்கண் விசும்பில், அமரர்கள் போத்தந்தார்**

**செங்கண் கருமுகிலே! தாலேலோ!**

**தேவகி சிங்கமே! தாலேலோ!"**

**விளக்கம்**

சிறந்த வலம்புரிச்சங்கையும், சிவந்த திருவடிகளிலே சதங்கை யையும், அழகிய திருக்கைக்கு முன்கை வளையையும், திருத்தோள் வளைகளையும், திருமார்புக்கு மதாணி நாணையும், அரை வடத்தையும், அழகிய விண்ணவர் அனுப்பினர். சிவந்த கண் சேர்ந்த கரிய திருமேனியனே! தாலேலோ! தேவகி வயிற்றில் பிறந்து, சிங்கக் குட்டி போல் செருக்கையுடையவனே! தாலேலோ!

**பாடல் எண்: 48**

**"எழில் ஆர் திருமார்வுக்கு, ஏற்கும் இவை என்று**

**அழகிய ஐம்படையும், ஆரமும் கொண்டு**

**வழு இல் கொடையான், வயிச்சிரவணன்**

**தொழுது உவனாய் நின்றான் தாலேலோ!**

**தூமணி வண்ணனே! தாலேலோ!"**

**விளக்கம்**

அழகுள்ள திருமார்புக்குச் சேரும் ஐம்படைத் தாலியையும் முத்துவடத்தையும் எடுத்துக்கொண்டு கைம்மாறு கருதாக் குற்றமில்லாத கொடையையுடை கூப்பிள் அங்கீகரிக்க வேண்டும்'' என்று கை கூப்பிக் கொண்டு இடையில் வடிவையுடையவனே! நின்றான். நீலமணி போலேயிருக்கிற தாலேலோ!

**பாடல் எண்: 49**

**"ஓதக் கடலின், ஒளிமுத்தின் ஆரமும்**

**சாதிப் பவளமும், சந்தச் சரிவளையும்**

**மா தக்க என்று, வருணன் விடுதந்தான்**

**சோதிச் சுடர் முடியாய்! தாலேலோ!**

**சுந்தரத் தோளனே! தாலேலோ!"**

**விளக்கம்**

அலை அடர்ந்த கடலினின்றும் உண்டான ஒளி முத்துக்களா லான ஆரமும், நல்ல உயர்ந்த பவழ வடமும், அழகுள்ள முன்கை வளைகளும், தோள் வளைகளும் மதிப்புடையன என்று வருணன் அனுப்பியுள்ளான். உலகண்ணலே! ஒளிமய முடியுடையவனே! தாலேலோ! நகைகள் மிகை என்று சொல்லும்படியான அழகிய திருத்தோள்களையுடையவனே! தாலேலோ!

**பாடல் எண்: 50**

**"கான் ஆர் நறுந்துழாய், கைசெய்த கண்ணியும்**

**வான்ஆர் செழுஞ்சோலைக் கற்பகத்தின் வாசிகையும்**

**தேன்ஆர் மலர்மேல், திருமங்கை போத்தந்தாள்**

**கோனே! அழேல் அழேல் தாலேலோ!**

**குடந்தைக் கிடந்தானே! தாலேலோ!"**

**விளக்கம்**

காட்டில் வளர்கையாலே நறுமணத்தோடு கூடிய திருத்துழாய் கொண்டு கட்டிய திருமாலையும், வான் நிறைந்து எழிற் சோலையிலுள்ள கற்பகப் பூவாலே செய்த திருநெற்றி மாலையும், தேன் மாறாத தாமரை மலர்மேல் உறைகின்ற இளமையும் அழகும் வாய்ந்த திருமங்கை வரவிட்டாள். மண் விண்ணுக்குத் தலைவனே! அழேல் அழேல், மேன்மைக்கு எதிர்த்தட்டான நீர்மை தோன்றக் குடந்தையிலே கண்வளர்பவனே! தாலேலோ!

**பாடல் எண்: 51**

**"கச்சொடு பொற்சுரிகை, காம்பு கனகவளைமூ**

**உச்சி மணிச்சுட்டி, ஒண்தாள் நிரைப் பொற்பூமூ**

**அச்சுதனுக்கு என்று, அவனியாள் போத்தந்தாள்மூ**

**நச்சுமுலை உண்டாய்! தாலேலோ!**

**நாராயணா! அழேல் தாலேலோ!“**

**விளக்கம்**

இடுப்பில் உடுக்கும் பட்டு நழுவாமல் கட்டும் துணியும், சுச்சில் செருகப் பொன்னாலான சிறு கத்தியும், அரைக்குச் சாத்தும் சிறுக்காம்பன் சேலையும், தோள்களுக்கு அணிய பொன்வளையும், முடியின் உச்சியில் சாத்த மணி இழைத்த சுட்டியும், காம்புடைய ஒழுங்கான பொற்பூவும், அடியார்களை எக்காலமும் நழுவ விடாதவனுக்கென்று நிலமகள் வரவிட்டாள். பூதனையை முடிக்க முலையுண்டவனே! தாலேலோ, நாராயணனே தாலேலோ, அழாதே.

**பாடல் எண்: 52**

**“மெய் திமிரும் நானப் பொடியொடு, மஞ்சளும்**

**செய்ய தடங்கண்ணுக்கு, அஞ்சனமும் சிந்துரமும்**

**வெய்ய கலைப்பாகி, கொண்டு உவளாய் நின்றாள்**

**ஐயா! அழேல் அழேல் தாலேலோ!**

**அரங்கத்து அணையானே! தாலேலோ!”**

**விளக்கம்**

திருமேனியிலே பூசிடச் சந்தனம், கத்தூரி, கற்பூரம், மஞ்சள் முதலிய பொடிகளையும், சிவந்து பரந்து நீண்ட கண்களுக்கு மையையும், நெற்றி அழகு பெறச் சிந்துரமும் கொண்டு வந்து, விரும்பும் கலைகளைத் தன் நாவிலே கொண்டு

நடத்துபவளான கலைமகள் அதோ நிற்கிறாள். திருவரங்கத்தில் படுக்கையாக வுடையவனே! தாலேலோ! தாலேலோ!

**பாடல் எண்: 53**

**"வஞ்சனையால் வந்த, பேய்ச்சி முலை உண்ட**

**அஞ்சன வண்ணனை, ஆய்ச்சி தாலாட்டிய**

**செஞ்சொல் மறையவர் சேர், புதுவைப் பட்டன் சொல்**

**எஞ்சாமை வல்லவர்க்கு, இல்லை இடர்தானே"**

**விளக்கம்**

தாய் வடிவுடனே வந்த பூதனையின் முலையைக் கண்ணன் சுவைத்துண்டான், விரோதி ஒழிந்தாள் என்கிற மகிழ்வில் மைவண்ணனை, அன்னை யசோதை தாலாட்டின படிகளைச், செவ்விய சொற்கள் நிறைந்ததாய் பெரியாழ்வார் அருளிய இப்பாசுரங்களை ஓதவல்லவர்களுக்கு ஒரு துயரமுமில்லை.

**நம்மாழ்வார் - 3 ஆம் திருமொழி**

**திருவல்லிக்கேணி**

இவரின் ஊர் ஆழ்வார்திருநகரி எனப்படும் திருக்குருகூர் இவர் இறைவனின் அம்சமாகப்பிறந்தவர் பெற்றோர் ஸ்ரீ காரியார், உடைய நங்கை பிறந்தது முதல் 16 வயது வரை ஊமையாக இருந்தவர் இவர் தவம் இருந்த மரத்தை "திருப்புளி ஆழ்வார்" என்பர் இவரின் திருவாய்மொழியை "திராவிட வேதம், திராவிட வேத சாரம், செந்தமிழ் வேதம், ஆன்றதிருமுறைகள் ஆயிரம்" எனப்போற்றுவர் இவரின் நான்கு நூல்களையும் "சதுர்வேதத்திற்கு நிகர்" எனக்கூறுவர் இதன் வியாக்கியானங்கள்

‘‘பகவத விஷயம்’’ எனப் போற்றப்படுகிறது இவரின் பாடல்கள் இசையோடு பாடப்பட்டவை

நம்மாழ்வார் உடல்(அவையவி) மற்ற 11 ஆழ்வார்களும் உறுப்பு (அவையம்) போன்றவர்கள் சைவத்திற்கு மாணிக்கவாசகர் போன்று வைணவத்திற்கு நம்மாழ்வார் நம்மாழ்வாரையே தெய்வமாகப் போற்றியவர் ஸ்ரீ மதுரகவியாழ்வார், மானிடம் பாடிய ஆழ்வார், ஸ்ரீ நம்மாழ்வார் மானிடம் பாடிய நாயன்மார், ஸ்ரீ சுந்தரர், மலையை ‘‘நெடுமால்’’ எனவும், மழையை ‘‘நாராயணன் வருகை’’ எனவும், நிலவை ‘‘ஒளிமணிவண்ணா’’ எனவும் பாடியவர்

திரு.வி.கநம்மாழ்வாரை, ‘‘நம்மாழ்வார் ஒரு நாட்டிற்கோ, ஒரு சமயத்திற்கோ, ஓர் இனத்திற்கோ மட்டும் உரியவர் அல்லர். அவர் எல்லா நாட்டிற்கும், எல்லாச் சமயத்திற்கும், எல்லா இனத்திற்கும் உரியவர். எல்லோரும் ‘‘நம் ஆழ்வார்’’ எனப்போற்றும் ஒரு பெரியாரை அளித்த தமிழ்நாட்டை மனத்தால் நினைத்து, வாயால் வாழ்த்தி, கையால் தொழுகிறேன்’’ என்றார். வேறு பெயர்கள்: சடகோபர், நம்மாழ்வார், பராங்குசர் மாறன், ஆறு அங்க பெருமான், குருகைக்காவலன், வகுளாபரணன், தமிழ் மாறன் வேதம், தமிழ் செய்த மாறன், காரிமாறன், வைணவத்து திராவிட சிசு

படைப்புகள்: திருவிருத்தம் - ஸ்ரீ ரிக் வேதம், திருவாசிரியம்- ஸ்ரீ யசூர் வேதம், திருவாய்மொழி - ஸ்ரீ சாமவேதம், பெரிய திருவந்தாதி - ஸ்ரீ அதர்வணவேதம்.

**பாடல் எண்: 1068**

**வில்பெரு விழவும் கஞ்சனும் மல்லும்,**

**வேழமும் பாகனும் வீழச்**

**செற்றவன் தன்னைப் புரம் எரி செய்த,**

**சிவன் உறு துயர் களை தேவை**

**பற்றலர் வீயக் கோல் கையில் கொண்டு,**

**பார்த்தன் தன் தேன்முன் நின்றானை**

**சிற்றவை பணியால் முடி துறந்தானை,**

**திருவல்லிக்கேணிக் கண்டேனே.**

**விளக்கம்**

வில்வேள்வியும், அதை நிகழ்த்திய கம்சனும், அவன் துணை மல்லர்களும், யானையும், அதன் பாகனும் வீழச் செய்தவனை, திரிபுர மெரித்த சிவபெருமானுடைய துன்பத்தைத் தீர்த்தவனைப், பகைவர்கள் மடியுமாறு அருச்சுனனது தேரில் நின்று அம்புகளைத் தன் மார்பில் ஏற்றுக் காத்தவனைச், சிற்றன்னை ஆணையிட அரசு துறந்தவனைத் திருவல்லிக்கேணியில் கண்டேன்.

**பாடல் எண்: 1069**

**வேதத்தை வேதத்தின் சுவைப் பயனை,**

**விழுமிய முனிவர் விழுங்கும்**

**கோது இல் இன் கனியை நந்தனார் களிற்றை,**

**குவலயத்தோர் தொழுது ஏத்தும்**

**ஆதியை அமுதை என்னை ஆள் உடை**

**அப்பனை, ஒப்பவர் இல்லா**

**மாதர்கள் வாழும் மாட மா மயிலைத்**

**திருவல்லிக்கேணிக் கண்டேனே.**

**விளக்கம்**

வேதத்தைச் செல்வமாக உடையவனை, வேதங்களால் சொல்லப் படும் குணங்களின் சுவைக்குத் தக்க பயனைத் தருபவனை, முனிவர்களுக்குக் கோதில்லாத இனிய கனி போல் இருப்பவனை நந்தகோபருக்கு இனிமையாக இருப்பவனை,

ஞாலத்திலுள்ளவாள் வாழ்த்தும் காரணனை, என்னை அடிமை கொள்ளும் அப்பனை. ஒப்பில்லாத மாதர்கள் வாழும், மாடங்கள் அடர்ந்த மயிலாப்பூரைப் படைவீடாக உடைய திருவல்லிக்கேணியில் நான் கண்டேன்.

**பாடல் எண்: 1070**

**வஞ்சனை செய்யத் தாய் உரு ஆகி,**

**வந்த பேய் அலறி மண் சேர**

**நஞ்சு அமர் முலைஊடு உயிர் செக உண்ட,**

**நாதனை தானவர் கூற்றை**

**விஞ்சை வானவர் சாரணர் சித்தர்**

**வியந்துதி செய்யப் பெண் உரு ஆகி**

**அம்சுவை அமுதம் அன்று அளித்தானை,**

**திருவல்லிக்கேணிக் கண்டேனே.**

**விளக்கம்**

தன்னை வஞ்சனையால் முடிப்பதாகக் கருதி, தாயின் வடிவு கொண்டு வந்த பூதனை கதறிக்கொண்டு நிலத்திலே மடிந்து விழுமாறு நஞ்சு படர்ந்த முலை வழியே அவளது உயிரை உண்டவனை, உலகுக்கு உயிரானவனை, அசுரர்களுக்குக் காலனானவனை, வித்யாதரர் சாரணர் சித்தர் உள்பட தேவர்கள் வியந்து ஏந்திப் போற்றிட, பெண்ணுருவைக் கொண்டு தேவர்கள் உண்ணுமாறு சாவாமருந்து அளித்த திருமாலைத் திருவல்லிக் கேணியில் கண்டேன்.

**பாடல் எண்: 1071**

**இந்திரனுக்கு என்று ஆயர்கள் எடுத்த,**

**எழில் விழவில் பழ நடைசெய்**

**மந்திர விதியில் பூசனை பெறாது,**

**மழை பொழிந்திடத் தளர்ந்து ஆயர்**

**எந்தம்மோடு இனஆநிரை தளராமல்,**

**எம் பெருமான் அருள் என்ன**

**அந்தம் இல் வரையால் மழை தடுத்தானை,**

**திருவல்லிக்கேணிக் கண்டேனே.**

**விளக்கம்**

ஆண்டுக்கு ஒருமுறை இந்திர விழா நடைபெறாமையால், இந்திரன் சினந்து கல் மழையைப் பெய்வித்தான் இதனால் இடையர் மனந்தளர்த்து, ‘‘பசுக்களுக்குக் காவலான எங்களையும் பசுத் திரள்களையும் துன்பப்படாமல் கண்ணனே! காப்பாற்றியருள் வேணும்’’ என்று இறைஞ்ச, அப்போது அளவிட முடியாத பெரிய கோவர்தன மலையைக் குடையாகக் சுவித்து மழையைத் தடுத்த கோவிந்தனைத் திருவல்லிக்கேணியில் கண்டேன்.

**பாடல் எண்: 1072**

**இன் துணைப் பதுமத்து அலர்மகள் தனக்கும்**

**இன்பன், நல் புவி தனக்கு இறைவன்**

**தன் துணை ஆயர் பாவை நப்பின்னை**

**தனக்கு இறை, மற்றையோர்க்கு எல்லாம்**

**வன் துணை பஞ்ச பாண்டவர்க்கு ஆகி,**

**வாய் உரை தூது சென்று இயங்கும்**

**என் துணை எந்தை தந்தை தம்மானை,**

**திருவல்லிக்கேணிக் கண்டேனே.**

**விளக்கம்**

நெஞ்சுக்கினிய துணையாக இருக்கும் மலர்மகள் பெரிய பிராட்டியாருக்கு இன்பனாய், பொறுமைக்குச் சிகரமான நிலமகளுக்குத் தலைவனாய், ஆயர்குல அழகிய நப்பின்னைக்குக் காதற் கேள்வனாய், பிறர்க்கு வலிய வரும் துணைவனாய். பாண்டவர்களுக்காக அவர்கள் சொல்லிய மொழிகளைத் தூதில் சென்று மொழிந்தவனை, எனக்குத் துணையென்றுதான் அறிவித்த பெருமானைத் திருவல்லிக்கேணியில் கண்டேன்.

**பாடல் எண்: 1073**

**அந்தகன் சிறுவன் அரசர் தம் அரசற்கு**

**இளையவன், அணி இழையைச் சென்று**

**எந்தமக்கு உரிமை செய் எனத் தரியாது,**

**எம் பெருமான்! அருள் என்ன**

**சந்தம் அல் குழலாள் அக்கண் நூற்றுவர்தம்,**

**பெண்டிரும் எய்தி நூல் இழப்ப**

**இந்திரன் சிறுவன் தேர் முன் நின்றானை,**

**திருவல்லிக்கேணிக் கண்டேனே.**

**விளக்கம்**

பிறவிக் குருடனின் மகன் அரசன் துரியோதனனின் தம்பி அணிகலன் அணிந்த திரௌபதியிடம் சென்று, ‘‘சூதிலே உன்னையும் தோற்றார்கள் ஆதலால் நீ எமக்கு

இழிதொழில் செய்வாய்'' என்று கூறினான். இவள், "கண்ணா, காப்பாற்று" என்று கதறினாள். இவள் அடைந்த துயரைத் தீர்க்கப் பெருமான் துரியோதனாதியர் மனைவிமார் மங்கல நாணை இழக்குமாறு அருச்சுனன் தேர் முனனே நின்று சாரதியானான். இவ்வைத் திருவல்லிக்கேணியில் கண்டேன்.

**பாடல் எண்: 1074**

**பரதனும் தம்பி சத்துருக்கனனும்,**

**இலக்குமனோடு மைதிலியும்**

**இரவும் நன் பகலும் துதி செய்ய நின்ற,**

**இராவணாந்தகனை எம்மானை**

**குரவமே கமழும் குளிர் பொழிலூடு,**

**குயிலொடு மயில்கள் நின்று ஆல**

**இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத்,**

**திருவல்லிக்கேணிக் கண்டேனே.**

**விளக்கம்**

பரதனும், சத்துருக்கனனும், இளையபெருமாளும், மிதிலைப் பிராட்டியும் ஒருங்கே கண்டு துதி செய்ய நின்றவனாய். இராவணனுக்குக் காலனான திருமகனை, குரவ மலர்கள் குளிர்ந்து மணக்கும் கண்ணுக்கு இனிய சோலைகளிலே குயில்களும் மயில்களும் களித்து ஆட, சோலைச் செறிவாலே செங்கதிர்கள் நுழைந்தறியாத திருவல்லிக்கேணியில் கண்டேன்.

**பாடல் எண்: 1075**

**பள்ளியில் ஓதி வந்த தன் சிறுவன்,**

**வாயில் ஓர் ஆயிரம் நாமம்**

**ஒள்ளிய ஆகிப் போத ஆங்கு அதனுக்கு,**

**ஒன்றும் ஓர் பொறுப்பு இலன் ஆகி**

**பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண் புடைப்ப,**

**பிறை எயிற்று அனல் விழி பேழ் வாய்**

**தெள்ளிய சிங்கம் ஆகிய தேவை,**

**திருவல்லிக்கேணிக் கண்டேனே.**

**விளக்கம்**

பள்ளியிலே கலைகள் பயின்று, தன் முன் நிற்கும் இளம்பிள்ளை பிரகலாதன் வாயிலே இறைவனின் ஆயிரம் பெயர்களைக் கூற, அது தன் மனத்துக்கு இன்னாததாலே, இரணியன் அந்தச் சொல்லை ஏற்கப் பொறுமையில்லாது மகனிடம் சினந்து, “எங்குமுள்ளான் இத்தூணில் உள்ளானோ?” என்று அட்டப் பிறைப் பற்களும், தழல் சிவந்த கண்களும், பெரிய வாயும் வாய்ந்து, நரமடங்கலாய்த் கானரிலிருந்து வெளிவந்த பெருமானைத் திருவல்லிக்கேணியில்

**பாடல் எண்: 1076**

**மீன் அமர் பொய்கை நாள்மலர் கொய்வான்,**

**வேட்கையினோடு சென்று இழிந்த**

**கான் அமர் வேழம் கைஎடுத்து அலற,**

**கரா அதன் காலினைக் கதுவ**

**ஆனையின் துயரம் தீரப் புள் ஊர்ந்து,**

**சென்று நின்று ஆழிதொட்டானை**

**தேன் அமர் சோலை மாட மா மயிலைத்**

**திருவல்லிக்கேணிக் கண்டேனே.**

**விளக்கம்**

மீன்கள் நிறைந்த பொய்கையில் தாமரை மலர்களைப் பெருமான் திருவடிகளில் வைக்கக் கொய்ய இறங்கையில், காட்டிலே எங்கும் திரியவல்ல கசேந்திரனை, அப்பொய்கையில் வாழ்ந்த முதலை அதன் காலைப் பற்றியதால் துதிக்கையைத் தலைக்கு மேலே தூக்கிப் பிளிறியது. ஆனையின் இத்துயரம் தீரப் பெருமான் கருடன் மேலேறி விரைந்து திருவாழியை விடுத்து முதலையைக் கொன்றான். இப்பெருமானைத் தேன் மாறாத சோலைகளால் சூழப்பட்ட திருவல்லிக்கேணியில் கண்டேன்.

**பாடல் எண்: 1077**

**மன்னு தண் பொழிலும் வாவியும் மதிளும்,**

**மாட மாளிகையும் மண்டபமும்**

**தென்னன் தொண்டையர்கோன் செய்த நல் மயிலைத்,**

**திருவல்லிக்கேணி நின்றானை**

**கன்னி நல் மாட மங்கையர் தலைவன்,**

**காமரு சீர்க் கலிகன்றி**

**சொன்ன சொல் மாலை பத்து உடன் வல்லார்,**

**சுகம் இனிது ஆள்வர் வான்உலகே.**

**விளக்கம்**

குளிர்ந்துள்ள பொழில்களும், நீர் நிலைகளும், மதிள்களும், மாட மாளிகைகளும், மண்டபங்களும் நலமெல்லாம் வாய்ந்த மயிலாப்பூரைப் படைவீடாக உடையதான திருவல்லிக்கேணியில் நின்றவனைத் திருமங்கை ஆழ்வார் கலிகன்றி அருளிச் செய்த பத்துப் பாட்டுகளையும் ஓதவல்லார், வானின்பம் பெறுவர்.

## நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்

## ஆண்டாள் அருளிச் - செய்த நாச்சியார் திருமொழி

### தனியன்கள்

### (முதல் வானமாலை ஜீயர் அருளிச் செய்தது, பாண்டிய நாட்டில் வழக்கில் உள்ளது)

பிறந்த ஊர் ஸ்ரீ ஸ்ரீவில்லிபுத்தூர் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் இவர் பூமகள் அம்சமாகப்பிறந்தவர் இவர் துளசி வனத்தில்கண்டெடுக்கப்பட்டார் இவருக்கு பெரியாழ்வார் இட்ட பெயர் ஸ்ரீ கோதை இறைவனுக்கும்ஆண்டாளுக்கும் திருமணம் நடைபெற்ற இடம் ஸ்ரீ திருவரங்கம் இவரின் பாடல்களைப் ‘‘பள்ளமடை’’ என்றும், பிற ஆழ்வார்களின் பாடல்களை ‘‘மேட்டுமடை’’ என்றும் குறிப்பிடுவர் திருப்பாவை: திருப்பாவையை ‘‘வேதம் அனைத்திற்கும் வித்து’’ என்றவர் ஸ்ரீ இராமானுஜர் நாலாயிரதிவ்வியப்பிரபந்தத் தொகுப்பில் மூன்றாவது பிரபந்தமாக வைக்கப்பட்டிருப்பது திருப்பாவை. பாவை என்பது சிற்றிலக்கியவகைகளுள் ஒன்று. பாவை என்பது இருமடியாகு பெயர். திருப்பாவை பாக்கள் முப்பதும் ˙வெண்டளையால் வந்த எட்டடி நாற்சீர ˙கொச்சகக் கலிப்பா வகையை சார்ந்தவை.

இவரின் திருப்பாவை, பாவை நூல்களில் காலத்தால் முற்பட்டது. திருப்பாவைக்கு ஆண்டாள் இட்ட பெயர் ஸ்ரீ சங்கத் தமிழ் மாலை முப்பது சிறப்பு பெயர்: கோதை(பெரியாழ்வார் இட்ட பெயர்), சூடிக்கொடுத்தசுடர்க்கொடி, நாச்சியார், ஆண்டாள், படைப்புகள், திருப்பாவை, நாச்சியார் திருமொழி

### முதல் திருமொழி

### தைத்திங்களில் காமனை வழிபடல்

**பாடல் எண்: 504**

தை ஒரு திங்களும் தரை விளக்கித்,

தண் மண்டலம் இட்டு மாசி முன்னாள்

ஐய நுண் மணல் கொண்டு தெரு அணிந்து,

அழகினுக்கு அலங்கரித்து அனங்கதேவா!

உய்யவும் ஆம்கொலோ? என்று சொல்லி,

உன்னையும் உம்பியையும் தொழுதேன்

வெய்யது ஓர் தழல் உமிழ் சக்கரக் கை,

வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே.

**விளக்கம்**

“காமவேளே! தை மாதம் முழுவதும் நீ வரும் இடத்தை அழகாத்தை குசிங்கால் றெய எனல் காலத்தையிட்டுக் கும்பமதை வளர் பிறையில் சின்னஞ் சிறிய மணல்களினால் நீ வரும் தெருவைத் பென்னம் பெரு அலங்காரம் செய்து, வாழமுடியுமோ எனக் கருதி காமனாகிய உன்னையும், உன் தம்பியான சாமனையும் தொழுதேன். கொடியதாய் ஆழியைத் திருக்கையில் ஏந்திய திருவேங்கடவனுக்கு என்னை மருவவிதிக்கவேணும்.

**பாடல் எண்: 505**

வெள்ளை நுண் மணல்கொண்டு தெரு அணிந்து,

வெள்வரைப்பதன் முன்னம் துறை படிந்து

முள்ளும் இல்லாச் சுள்ளி எரி மடுத்து,

முயன்று உன்னை நோற்கின்றேன் காமதேவா!

கள் அவிழ் பூங்கணை தொடுத்துக்கொண்டு,

கடல்வண்ணன் என்பது ஓர் பேர் எழுதி

புள்ளினை வாய் பிளந்தான் என்பது ஓர்,

இலக்கினிற் புக என்னை எய்கிற்றியே.

**விளக்கம்**

காமவேளே! வெளுத்த மாத்தூளைக்கொண்டு நீ வரும் வழியை அணிசெய்து, கிழக்கு வெளுப்பதற்கு முன் நீர்த்துறையிலே முழுகி எறும்பும் முள்ளும் இல்லாத சுள்ளிகளைத் தீயிலே இட்டு, உன்னைப்பற்றிப் பயன்பெற நோன்பு நோற்கிறேன் தேன்பெருகும் மலர் அம்புகளை வில்லில் தொடுத்துக்கொண்டு,கடல் நிறத்தையுடையவன் என்கிற திருப்பெயரை ஓர் அம்பிலே எழுதிக்கொண்டு, பகாசுரன் வாயைக் கிழித்து ஒழித்தவன் என்னும் இலக்கினில் நான் புகுமாறு நீ செய்ய வேணும்.

**பாடல் எண்: 506**

மத்த நன் நறுமலர் முருக்க மலர்

கொண்டு, முப்போதும் உன் அடி வணங்கித்

தத்துவம் இலி என்று நெஞ்சு எரிந்து,

வாசகத்து அழித்து உன்னை வைதிடாமே

கொத்து அலர் பூங்கணை தொடுத்துக்கொண்டு,

கோவிந்தன் என்பது ஓர் பேர் எழுதி

வித்தகன் வேங்கட வாணன் என்னும்,

விளக்கினிற் புக என்னை விதிக்கிற்றியே.

**விளக்கம்**

காமனே! மணமிக்க ஊமத்த மலர்களையும், முருக்க மலர் களையுங்கொண்டு, காலை, பகல், மாலை ஆகிய மூன்று வேளையும் நான் உன் அடிகளிலே பணிந்தும் பயனைப் பெறாது, இவன் பொய்த் தெய்வம் என்று மனங் கொதித்து உன் சிறப்பை அழித்து உன்னை வைதிடாதபடி, கொத்தாக அலரும் மலர்க் கணைகளைத் தொடுத்துக் கொண்டு, கோவிந்தன் பெயரை நெஞ்சில் வரித்து, வியக்கத்தக்க திருவேங்கடத்தான் எனும் விளக்கினில் நான் சேரும்படி நீ செய்யவேணும்.

**பாடல் எண்: 507**

**சுவரில் புராண! நின் பேர் எழுதிச்,**
**சுறவ நற் கொடிகளும் துரங்கங்களும்**
**சுவரிப் பிணாக்களும் கருப்பு வில்லும்,**
**காட்டித் தந்தேன் கண்டாய் காமதேவா!**
**அவரைப் பிராயம் தொடங்கி, என்றும்**
**ஆதரித்து எழுந்த என் தட முலைகள்**
**துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்,**
**தொழுது வைத்தேன் ஒல்லை விதிக்கிற்றியே.**

**விளக்கம்**

காமதேவா! கண்ணனை நினைத்தால் நின் பேர் மறக்குமென்று சுவரில் உன்னுடைய பெயர் வரைந்தேன். சுறவமீன் கொடிகளையும் குதிரைகளையும், சாமரம் வீசும் பெண்களையும், கரும்பு வில்லையும் உனக்குரியதாகக் காட்டிக் கொடுத்தேன். இளம் பருவம் தொடங்கி விரும்பிக் கிளர்ந்த என் பருத்த முலைகள், துவாரகைத் தலைவனை நுகரத்தக்கவை என்று உன்னை வணங்கினேன். நீ விரைவாக என்னை அவனோடு சேர்க்க வேண்டும்.

**பாடல் எண்: 508**

**வானிடை வாழும் அவ் வானவர்க்கு,**

**மறையவர் வேள்வியில் வகுத்த அவி**

**கானிடைத் திரிவது ஓர் நரி புகுந்து,**

**கடப்பதும் மோப்பதும் செய்வது ஒப்ப**

**ஊனிடை ஆழி சங்கு உத்தமர்க்கு என்று,**

**உன்னித்து எழுந்த என் தட முலைகள்**

**மானிடவர்க்கு என்று பேச்சுப் படில்,**

**வாழகில்லேன் கண்டாய் மன்மதனே!**

**விளக்கம்**

தேவர்களுக்காகக் கொடுக்கும் புனித வேள்விப் பொருளைக் காட்டிலே திரிகின்ற நரி புகுந்து அதனை முகர்வதையும், சுவைப்பதையும் போல், திருக்கரங்களிலே வாழியையும், சங்கையும் தரித்திருக்கிற எம்பெருமானுக்கு என்று கிளர்ந்த என் பருத்த முலைகள், மனிதர் நுகர்வதற்காக என்றொரு பேச்சு எழுமாயின், நான் உயிர் வாழ்ந்திருக்கமாட்டேன்.

**பாடல் எண்: 509**

**உருவு உடையார் இளையார்கள் நல்லார்,**

**ஒத்து வல்லார்களைக் கொண்டு வைகல்**

**தெருவிடை எதிர்கொண்டு, பங்குனி நாள்**

**திருந்தவே நோற்கின்றேன் காமதேவா!**

**கருவுடை முகில் வண்ணன் காயாவண்ணன்,**

**கருவிளை போல் வண்ணன் கமல வண்ணத்**

**திரு உடை முகத்தினில் திருக் கண்களால்,**

**திருந்தவே நோக்கு எனக்கு அருள், கண்டாய்.**

**விளக்கம்**

காமதேவா! வடிவுடையராய், இளையராய் காமநூல் புலமை மிக்கவர் முன்னிட்டு, நாள்தோறும் நீ வரும் வழியிலே நிலை மாதத்துத் திருநாளில் தெளிவுடனே உனை நோற்கிறேன் கார்முகில் வடிவும், காயாம்பூ நிறமும், காக்கணம்பூ பளபளப்பும் வாய்ந்தவன், நான் காமுறும் பெருமான் தனது செந்தாமரைத் திருமுகத்திலுள்ள திருக்கண்களாலே என்னை நோக்கி அருளும் வழி செய்க!

**பாடல் எண்: 510**

**காய் உடை நெல்லொடு கரும்பு அமைத்து,**

**கட்டி அரிசி அவல் அமைத்து**

**வாய் உடை மறையவர் மந்திரத்தால்,**

**மன்மதனே! உன்னை வணங்குகின்றேன்**

**தேயம் முன் அளந்தவன் திரிவிக்கிரமன்,**

**திருக்கைகளால் என்னைத் தீண்டும் வண்ணம்**

**சாய் உடை வயிறும் என் தட முலையும்,**

**தரணியில் தலைப்புகழ் தரக்கிற்றியே.**

**விளக்கம்**

காமனே! பசுங்காய் நெல்லும், கரும்பும், கரும்புக் கட்டியும், பச்சரிசியும், அவலும் ஆகியவற்றைச் சமைத்துக் காமநூல் வல்லவரானவர் மந்திரத்தினால் உன்னை வணங்குகின்றேன். மூன்று உலகங்களையும் திருவடிகளால் அளந்து

கொண்ட திரிவிக்ரமன் தன் திருக்கைகளாலே என்னைத் தீண்டுமாறு செய்ய வேண்டும். ஒளியுடைய வயிறும், மென்மை பருமை பொருந்திய முலைகளும் அவனால் நுகரும்படி செய்து உலகத்தில் நிலைத்த புகழைப் பெறுமாறு நீ செய்க.

**பாடல் எண்: 511**

**மாசு உடை உடம்பொடு தலை உலறி,**

**வாய்ப்புறம் வெளுத்து ஒருபோதும் உண்டு**

**தேசு உடைத் திறல் உடைக் காமதேவா!**

**நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள் கண்டாய்**

**பேசுவது ஒன்று உண்டு இங்கு எம்பெருமான்!**

**பெண்மையைத் தலை உடைத்து ஆக்கும் வண்ணம்**

**கேசவ நம்பியைக் கால் பிடிப்பாள்**

**என்னும், இப்பேறு எனக்கு அருள், கண்டாய்.**

**விளக்கம்**

பிரித்தாரைக் கூட்டும் புகழும், மிடுக்கும் வாய்ந்த மன்மதனே! அழுக்குப் படிந்த உடம்போடு கூடித், தலைமயிரை விரித்தும் உதடுகள் வெளுத்தும், ஒரு வேளையே உண்டும், அவனைக் காணும் ஆசையால் நான் நோற்கிற நோன்பை நீ நினைவில் கொள்ள வேண்டும். இப்போது சொல்ல ஒன்றுளது. என்னுடைய பெண்மை, தலைமை பெறும்படி முழு குணங்களாயிருக்கிறவனுக்குக் கால் பிடிக்குமவள் இவளே என்கிற பேற்றை எனக்கு அருள்க!

**பாடல் எண்: 512**

**தொழுது முப்போதும் உன் அடி வணங்கித்,**

**தூமலர் தூய்த் தொழுது ஏத்துகின்றேன்**

**பழுது இன்றிப் பார்க்கடல் வண்ணனுக்கே,**

**பணிசெய்து வாழப் பெறாவிடில் நான்**

**அழுது அழுது அலமந்து அம்மா வழங்க,**

**ஆற்றவும் அது உனக்கு உறைக்கும் கண்டாய்**

**உழுவதோர் எருத்தினை நுகங்கொடு பாய்ந்து,**

**ஊட்டம் இன்றித் துரந்தால் ஒக்குமே.**

**விளக்கம்**

முப்பொழுதும் மனத்தால் தொழுது தலையால் வணங்கி அடிகளிலே தூய மலர்களைத் தூவிப் போற்றுகின்றேன். அகன்று கடல் நிறத்தையுடையவனுக்குப் பழுதில்லாமல் பணிசெய்து நான் வாழப் பெறாவிட்டால், பலகால் அழுது தடுமாறி "அம்மா!" என்று கூப்பிட்டுத் திரிவனேல், அப்படி உன்னை அடைந்த என்னைத் துடிக்க விடுவதால் அக்குறை உன்மேல் ஏறும். இது ஓர் உழுகின்ற எருதை வேலை வாங்கிப் பின் அது தாங்கிய நுகத்தடியாலேயே தள்ளித் தீனியில்லாமல் அகற்றுவதற்கு ஒப்பாகும்.

**பாடல் எண்: 513**

**கருப்பு வில் மலர்க் கணைக் காமவேளைக்,**

**கழலிணை பணிந்து அங்கு ஓர் கரி அலற**

**மருப்பினை ஒசித்துப் புள் வாய்ப்பிளந்த**

**மணிவண்ணற்கு என்னை வகுத்திடு என்று**

**பொருப்பு அன்ன மாடம் பொலிந்து தோன்றும்,**

**புதுவையர்கோன் விட்டுசித்தன் கோதை**

**விருப்பு உடை இன்தமிழ் மாலை வல்லார்,**

**விண்ணவர் கோன் அடி நண்ணுவரே.**

**விளக்கம்**

கரும்பு வில்லையும் பூங்கணைகளையும் உடைய மன்மதனின் காலடிகளை வணங்கி, யானை பிளறி அலறும்படிக் கொம்புகளை முறித்துப் பகாசுரன் வாயைக் கிழித்துப் போட்ட நீலமணி வடி வழகனோடு என்னைச் சேர்ப்பீர் என்று, மலைகள் வைத்தாற் போல் மாடங்கள் விளங்கும் வில்லிபுத்தூர்க்கோன் பெரியாழ் வாரின் திருமகள் கோதையின் தமிழ் மாலையாகிய இப்பாசுரங்களை ஓத வல்லர்கள், வைகுண்டநாதனின் திருவடியைச் சேர்வர்.

## 2 ஆம் திருமொழி

## சிற்றில் சிதையேல் எனல்

**பாடல் எண்: 514**

**நாமம் ஆயிரம் ஏத்த நின்ற,**

**நாராயணா! நரனே! உன்னை**

**மாமி தன் மகன் ஆகப் பெற்றால்,**

**எமக்கு வாதை தவிருமே**

**காமன் போதரு காலம் என்று,**

**பங்குனி நாள் கடை பாரித்தோம்**

**தீமை செய்யும் சிரீதரா!, எங்கள்**

**சீற்றில் வந்து சிதையேலே.**

**விளக்கம்**

ஆயிரம் பெயர்களால் போற்றும்படி நின்ற நாராயணனே! திருமகனே! உன்னை எங்கள் மாமி யசோதை மகனாகப் பெற்றதால் நாங்கள் உனக்கு உறவு ஆயினும், உன் தொல்லையினின்று நாங்கள் தப்பமுடியுமோ மன்மதன் வரும் காலமென்று பங்குனியில் அவன் வரும் வழியைக் கோடித்தோம். தீம்பு செய்பவனே! திருமகளை மார்பிலே உடையவனே! எங்களின் சிறு வீடுகளைச் சிதையாதே.

**பாடல் எண்: 515**

**இன்று முற்றும் முதுகு நோவ,**

**இருந்து இழைத்த இச் சிற்றிலை**

**நன்றும் கண் உற நோக்கி, நான் கொளும்**

**ஆர்வந்தன்னைத் தணிகிடாய்**

**அன்று பாலகன் ஆகி, ஆலிலை**

**மேல் துயின்ற எம் ஆதியாய்!**

**என்றும் உன்தனக்கு எங்கள் மேல்,**

**இரக்கம் எழாதது எம் பாவமே.**

**விளக்கம்**

இன்று முழுவதும் முதுகு நோவும்படி அணிமணிபோல் ஒரே நிலையாக அமர்ந்து வருந்திச் செய்த இந்தச் சிற்றிலைக், கண்களை அகல விரித்து நன்றாக நோக்கி, எங்கள் ஆசையை நிறைவு செய்வாய். ஊழி வெள்ளக் காலத்தில் குழந்தை வடிவு கொண்டு ஓர் ஆலந்தளிரின்மேல் துயின்ற எம் ஆதி முதல்வ! எக்காலத்திலும் உனக்கு எம்மிடத்தில் காமம் தணிக்கும் பரிவு இல்லாமல் இருப்பது எங்கள் தீவினையே!

**பாடல் எண்: 516**

**குண்டு நீர் உறை கோளரீ,**

**மதயானை கோள் விடுத்தாய்! உன்னைக்**

**கண்டு மால் உறுவோங்களைக், கடைக்**

**கண்களால் இட்டு வாதியேல்**

**வண்டல் நுண் மணல் தெள்ளி, யாம் வளைக்**

**கைகளால் சிரமப் பட்டோம்**

**தெண் திரைக்கடற் பள்ளியாய்! எங்கள்**

**சிற்றில் வந்து சிதையேலே.**

**விளக்கம்**

ஆழமுடைய திருப்பாற்கடலிலே கண் வளர்ந்தருளும் மிடுக்கை யுடைய அரிமாப் போன்றவனே! மதம்மிகு கசேந்திராழ்வானின் துயரைக் களைந்தவனே! அடியார் துயரைத் தீர்க்கவல்ல உன்னைப் பார்த்துக் காதலுற்ற எங்களைக் கடைக் கண்களால் பார்த்து தலியவேண்டா. நாங்கள் வண்டலிலுள்ள சிறிய மணல்களை வளையால் அணிந்த கைகளால் படைத்து மிகவும் இடர்ப்பட்டோம். தெளிந்த அலைகள் கொண்ட பாற்கடலில் வாழ்பவனே! எங்கள் சிற்றில்களைச் சிதைக்க வேண்டா!

**பாடல் எண்: 517**

**பெய்யு மா முகில்போல் வண்ணா! உன்தன்**

**பேச்சும் செய்கையும் எங்களை**

**மையல் ஏற்றி மயக்க, உன் முகம்**

**மாய மந்திரம் தான் கொலோ?**

**நொய்யர் பிள்ளைகள் என்பதற்கு, உன்னை**

**நோவ நாங்கள் உரைக்கிலோம்**

**செய்ய தாமரைக் கண்ணினாய்!, எங்கள்**

**சிற்றில் வந்து சிதையேலே.**

**விளக்கம்**

மழை பொழிய நின்றதொரு கருமுகில் போன்ற திருமேனியனே! உன்னுடைய ஆசை மொழிகளும், அன்புச் செயல்களும் எங்களைப் பித்தேறப் பண்ணி அறிவு கெடுக்கைக்கு உன் முகம் சொக்குப் பொடியோ? செந்தாமரை மலர்க்கண்களை உடையவனே! ‘‘ஒன்றுமறியாச் சிறுமியர் இவர்கள்’’ என்று நீ சொல்லுவாயென்று பயப்பட்டு, நாங்கள் உன்னைக் குறித்து நெஞ்சு புண்படும்படி ஒன்றும் சொல்லமாட்டோம். எங்கள் சிற்றில்களை வந்து சிதையேல்.

**பாடல் எண்: 518**

**வெள்ளை நுண் மணல் கொண்டு, சிற்றில்**

**விசித்திரப் பட வீதிவாய்த்**

**தெள்ளி நாங்கள் இழைத்த கோலம்,**

**அழித்தி யாகிலும் உன்தன் மேல்**

**உள்ளம் ஓடி உருகவல்லால்,**

**உரோடம் ஒன்றும் இலோம் கண்டாய்**

**கள்ள மாதவா! கேசவா!  உன்**

**முகத்தன கண்கள் அல்லவே!**

**விளக்கம்**

கள்ளச் செய்கைகளையுடைய கண்ணனே! கேசவனே! நாங்கள் வெண்ணிறப் பொடி மணல்களைக்கொண்டு தெருவில் அனைவரும் கண்டு வியக்கும்படி, தெளித்து இழைத்த அழகிய சிறு வீடுகளாகிய கோலத்தை நீ அழித்தாயாகிலும், அதற்காக எங்களுடைய தெஞ்சானது உடைந்து உருகுமே அன்றி உன்மேல் சிறிதும் வெறுப்புக் கொள்ளமாட்டோம். உன் முகத்திருப்பவை அருட் கண்களல்லவோ?

**பாடல் எண்: 519**

**முற்று இலாத பிள்ளைகளோம், முலை**

**போந்திலாதோமை நாள்தொறும்**

**சிற்றில் மேல் இட்டுக் கொண்டு, நீ சிறிது**

**உண்டு திண்ணென நாம் அது**

**கற்றிலோம் கடலை அடைத்து அரக்கர்**

**குலங்களை, முற்றவும்**

**செற்று இலங்கையைப் பூசல் ஆக்கிய**

**சேவகா! எம்மை வாதியேல்.**

**விளக்கம்**

கடலில் அணையைக் கட்டி, அரக்கர் குலத்தை முற்றும் அழித்து, இலங்கையைப் போர்க்களமாக்கிய வீரப்பாடு உடையவனே! முற்றாத இளம் பிள்ளைகளாய், முலை முழுமையாக முற்றிலும் எழாத எங்களின் சிற்றில் சிதைத்தலை நாள்தோறும் ஒரு தொழிலாக்கிக்கொண்டு, நீ செய்வதற்கு ஒரு

கருத்துண்டு. அதில் எங்களுக்குப் பயிற்சி இல்லாமையால் நாங்கள் அறிகிலோம். இது உறுதி, எம்மை வருத்தவேண்டா.

**பாடல் எண்: 520**

**பேதம் நன்கு அறிவார்களோடு, இவை**

**பேசினால் பெரிது இன் சுவை**

**யாதும் ஒன்று அறியாத பிள்ளைகளோமை,**

**நீ நலிந்து என் பயன்?**

**ஓத மா கடல்வண்ணா! உன்**

**மணவாட்டிமாரொடு சூழறும்**

**சேது பந்தம் திருத்தினாய்! எங்கள்**

**சிற்றில் வந்து சிதையேலே**

**விளக்கம்**

கடலில் இலங்கைக்குச் செவ்வனே அணை கட்டியவனே! உன் பேச்சின் வாசியை நன்றாக அறிய வல்லவரொடு இப்பேச்சுகளைப் பேசினால் மிகவும் இனிமையாக இருக்கும். சொற்களின் உட் பொருளை அறியமுடியாத சிறுமிகளாகிய எங்களை நீ வருத்துவதால் என்ன பயன்? அலைகள் அடர்ந்த பெரிய கடல் நிறமுடையவனே! உன் மணாட்டியர்மேல் ஆணை! எங்கள் சிற்றில்களைச் சிதைக்க வேண்டா.

**பாடல் எண்: 521**

**வட்ட வாய்ச் சிறு தூதையோடு,**

**சிறுசுளகும் மணலும் கொண்டு**

**இட்டமா விளையாடு வோங்களைச்,**

**சிற்றில் ஈடழித்து என் பயன்?**

**தொட்டு உதைத்து நலியேல் கண்டாய்,**

**சுடர்ச் சக்கரம் கையில் ஏந்தினாய்!**

**கட்டியும் கைத்தால் இன்னாமை,**

**அறிதியே கடல்வண்ணனே!**

**விளக்கம்**

ஒளியுள்ள ஆழியினைத் திருக்கையில் ஏந்தியவனே! கடல் போன்ற திருமேனி உடையவனே! வட்டமான வாளையுடைய சிறிய பானையோடு சிறு முறமும் மணலும் கொண்டு, விருப்பப்படி விளையாடும் எங்களுடைய சிற்றில்களை உருவழிப்பதனால் உனக்குப் பயன் என்ன? கையால் தொட்டும் காலால் உதைத்தும் வருந்தாதே. நெஞ்சு கசந்து போனால் கருப்புக் கட்டியும் சுவைக்காது என்பதை நீ அறிவாயே!

**பாடல் எண்: 522**

**முற்றத்து ஊடு புகுந்து, நின் முகம்**

**காட்டிப் புன்முறுவல் செய்து**

**சிற்றிலோடு எங்கள் சிந்தையும், சிதைக்கக்**

**கடவையோ? கோவிந்தா!**

**முற்ற மண்ணிடம் தாவி, விண் உற**

**நீண்டு அளந்து கொண்டாய்! எம்மைப்**

**பற்றி மெய்ப்பிணக்கு இட்டக்கால், இந்தப்**

**பக்கம் நின்றவர் என் சொல்லார்?**

**விளக்கம்**

கண்ணனே! ஒரு திருவடியினால் நிலவுலக முழுவதையும் தாவி யளந்து ஓங்கி,மற்றொரு திருவடியினால் மேலுலகங்களை அளந்து கொண்டவனே! நாங்கள் தனியாய் விளையாடுகிற முற்றத்திலே நுழைந்து, உனது திருமுகத்தைக் காட்டிப்

புன்சிரிப்புச் சிரித்து எங்கள் சிற்றில்களையும் நெஞ்சையும் அழிக்கக் கடவையோ? எங்களை அணைத்துப் பிடித்துக்கொண்டால் அருகில் நிற்பவர்கள் என்ன சொல்லமாட்டார்கள்?

**பாடல் எண்: 523**

**சீதை வாயமுதம் உண்டாய்! எங்கள்**
**சிற்றில் நீ,சிதையேல் என்று**
**வீதிவாய் விளையாடும், ஆயர்**
**சிறுமியர் மழலைச் சொல்லை**
**வேத வாய்த் தொழிலார்கள் வாழ்,**
**வில்லிபுத்தூர் மன் விட்டுசித்தன் தன்**
**கோதை வாய்த் தமிழ் வல்லவர், குறைவு**
**இன்றி வைகுந்தம் சேர்வரே.**

**விளக்கம்**

சீதையின் வாயமுதத்தைப் பருகியவனே! ”நீ எங்கள் சிற்றில் சிதையேல்” என்று வீதியிலே விளையாடும் இடைப் பெண்களு டைய மழலைச் சொல்லை, எப்போதும் மறை ஓதுகிறவர்கள் வாழும் வில்லிபுத்தூர் பெரியாழ்வாருடைய திருமகள் ஆண்டாளு டைய திருவாக்கை ஓதவல்லவர்கள் குறைவில்லாமல் இறையுலகம் சேர்வர்.

## குலசேகராழ்வார் - 6 ஆம் திருமொழி

## கன்னியர் ஊடிக் கண்ணனை எள்குதல்

குலசேகர ஆழ்வார் சேர மன்னரும் சந்திர குலத்தவருமான திருடவிரதற்கு மகனாக, கொல்லி நகரில் கலி 28வதான பராபவ வருடம் மாசி மாதம் சுக்ல பக்ஷம் துவாதசி வெள்ளிக் கிழமை, புனர்பூச நட்சத்திரத்தில் பிறந்தார். இவர் ஸ்ரீகௌஸ்துபாம்ஸராய் கருதப் படுகிறார்.

இவர் தன் வீரம் மிகுந்த நால்வகைப் படையால் எதிரிகளை வென்று புறம் கண்டு செய்து வந்தார். இவர் மன்னர் குலத்தில் பிறந்திருந்தும், படைபலமும் பெரும் செலவமும் பெற்றிருந்தும், மானுட வாழ்க்கையில் பற்றின்றி மாலவன் சேவையை மனம் உகந்து செய்து வந்தார். எப்பொழுதும் அவன் அடியார்களால் சூழப் பெற்றவராய் அவன் நாமம் போற்றியும், அவன் திருவிளையாடல்களை அடியார்கள் கூறக் கேட்டும் வந்தார்.

திருவரங்கனையும் திருவேங்கடவனையும் மற்றும் அவன் உறையும் மற்ற தலங்களையும் தரிசித்து அத்தலங்களிலே உள்ள அடியாரோடு இணையும் நாள் எந்நாளோ என்ற ஏக்கத்தில் இருந்தார். புராண இதிகாசங்களின் சாரமான முகுந்த மாலையைப் பாடி அருளினார்.

ஸ்ரீ வால்மீகி பகவான் அருளிச் செய்த இராம காதையின் மீது மிகுந்த பற்றுடையவராய் அதை ஓதச் செய்து கேட்டு மகிழ்வதை பொழுது போக்காய்க் கொண்டிருந்தார். ஒரு நாள் இராமன் சீதைக்குக் காவலாய் இலக்குவனை நிறுத்தி விட்டுத் தனியொருவராய் கரன் திரிசிரன் தூஷணன் முதலான பதிநான்காயிரம் அரக்கர்களுடன் போரிடத் துணிந்த கதை கேட்க நேர்ந்தது. உடனே ‘‘என்னப்பன் இராமனுக்கு என்னாகுமோ? துணையாய்ச் செல்ல எவருமில்லையே?’’ என்று எண்ணினார். தன் நால்வகைப் படையையும் திரட்டி தம் தலைமையில் இராம பிரானுக்கு உதவி செய்யக் கிளம்பினார்.

இதைக்கண்ட அமைச்சர்கள் அரசர் தம் சொல்லை கோட்கும் மன நிலையில் இல்லை என்பதனை உணர்ந்தனர். தூதுவர் போல் சிலரை அனுப்பி ‘‘மன்னா! இராம பிரான் தனியொருவராகவே அந்தப் பதிநான்காயிரம் அரக்கர்களை அழித்து வெற்றியுடன் திரும்பினார்’’ என்று சொல்லச் செய்தனர். மகிழ்ந்த மன்னரும் படையோடு நாடு திரும்பினார்.

கவலையில் ஆழ்ந்த அமைச்சர்கள் கூடி இத்தகைய குழப்பங்களைத் தவிர்க்க என்ன செய்யலாம் என ஆலோசித்தனர். இதற்கெல்லாம் வைணவ அடியாரோடு வேந்தன் கொண்டிருக்கும் தொடர்பே காரணம் என்ற முடிவிற்கு வந்தனர். தொடர்பைத் துண்டிக்க ஓர் திட்டமும் தீட்டினர். அரன்மனையுள் அரசன் வணங்கும் பெருமாளின் திருவாபரணப் பெட்டியில் இருந்தவற்றுள் மிக அழகான ஒரு நவரத்தின மாலையை எடுத்து மறைத்து வைத்தனர். அரசனிடம் ஆபரணத்தைத் திருடியது அடியவரே என்று பழி சுமத்தினர். ஒரு குடத்தினுள் நச்சுப் பாம்பொன்றை இட்டு மூடினர். அடியவர் தாம் குற்றம அற்றவர் எனில் அக் குடத்தில் கை விட்டு மீள வேண்டும் என்றனர். அரசரோ அடியவரைத் தடுத்து அவர்கள் சார்பாக ''பரனன்பர் கொள்ளார்'' என்று கூறி கோவிந்தனை வேண்டிக் குடத்தில் கை விட்டு வெற்றிகரமாக மீண்டார். அமைச்சர்கள் மனம் வருந்தி மன்னன் தாள் பணிந்து நவரத்தின மாலையை சமர்ப்பித்து மன்னிக்க வேண்டினர்.

அடியாரை மதிக்காத, பொறுக்காத மக்களிடையே வாழ விருப்பற்ரவராய் சேரலர்கோன் தன் மகனுக்கு முடி சூட்டி வைத்து ''ஆனான செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்'' என்று தன் விருப்பத்திற்குரிய அடியார் குழாத்தோடு திருவரங்கம் சென்றடைந்தார். அடியவர் குழாத்தொடு கூடியருந்து, அணியரங்கத்தம்மானுக்கு பணி செய்து, ஆழ்வார் பெருமாள் திருமொழி என்ற திவ்யப்ரபந்தத்தை பாடியருளினார்.

**பாடல் எண்: 698**

**ஏர் மலர்ப் பூங்குழல் ஆயர் மாதர்,**
**எனைப் பலர் உள்ள இவ்வூரில் உன்தன்**
**மார்வு தழுவுதற்கு ஆசையின்மை,**
**அறிந்தறிந்தே உன்தன் பொய்யைக் கேட்டு**
**கூர் மழை போல் பனிக் கூதல் எய்திக்,**

**கூசி நடுங்கி யமுனை யாற்றில்**

**வார் மணற் குன்றிற் புலர நின்றேன்,**

**வாசுதேவா! உன் வரவு பார்த்தே.**

**விளக்கம்**

வாசுதேவா! அழகிய மணமலர் அணிந்த கூந்தலையுடைய இடைப்பெண்கள் எத்தனையோபேர் உள்ள திருவாய்ப் பாடியில், உன் திருமார்பை அணைவதற்கான ஆசை பயன்படாமையை அறிந்து வைத்தும், உன் பொய்மொழி கேட்டுப் பெரிய மழையைப் போல் பெய்கிற பனிக்குளிரிலே அகப்பட்டு, ”யாரும் பார்த்து விடுகிறார்களோ!““ எனக் கூசி, பயத்தினால் குளிரினால் நடுங்கி, யமுனை மணல்மேட்டில் உன் வருகையை எதிர்பார்த்து விடியுமளவும் நின்றிருந்தேன்.

**பாடல் எண்: 699**

**கெண்டை ஒண் கண் மடவாள் ஒருத்தி,**

**கீழை அகத்துத் தயிர் கடையக்**

**கண்டு ஒல்லை நானும் கடைவன் என்று,**

**கள்ள விழியை விழித்துப் புக்கு**

**வண்டு அமர் பூங்குழல் தாழ்ந்து உலாவ,**

**வாள்முகம் வேர்ப்பச் செவ்வாய் துடிப்ப**

**தண் தயிர் நீ கடைந்திட்ட வண்ணம்,**

**தாமோதரா! மெய் அறிவன் நானே.**

**விளக்கம்**

தாமோதரா! கீழண்டை வீட்டில் கயல்மீன் கண்ணழகி, தனியே தயிர் கடைவதைப் பார்த்து, “நானும் உன் கூட விரைந்து கடைந்து தருவேன்” என்று சொல்லித் திருட்டுப் பார்வை பார்த்து, அவளருகே சென்று, வண்டுகள் படிந்த மலர் அணிந்த கூந்தல் கீழாகத் தாழ்ந்து அசையவும், ஒளி பொருந்திய முகம் வேர்க்கவும்,

சிவந்த உதடுகள் துடிக்கவும், குளிர்ந்த தயிரை நீ கடைந்த நிலைமையை நான் உண்மையாகவே அறிவேன்.

**பாடல் எண்: 700**

**கருமலர்க் கூந்தல் ஒருத்திதன்னைக்,**

**கடைக்கணித்து ஆங்கே ஒருத்திதன்பால்**

**மருவ மனம் வைத்து மற்றொருத்திக்கு**

**உரைத்து, ஒரு பேதைக்குப் பொய் குறித்து**

**புரிகுழல் மங்கை ஒருத்திதன்னைப்**

**புணர்தி, அவளுக்கும் மெய்யன் அல்லை**

**மருது இறுத்தாய்! உன் வளர்த்தியூடே**

**வளர்கின்றதால் உன்தன் மாயை தானே.**

**விளக்கம்**

மலர் அணிந்துள்ள கருமயிர்க் கூந்தலினாள் ஒருத்தியைக் கடைக்கண்ணால் பார்த்துவிட்டு, வேறொரு பெண்ணிடம் மனத்தைப் பொருத்திவிட்டு, பேதைப் பெண்ணுக்கு, “உன் அடிமை நான்“ என்று சொல்லி, மடந்தை ஒருத்திக்கு, “இன்ன விடத்திலே எனக்காகக் காத்திரு“ என்று பொய்யாக இடத்தைக் குறித்து, மற்றோர் இளம் பெண்ணோடு கூடி நின்றாய். அந்தப் பெண்ணுக்கும் நீ மெய்யனாகமாட்டாய். மருத மரங்களை முறித்தவனே! உன் வயது வளர்வதுடன் கள்ளத்தனமும் வளர்ந்து வருகின்றதே!

**பாடல் எண்: 701**

**தாய்முலைப் பாலில் அமுதிருக்கத்,**

**தவழ்ந்து தளர்நடையிட்டுச் சென்று**

**பேய்முலை வாய்வைத்து நஞ்சை உண்டு,**

**பித்தன் என்றே பிறர் ஏச நின்றாய்**

**ஆய்மிகு காதலோடு யான் இருப்ப,**

**யான் விட வந்த என் தூதியோடே**

**நீ மிகு போகத்தை நன்கு உகந்தாய்,**

**அதுவும் உன் கோரம்புக்கு ஏற்கும் அன்றே.**

**விளக்கம்**

தாய் யசோதை முலையிலே பால் இருக்க, அதனை உண்ணாமல், தவழ்ந்து தட்டுத் தளர் நடையாகச் சென்று, பேய் முலையிலே வாய் வைத்து நச்சுப் பால் உண்ட பித்தனென்று ஊரார் ஏசும்படி நின்றவனே! நான் மிகவும் அதிகமான அன்புடன் இருக்க, என்னால் தூது அனுப்பப்பட்டு வந்த என் வேலைக்காரியுடன் மிகுந்த இன்பத்தை நீ நன்றாக நுகர்ந்தாய். அச்செய்கையும் உனது துடுக்கிற்குத் தகுதியாய் இருக்கிறதல்லவா?

**பாடல் எண்: 702**

**மின்னொத்த நுண்ணிடையாளைக் கொண்டு,**

**வீங்கு இருள்வாய் என்தன் வீதியூடே**

**பொன்னொத்த ஆடை குக்கூடலிட்டுப்,**

**போகின்ற போது நான் கண்டு நின்றேன்**

**கண்ணுற்றவளை நீ கண்ணாவிட்டுக்,**

**கை விளிக்கின்றதும் கண்டே நின்றேன்**

**என்னுக்கு அவளை விட்டு இங்கு வந்தாய்?**

**இன்னம் அங்கே நட, நம்பி! நீயே.**

**விளக்கம்**

மின்னல் இடையுடைய ஒரு பெண்ணை அணைத்துக் கொண்டு, மிக்க இருளிலே பொன்னாடையாலே முட்டாக்கிட்டு, என் வீதியில் அவளும் நீயுமாகப் போகும்போது நான் பார்த்துக் கொண்டிருந் தேன், மேலும் கண்ணில் பட்ட வேறொரு பெண்ணை உனக்காம்ப டிக் கண்சாடை காட்டி வாவென்று கையால் அழைத்ததையும் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். ஒன்றுமறியாப் பெண்ணை விட்டு என்னிடம் எதற்காக வந்தாய்? இனி அவளிடத்திற்கே போ.

**பாடல் எண்: 703**

**மற் பொருதோள் உடை வாசுதேவா!**
**வல்வினையேன் துயில் கொண்டவாறே**
**இற்றை இரவிடை ஏமத்து என்னை,**
**இன்னணைமேல் இட்டு அகன்று நீ போய்**
**அற்றை இரவும் ஓர் பிற்றை நாளும்,**
**அரிவையரோடும் அணைந்து வந்தாய்**
**எற்றுக்கு நீ என் மருங்கில் வந்தாய்?**
**எம்பெருமான்! நீ எழுந்தருளே.**

**விளக்கம்**

மல்லர்களுடன் போர்செய்த தோளுடைய வாசுதேவா! பாபி யான நான் உறங்கத் தொடங்கினவுடன், அன்றிரவு நள்ளிருளிலே இனிய படுக்கையிலே என்னைப் படுக்கவிட்டு, நீ விலகிப்போய், அன்றிரவும் அதற்கு மறுநாளும் எல்லாப் பெண்களோடும், இன்பம் துய்த்து வந்தாய். இப்படிப்பட்ட நீ என் அருகே எதற்காக வந்தாய்? என் நாயகனே! அப்பால் நீ எழுந்து போனால் நல்லது.

**பாடல் எண்: 704**

**பையரவின் அணைப் பள்ளியினாய்!**
**பண்டையோம் அல்லோம் நாம் நீ உகக்கும்**
**மையரி ஒண் கண்ணினாரும் அல்லோம்,**
**வைகி எம் சேரி வரவு ஒழி நீ**
**செய்ய உடையும் திருமுகமும்,**
**செங்கனிவாயும் குழலும் கண்டு**
**பொய் ஒரு நாள் பட்டதே அமையும்,**
**புள்ளுவம் பேசாதே போகு நம்பீ!**

**விளக்கம்**

படங்களையுடைய பாம்பணையில் பள்ளி கொள்பவனே! நாங்கள் உன் மாயப் பேச்சில் பழையபடி ஏமாந்தவர்களல்லர். நீ விரும்பத்தக்க மை அணிந்த ஒளி விளி மாதர்களும் அல்லோம். அகாலத்தில் எம் இருப்பிடத்திற்கு வருவதை ஒழி. அழகிய பொன்னாடையும் திருமுகமும் கோவைக்கனி உதடுகளையும் எழில் முடியையும் பார்த்து, உன் பொய்யான மொழிகளை மெய்யென நம்பி, முன் ஒரு நாள் பட்டபாடு போதும். வஞ்சக மொழிகளை மீண்டும் சொல்லாமல் இவ்விடத்தை விட்டுப் போ.

**பாடல் எண்: 705**

**என்னை வருக எனக் குறித்திட்டு,**
**இனமலர் முல்லையின் பந்தர்நீழல்**
**மன்னி அவளைப் புணரப் புக்கு,**
**மற்று என்னைக் கண்டு உழறா நெகிழ்ந்தாய்**
**பொன்னிற ஆடையைக் கையிற் தாங்கிப்,**
**பொய்அச்சம் காட்டி நீ போதியேலும்**
**இன்னம் என் கையகத்து ஈங்கு ஒரு நாள்,**

**வருதியேல் என் சினம் தீர்வன் நானே.**

**விளக்கம்**

என்னை இன்ன இடம் வாவென்று இடம் குறித்துப் பின், மலர் நிறைந்த முல்லைப் பந்தலின் நிழலிலே வெகு காலமாய்ப் பதுங்கி நின்ற ஒருத்தியை அணைவதற்குப் போய், பிறகு என்னைப் பார்த்துக் கலங்கி அப்பாலே நழுவினாய் பொன்னாடையைக் கையிலே தாங்கி எனக்கு அஞ்சியதாகப் பொய்யாக நடித்து நீ என் கைக்குத் தப்பிப் போனபோதிலும் இனிமேல் இங்கு என்னிடத்திற்கு ஒரு நாளாகிலும் வருவாயாகில் நான் என் சிற்றத்தைத் தீர்த்துக் கொள்வேன்.

**பாடல் எண்: 706**

**மங்கலநல் வனமாலை மார்வில்**

**இலங்க, மயில்தழைப் பீலி சூடி**

**பொங்கு இள ஆடை அரையிற் சாத்திப்,**

**பூங்கொத்துக் காதிற் புணரப் பெய்து**

**கொங்குநறுங் குழலார்களோடு,**

**குழைந்து குழல் இனிது ஊதி வந்தாய்**

**எங்களுக்கே ஒருநாள் வந்து ஊத,**

**உன் குழல் இன்னிசை போதராதே?**

**விளக்கம்**

மங்களமாய் அழகிய துழாய்மாலை திருமார்பிலே விளங்கத் தழைத்த மயில் இறகினை முடியிலே சூடிக்கொண்டு, மெல்லிய ஆடையைத் திருவரையில்

உடுத்திக்கொண்டு, பூங்கொத்துகளைக் காதிலே பொருந்த அணிந்துகொண்டு, தேன் மணம் கமழ்கின்ற கூந்தலையுடைய மகளிரோடே கலந்து, அம் மகிழ்ச்சியால் புல்லாங் குழலை மனங்கவர ஊதிக்கொண்டு வந்தாய். ஒரு நாளாகிலும் எங்களுக்காக வந்து ஊதினால் உன் குழலின் இசை பொங்காதோ?

**பாடல் எண்: 707**

**அல்லி மலர்த் திருமங்கை கேள்வன்**
**தன்னை, நயந்து இள ஆய்ச்சிமார்கள்**
**எல்லிப் பொழுதினில் ஏமத்து ஊடி,**
**எள்கி உரைத்த உரையதனைக்**
**கொல்லி நகர்க்கு இறை கூடற்கோமான்,**
**குலசேகரன் இன்னிசையில் மேவிச்**
**சொல்லிய இன் தமிழ் மாலை பத்தும்,**
**சொல்ல வல்லார்க்கு இல்லை துன்பந் தானே.**

**விளக்கம்**

இளமை கூடிய இடைப்பெண்கள், திருமகள் நாயகன் கண்ண மூஆசைப்பட்டு நள்ளிரவிலே பிணங்கிச் சொன்ன மொழிகளைக் னை கொல்லி நகர் அரசர் மதுரைக்கு அதிபதி குலசேகரன் பண்ணிலே அருளிச்செய்த இனிய தமிழ் மாலை பத்துப்பாட்டையும் சொல்ல வல்லவர்க்குத் துன்பம் அணுகாது.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | 1. பெரியாழ்வாரின் வாழ்க்கை வரலாற்றினை விவரி? | K2 | CO5 | PO4 |
| 2 | 2. பெரியாழ்வார் தாலப்பருவத்தில் திருமாலை குழந்தையாக வருணித்து பாடியதை விவரி | K4 | CO3 | PO2 |
| 3 | குலசேகராழ்வார் இயற்றிய பெருமாள் திருமொழியில் கூறப்படும் கருத்தினை கூறுக. | K2 | CO2 | PO1 |
| 4 | 3. நம்மாழ்வார் பாடிய மூன்றாம் திருமொழியில் இடம் பெறும் செய்தியினை விவரி? | K4 | C43 | PO2 |
| 5 | 4. ஆண்டாளின் பக்தி திறத்தினை விவரி? | K1 | CO3 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | மூன்றாம் திருமொழியில் திருமாலை குழந்தையாகப் பாவித்து வருணிக்கும் தன்மையினைப் பற்றி விளக்குக. | K4 | CO2 | PO4 |
| 2 | மாணிக்கங் கட்டி எனத் தொடங்கும் பதிகத்தில் திருமாலை போற்றும் விதத்தினைக் கூறுக. | K2 | CO1 | PO5 |
| 3 | நம்மாழ்வார் மூன்றாம் திருமொழியில் சொல்லும் நிகழ்வினை முறைப்படுத்திக் கூறுக. | k4 | CO5 | PO2 |
| 4 | ஆண்டாள் ஆயர்குல பெண்களுக்கு சொல்லும் இறைவழியினைத் தொகுத்து எழுதுக. | K3 | CO4 | PO1 |
| 5 | பெருமாள் திரு மொழியில் குலசேகராழ்வார் கூறும் கருத்துகளைப் பற்றி எழுதுக. | K2 | CO3 | PO3 |

## அலகு - 4

## திருப்புகழ்

## அருணகிரி நாகர்

அருணகிரிநாதர் 1370-ல் திருவண்ணாமலையில் பிறந்தவர். கைக்கோள செங்குந்தர் மரபில் தோன்றியவர். இவரது தந்தையார் பெயர் திருவெங்கட்டார் என்றும் தாயார் பெயர் முத்தம்மை என்றும் கருதப்படுகிறது. அருணகிரிநாதர் புராணத்தில் அருணகிரிநாதரின் ஜன்மதினமாக புரட்டாதி உத்தரமும் தனுர் லக்னமும் செவ்வாய்க்கிழமையும் கூடிய நாள் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனிப் பூரணையையும் அருணகிரிநாதர் விழாவாக இலங்கையில் கொண்டாடி வருகிறார்கள்.

இவர் பிறந்து சில தினங்களிலேயே இவரது தந்தை காலமாகிவிட்டார். இவரை ஆதி என்னும் ஒரு மூத்த சகோதரி வளர்த்தார். அருணகிரி இளமையிலே நல்ல கல்வி கற்றுத் தமிழில் உள்ள இலக்கிய, இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்திருந்தார். சம்ஸ்கிருதத்தையும் கற்றார். உரிய வயதில் திருமணமும் நடந்தது. எந்நேரமும் காமத்தில் இருந்ததால் சொத்தை இழந்ததோடு அல்லாமல் நோயாலும் அவதிப்பட்டார். முருகப் பெருமான், அவரது தொழுநோயைக் குணப்படுத்தியதால் பக்தி பாடல்களை உருவாக்க ஆரம்பித்தார் என அவரின் வரலாற்று நூல்களில் காணப்படுகிறது.

மனையவள் நகைக்க என்று தொடங்கும் திருப்புகழ் பாடலில் அருணகிரிநாதர் அவரை தந்தையும் தாயும் உறவினரும் எள்ளிநகையாடியதைப் பற்றி பாடுகிறார். அதை வைத்து அவருடைய பெற்றோர் நீண்டகாலம் உயிருடன் இருந்தனர், அவர் மணமானவர் என ஊகிக்கலாம் என சில ஆய்வாளர் சொல்வதுண்டு. செய்யூர் வேதபுரீஸ்வரர் ஆலயத்தின் முருகன் அருணகிரியின் விருப்பக்கடவுள்.

15-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவனான பிரபுடதேவ மகாராஜனைப் பற்றி“அதல சேதனாராட’ என்ற திருப்புகழில் அருணகிரிநாதர் “உதய தாம மார்பான

பிரபுடதேவமாராஜன் உளமுமாட வாழ்தேவர் பெருமாளே’ என்று பாடுவதைக்கொண்டு அருணகிரிநாதர் காலம் 15-ம் நூற்றாண்டிற்குரியது என வகுக்கிறார்கள்.

அருணகிரி தமிழ் மொழி, வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் புலமை பெற்றவர். இவர் எழுதிய திருப்புகழில் 16,000 இசைப்பாடல்கள் உள்ளன. இவற்றுள் 1,088-க்கும் மேற்பட்ட சந்த வேறுபாடுகள் உள்ளன. இவரது பாடல்கள் சிக்கலான சந்த நயத்திற்கும், தாள அமைப்பிற்கும் பெயர் பெற்றவை. இவர் எழுதிய திருப்புகழில், இலக்கியமும் பக்தியும் இணக்கமாகக் கலக்கப்பட்டுள்ளது. திருப்புகழ் இடைக்கால தமிழ் இலக்கியத்தின் முக்கிய படைப்புகளில் ஒன்று.

அருணகிரிநாதர் தென்னிந்தியா முழுவதிலும் உள்ள கோயில்களுக்குச் சென்று 16,000 பாடல்களை இயற்றினார்.இராமாயணம் முழுவதையும் அருணகிரி நாதர் தன் திருப்புகழ் பாடல்களில் பல இடங்களில் விரவிப் பாடியிருக்கிறார். கிருஷ்ண லீலைகளும் பாடியிருக்கிறார். சுந்தரர், திருஞானசம்பந்தர் முதலிய பெருமக்கள் பற்றியும் குறிப்பிட்டுப் பாடியிருக்கிறார். அருணகிரிநாதர் எழுதிய ”திருப்புகழ்” தேவாரத்திற்கு இணையாகவும், ”கந்தர் அலங்காரம்” திருவாசகத்திற்கு இணையாகவும், ”கந்தர் அனுபூதி” திருமந்திரத்திற்கு இணையாகவும் முருக பக்தர்களால் போற்றப்படுகின்றது. அருணகிரிநாதர் தமிழ்நாட்டில் உள்ள திருவண்ணாமலையில் பிறந்தார். இவர் 15 - ம் நூற்றாண்டில் வாழ்ந்து முருகக் கடவுள் மீது பாடல்கள் எழுதி புகழ் பெற்ற அருளாளர் ஆவார். இவர் தமிழ் மொழி வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் புலமை பெற்றவர். இவர் எழுதிய திருப்புகழில் 16000 இசைப்பாடல்கள் உள்ளன. இவற்றுள் 1088 க்கும் மேற்பட்ட சந்த வேறுபாடுகள் உள்ளன. இவரது பாடல்கள் சிக்கலான சந்த நயத்திற்கும். தாள அமைப்பிற்கும் பெயர் பெற்றவை.

அருணகிரிநாதர் எழுதிய திருப்புகழ் தேவாரத்திற்கு இணையாகவும், ஹகந்தரலங்காரம்“ திருவாசகத்திற்கு இணையாகவும் “கந்தர்அனுபூதி திருமந்திரத்திற்கு இணையாகவும் முருக பக்தர்களால் போற்றப்படுகின்றன. 1005 பாடல்கள் பல்வேறு

திருத்தலங்கள் மீது பாடப்பெற்றன. 314 பாடல்கள் பொதுப் பாடல்கள் ஆகும். மொத்தம் 1325 பாடல்கள் நமக்குக் கிடைத்துள்ளன.

## திருப்புகழ்

### விநாயகர் துதி

பாடல்: 1

கைத்தலம் நிறைகனி அப்பமொடு அவல் பொரி

கப்பிய கரி முகன் அடிபேணி

கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ

கற்பகம் என வினை கடிது ஏகும்

மத்தமும் மதியமும் வைத்திடும் அரன் மகன்

மல் பொரு திரள் புய மத யானை

மத்தள வயிறனை உத்தமி புதல்வனை

மட்டு அவிழ் மலர் கொடு பணிவேனே

முத்தமிழ் அடைவினை முற்படு கிரி தனில்

முற்பட எழுதிய முதல்வோனே

முப்புரம் எரி செய்த அச்சிவன் உறை ரதம்

அச்சு அது பொடி செய்த அதிதீரா

அத்துயர் அது கொடு சுப்பிரமணி படும்

அப்புனம் அதனிடை இபம் ஆகி

அக்குற மகளுடன் அச்சிறு முருகனை

அக்கணம் மணம் அருள் பெருமாளே.

**விளக்கம்**

திருக்கையிலே நிறைந்துள்ள பழங்களையும், அவலையும், பொரியையும், அப்பத்துடன் உண்கிற, யானை முகத்தையுடைய விநாயகப் பெருமானின் திருவடிகளைத் துதித்து, தனது உண்மையைத் தேர்ந்து தெளிய அறிந்து கொண்ட தொண்டர்களின், மனத்தில் வீற்றிருந்தருள் செய்பவரே! தன்னைக் சார்ந்தார்க்குக் கற்பக மரம் போல அருள்பவரே! என்று துதிக்க, கருமங்கள் வரைவில் நீங்கும், மூன்றாகிய தமிழின் நூலை, மலைகளுக்கெல்லாம் முதன்மையாகிய மேருமலையின் மேல், முன்னாளில் தண் கொம்பால் எழுதிய, முதன்மையான கடவுளே! திரிபுரங்களை, எரித்து அருளிய அந்தப் பெருமையையுடைய சிவபெருமான் எழுந்தருளி இருக்கும் தேரினுடைய அச்சை, முரிந்து துகளாகும்படி செய்த, மிகவுந் துணிவுடையவரே! வள்ளியம்மையாரை மணந்தருள வந்த போழ்து எவ்வாறு வலிந்து வந்து அவளே அணையச் செய்வது என்னும் அம்மனத் துன்பத்துடன் சுப்பிரமணியப் பெருமான் சென்றிருந்த, வள்ளியம்மையார் இருந்த அந்தத் தினைப்புனத்தின் கண், பெரிய யானையாகி, அந்தக் குறக்கன்ணி ஆகிய வள்ளி அம்மையோடு, அநீதக் தன் கம்பியாகிய முருகவேளை, அந்த நேரத்திலேயே, மணந்து கொள்ளுமாறு திரு அருளைச் செய்த பெருமானே! உமா தேவியாரின் திருப்புதல்வனை, தேன் விரியும் பூக்களைக்கொண்டு வணங்குகுவன்.

## சுப்பிரமணியர் துதி

**முத்தை தரு பத்தி திரு நகை**

**அத்திக்கு இறை சத்தி சரவண**

**முத்திக்கு ஒரு வித்து குருபர என ஓதும்**

**முக்கண் பரமற்கு சுருதியின்**

**முற்பட்டது கற்பித்து இருவரும்**

முப்பத்து மூ வர்க்கத்து அமரரும் அடி பேண

பத்து தலை தத்த கணை தொடு

ஒற்றை கிரி மத்தை பொருது ஒரு

பட்ட பகல் வட்ட திகிரியில் இரவாக

பத்தற்கு இரதத்தை கடவிய

பச்சை புயல் மெச்ச தகு பொருள்

பட்சத்தொடு ரட்சித்து அருள்வதும் ஒரு நாளே?

தித்தித்தெய ஒத்த பரிபுர

நிர்த்த பதம் வைத்து பயிரவி

திக்கு ஒட்க நடிக்க கழுகொடு கழுது ஆட

திக்கு பரி அட்ட பயிரவர்

தொக்கு தொகு தொக்கு தொகுதொகு

சித்ர பவுரிக்கு த்ரி கடக என ஓத

கொத்து பறை கொட்ட களம் மிசை

குக்கு குகு குக்கு குகுகுகு

குத்தி புதை புக்கு பிடி என முது கூகை

கொட்புற்று எழ நட்பு அற்ற அவுணரை

வெட்டி பலி இட்டு குலகிரி

குத்துப்பட ஒத்து பொர வ(ல்)ல பெருமாளே.

விளக்கம்

முத்தை நிகர்த்த, அழகிய தந்த பத்திகளையுடைய, தேவகுஞ்சரி அம்மையாருக்குக் கணவனே! சக்தி வேலாயுதத்தைக் தாங்கிய, கந்தக் கடவுளே வீட்டிற்கு ஒப்பு இல்லாத விதையைப் போன்றவனே! தந்தைக்கும் குருவாக இருந்தவனே! என்று துதிக்கின்ற திருக்கண்களை உடைய மூன்று சிவபெருமானுக்கு, மறையின் முதன்மையாய்ச் சொல்லப் பெறுவதாகிய குடிலை மந்திரத்தை, உபதேசித்து, மாலும் அயனும் ஆகிய இருவரும் முப்பத்து முக்கோடி தேவர்களும், பாதங்களை வணங்கவும், தித்தித்தியெ என்னும் இசைத்தாள ஒலக்குச் சரியாக, ஒத்து ஒலக்கும் பாதச் சிலம்புகளை, அடியிட்டு, பயிரவி என்னும் ராகத்தை, திசைகளிற் பொருந்த திருநடனஞ் செய்யவும், கழுகுகளோடு பேய்களும் கூடி நின்றாடவும் எட்டுத் திசைகளிலுள்ள உலகத்தைக் காக்கின்ற எட்டுப் பயிரவர்களும், அடிகிய நடனத்துக்கு தொக்குத்தொகு தொக்குதொகு, தொகுதிரகடக என்னும் இவ்விசை ஓசையைக் கூறவும், கூட்டமாகிய பற்பல பறைகள், அடித்து முடிக்கவும், போர்க்களத்தில் குக்குக்குகு குக்குக் குகுகுகு என்னும் ஒலியோடு, முதிர்ந்த கோட்டான், குத்திப் புதை, புகுந்து பிடி என்று குமுறவும், சுழன்று மேலே தாக்கி எழ, நட்புத் தன்மை இல்லாது பகை பாராட்டி வந்த அசுரர்களை வெட்டிக் கொன்று பலியாக இட்டு, பொருத்தமாகச் சண்டை செய்யும்படியான வல்லமையைக் கொண்பு, பெருமானோ

**லகலெ னச்சில கலைகள் பிதற்றுவ**

**தொழிவ துனைச்சிறி ...... துரையாதே**

**கருவழிதத்திய மடுவ தனிற்புகு**

**கடுநர குக்கிடை ...... யிடைவீழா**

**உலகு தனிற்பல பிறவி தரித்தற**

**வுழல்வது விட்டினி ...... யடிநாயேன்**

**உனதடி மைத்திரள் அதனினு முட்பட**

**வுபய மலர்ப்பத ...... மருள்வாயே**

**குலகிரி பொட்டெழ அலைகடல் வற்றிட**

**நிசிசர னைப்பொரு ...... மயில்வீரா**

**குணதர வித்தக குமர புனத்திடை**

**குறமக ளைப்புணர் ...... மணிமார்பா**

**அலைபுன லிற்றவழ் வளைநில வைத்தரு**

**மணிதிரு வக்கரை ...... யுறைவோனே**

**அடியவ ரிச்சையி லெவையெவை யுற்றன**

**அவைதரு வித்தருள் ...... பெருமாளே.**

**விளக்கம்**

கலகல என்ற ஆரவாரச் சத்தத்துடன் சில நூல்களை, ஓதிப் பிதற்றுவது ஒழிய வேண்டிய ஒன்றாகும் - உன்னைக் கொஞ்சமேனும் துதிக்காமல், கருக்குழியில் வேகமாகச் செலுத்தும் பள்ளத்தில் புகுந்து, பொல்லாடி நகரத்தின் மத்தியில் விழுந்து விடாமல், இவ்வுலகில் பல பிறப்புகளை எடுத்து மிகவும் திரிநலை விட்டு, இனியாவது, கீழான நாய் போன்ற அடியேனும் உன் அடியார் கூட்டத்தின் உள்வட்டத்தில் ஒருவனாகும்படியாக உன்னிரு மலர்ப் பாதங்களை அருள்வாயாக, கிரௌஞ்சமலைக் கூட்டங்கள் பொடியாகும்படி அலைவீசும் கடல் நீரின்றி வற்றிப் போகும்படி அசுரனாம் சூரனோடு போர் செய்த வேல் வீரனே. நற்குணத்தவனே ஞானமூர்த்தியே குமரனே, தினைப் புனத்தின் இடையே குறமகள் வள்ளியை மணநீத அடிகிய மார்பனே. அலைவீசும் நீரிலே தவழ்கின்ற சங்குகள் பிரகாசிக்கின்ற, அடிகிய திருவக்கரைக் தலத்தில் வீற்றிருப்பவனே. உன் அடியார்களுடைய மனத்தில் என்னென்ன விருப்பங்கள் உள்ளனவோ அன்ன ஆசைகளை வரவழைத்து நிறைவேற்றி அருளும் பெருமாளே.

**கழைமுத்து மாலை புயல்முத்து மாலை**

**கரிமுத்து மாலை ...... மலைமேவுங்**

**கடிமுத்து மாலை வளைமுத்து மாலை**

**கடல்முத்து மாலை ...... யரவீனும்**

**அழல்முத்து மாலை யிவைமுற்று மார்பி**

**னடைவொத்து லாவ ...... அடியேன்முன்**

**அடர்பச்சை மாவி லருளிற்பெ ணோடு**

**மடிமைக்கு ழாமொ ...... டருள்வாயே**

**மழையொத்த சோதி குயில்தத்தை போலு**

**மழலைச்சொ லாயி ...... யெமையீனு**

**மதமத்த நீல களநித்த நாதர்**

**மகிழ்சத்தி யீனு ...... முருகோனே**

**செழுமுத்து மார்பி னமுதத்தெய் வானை**

**திருமுத்தி மாதின் ...... மணவாளா**

**சிறையிட்ட சூரர் தளைவெட்டி ஞான**

**திருமுட்ட மேவு ...... பெருமாளே.**

**விளக்கம்**

கரும்பு தரும் முத்தாலான மாலை, மேகம் தரும் மழைத்துளிகளால் ஆன மாலை, யானை தரும் முத்தாலான மாலை, மலையிற் கிடைக்கும் சிறப்பான முத்தினால் ஆன மாலை, சங்கிலிருந்து கிடைக்கும் முத்தாலான மாலை, கடலில் பெறப்படும் முத்தாலான மாலை, பாம்பு தரும் சூடுள்ள முத்தாலான மாலை, இப்படி எல்லா மாலைகளும் மார்பிலே தகுதி பெற்றுப் புரண்டு அசைய, அடியேனின் எதிரே

அடர்ந்த பச்சை நிறத்துக் குதிரை போன்ற மயிலில் இச்சா சக்தியாம் வள்ளியுடனும், உன் அடியார் கூட்டத்துடனும், வந்து அருள் புரிவாயாக. மேகம் போன்ற நிறத்தை உடைய ஜோதி உமை, குயிலும் கிளியும் போன்று மழலை மொழி பேசும், எம்மை ஈன்ற, தாய், பொன் ஊமத்தைமலரை (ஜடையில்) அணிந்தவரும், நீல நிறம் கொண்ட கழுத்தை உடையவரும், என்றும் அழியாது இருப்பவருமான தலைவர் சிவபிரான் மகிழ்கின்ற சக்தியாம் பார்வதி தேவி பெற்ற முருகனே, செழிப்புள்ள முத்துமாலை பூணும் மார்பை உடைய, அமுதமயமான தேவயானை, மேலான முக்தியைத் தரவல்ல மாதரசியின் மணவாளனே, சிறையில் தேவர்களை வைத்த சூரர்கள் அவர்களுக்குப் பூட்டிய விலங்கைத் தறித்து எறிந்தவனே, ஞானனே, திருமுட்டம்மூழ

என்ற தலத்தில் அமர்ந்த பெருமாளே.

**பத்தியால் யானுனைப் பலகாலும்**

**பற்றியே மாதிருப் புகழ்பாடி**

**முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்**

**முத்தியே சேர்வதற் கருள்வாயே**

**உத்தமா தானசற் குணர்நேயா**

**ஒப்பிலா மாமணிக் கிரிவாசா**

**வித்தகா ஞானசத் திநிபாதா**

**வெற்றிவே லாயுதப் பெருமாளே**

**விளக்கம்**

அன்பினால் உன்னை உறுதியாக பல நாட்களாக விடாது பற்றிக்கொண்டு உயர்ந்த திருப்புகழைப் பாடி ஜீவன் முக்தனாகும் வழியிலே என்னை இடையறா இன்ப வாழ்வோம் சிவகதியே சேர்ந்து உய்வதற்கு திருவருள் புரிவாயாக. உத்தம குணங்களைப் பற்றிக்கொண்டுள்ள நல்ல இயல்புள்ளவர்களின் நண்பனே சமானம்

இல்லாத பெருமை பொருந்திய ரத்னகிரியில் வாழ்பவனே பேரறிவாளனே! திருவருள் ஞானத்தைப் பதியச் செய்பவனே. வெற்றியைத் தரும் வேலை ஆயுதமாகக் கொண்ட பெருமாளே!

## கந்தரலங்காரம்

**முன்னுரை**

கந்தர் அலங்காரம் என்பது அருணகிரிநாதர் இயற்றிய முருகன் பற்றிய பக்திப் பாடல்கள் கொண்ட நூலாகும். தமிழ்ச் சிற்றிலக்கிய வரிசையில் பாடப்பெற்ற முதல் அலங்கார நூல் இதுவாகும். காப்பு பாடல் ஒன்றும், நூற்பயன் பாடல் எழும் சேர்ந்து மொத்தம் 108 பாடல்கள் கொண்ட இந்நூல் முருகனிடமிருந்து ஞான உபதேசம் பெறுவதைப் போன்று பாடல்கள் அமைந்துள்ளன.

**தேனென்று பாகென்றுவமிக் கொணாமொழித் தெய்வவள்ளி**
**கோனென் றெனக்குப் தேசித்த தொன்றுண்டு கூறவற்றோ**
**வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணுமன்று**
**தானன்று நானன் றசரீரி யன்று சரீரியன்றே.**

**விளக்கம்**

தேன் என்றும் கற்கண்டு என்றும் ஒப்புமை சொல்வதற்கு இயலாத இனிய மொழியை உடைய தெய்வமடந்தையாகிய வள்ளிநாயகியாரது கணவராகிய திருமுருகப்பெருமான் அடியேனுக்குக் குருவாக வந்து உபதேசித்து அருளிய மெய்ப்பொருள் ஒன்று உள்ளது. அ∴து ஆகாயம் அன்று. காற்று அன்று, நெருப்பு அன்று கண்ணீர் அன்று, மண்ணும் அன்று தான் அன்று, நான் அன்று, உருவமில்லாதது அன்று. உருவத்தை உடையதும் அன்று. அ∴து ஒன்றும் அற்ற ஒன்று.

**தண்டா யுதமுந் திரிசூல மும்விழத் தாக்கியுன்னைத்**

**திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலனுக்குத்**

**தொண்டா கியவென் னவிரோத ஞானச் சுடர்வடிவாள்**

**கண்டா யடாவத்த காவந்து பார்சற்றென் கைக்கெட்டவே.**

**விளக்கம்**

அந்தகா உன்னுடைய கதாயுதமும் முத்தலைச் சூலமும் உன் கையிலிருந்து பொடிபட்டுச் சிந்த உன்னை மோதி வலியழிந்து வருந்துமாறு துண்டித்து உன்னை வீழ்த்துவேன். திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள வேற்படையுடைய திருமுருகப்பெருமானுக்கு அடிமையாகிய அடியேனுடைய விரோதமில்லாத ஞானமாகிய ஒளிபொருந்தியதும் கூர்மைமானதுமாகிய வாளாயுதத்தைப் பார்த்தாயடா? எனது கைக்கு எட்டுகின்ற அளவில் சிறிது தீ வந்து பாராம்!

**சேல்பட் பழிந்தது செந்துர் வயற்பொழில் தேங்கடம்பின்**

**மால்பட் பழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோனீ**

**வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்புமவன்**

**கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுக்கே.**

**விளக்கம்**

சேல் என்னும் மீன்கள் குதித்துத் திரிவதனால் திருச்செந்தூரில் உள்ள வயல்கள் அழிந்துபோயின. மலர்க்கொடி போன்ற பெண்களின் மனமானது சோலையிலுள்ள இனிமையான கடப்ப மலர்மாலையை விரும்பியதால் அழிந்து போயிற்று. பெருமை தங்கிய மயில் வாகனத்தையுடைய திருமுருகப் பெருமானது. வேலாயுதம் பட்டதால் கடலும் சூரபன்மனும் கிரௌஞ்சமலையும் அழிந்துபோயின. இவ்வுலகில் கந்தவேளின் திருவடிகள் அடியேனின் தலைமீது பட்டதால் பிரம்மதேவனால் எழுதப்பட்டிருந்த விதி என்னும் கையெழுத்தும் அழிந்துபோயிற்று.

**விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பானர்கள் மெய்ம்மை குன்றா**

**மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த**

**பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி**

**வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே.**

**விளக்கம்**

நமது கண்களுக்குத் துணையாவது திருமுருகப் பெருமானது புனிதமானவையும் மென்மையானவையுமான செந்தாமரை மலர் போன்ற திருவடிகளேயாகும். உண்மையில் ஒரு சிறுதும் குறையாத சொல்லுக்குத் துணையாவது "முருகா" என்று கூறும் அப்பரமபதியின் திருநாமங்களேயாகும். முன்பு செய்த பழியைத் தருகின்ற பாவத்தை அகற்றுவதற்குத் துணையாவது திருமுருகப் பெருமானின் பன்னிரண்டு புயங்களுமேயாகும். அஞ்சுத் தண்மையுடைய தனிமையான வழிக்கும் துணையாவது திருச்செங்கோட்டில் எழுந்தருளியுள்ள கந்தப் பெருமானுடைய கூர்மையான வேலாயுதமும் மயிலுமேயாகும்.

**மணிகம முநீனிழ் நிருமால் வலம்புரி யோசையத்த**

**விண்மைழ் சோலையும் வாவியுங் கேட்டது வேலெகினும்**

**திண்கிரி சிமீற விளையாடும் மிள்ளைத் திருவரையற்**

**கிண்கிணி யோசை பதினா லுலகமுங் கேட்பதுவே.**

**விளக்கம்**

மண்ணின் மணம் கமழ்கின்ற உறுதியை உடையவராகிய திருமாலன் வலம்புரிச் சங்கின் அந்த விண்ணுலகில் நறுமணம் வீசும் பூங்காவிலும் தடாகத்திலும் கேட்டது . வேலாயுதத்தைத் திருக்கரத்தில் ஏநீதி திட்பமான மலைகணர் உதிருமாறு விளையாடுகின்ற பிள்ளையாகிய குமாரக் கடவுளின் அடிகிய இடையில் விளங்கும் கிண்கிணியின் நாதமானது பதினானிகு உலனங்களிலும் கேட்டது.

## தாயுமானவர் பாடல்கள்

பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (1706-1744) திகழ்ந்த பெரியார் தாயுமான சுவாமிகள். திருமறைக் காட்டிலே சைவ வேளாளர் குலத்திலே கேடிலியப்பப் பிள்ளையின் இரண்டாவது மகனாய்ப் பிறந்தார். திரிசிரபுரத்தில் விசயரகுநாத சொக்கலிங்க நாயக்கரின் கணக்கராகத் தந்தை பணி புரிய, வட மொழி, தென்மொழி இரண்டுங் கற்ற இவர் மௌன குரு என்பாரிடம் அறிவுரை பெற்றார். தந்தையார் இறந்தவுடன் அரசு வேலையிலமர்ந்தார் நாயக்கர் இறந்த பின் அரசி மீனாட்சி தன்பாற் காட்டிய முறையற்ற அன்பு காரணமாக ஒரு நாளிரவு ஊரை விட்டோடினார். இராமநாதபுரத்தில் தன் தமையனோடு இருந்தார். அவர் கட்டாயப்படுத்தியதால் மட்டுவார்குழலி என்ற பெண்ணை மணந்தார். கனகசபாபதி எனும் ஆண்குழந்தை ஈன்ற மனைவி மறையவே யோகஞானங்களில் சிறக்கத் துறவு பூண்டார். சைவ சித்தாந்தம், அத்வைதம் ஆகிய இரு நிலைக்கும் ஒரு வகை சமரசம் கண்டவர். ‘உபநிடதக் கருத்துகளையும் மற்ற ஞான நூல்களின் உட்பொருளையும் மிகத் தெளிவாகத் தமிழில் பாடியவர்’ என பேராசிரியர் மு.வரதராசனார் இவரைப் பாராட்டுகிறார். இவரது பாடல்கள் தமிழ்மொழியின் உபநிடதம் எனப்படுகின்றன.

ஆழ்வார்களைப் போன்று காதல் துறைகளின் வாயிலாக உயர்ந்த உண்மைகளை உலகுக்கு உணர்த்தினார். கண்ணி என்றழைக்கப்படும் இரண்டடிப் பாடல் வகையை இவர் கையாள்கிறார். இவரது பாடல்கள் அனைத்தும் தாயுமானவர் பாடல்கள் என்ற நூலாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. சிற்சில இடங்களில் சித்தர் கருத்தை ஒத்துப் பாடும் இவர், தம் காலத்தில் சமயப் போராட்டங்களையும் பூசல்களையும் கண்டு மனம் வெறுத்துச் சமரச ஒளியையே அதிகம் பாடியுள்ளார். தேசோமயானந்தம், கருணாகரம், பரஞ்சோதி, பரதெய்வம் போன்ற சொற்கள் இவர்க்கே உரியவை. “சும்மா இருக்க அருளாய்” என்று இறைவனிடம் வேண்டுபவர்,

**1 திருவருள் விலாசப் பரசிவ வணக்கம்**

பாடல்: 1

**அங்கு இங்கு எனாதபடி எங்கும் ப்ரகாசமாய் ஆனந்த பூர்த்தி ஆகி**

**அருளொடு நிறைந்தது எது தன் அருள் வெளிக்குளே அகிலாண்ட கோடி எல்லாம்**

**தங்கும்படிக்கு இச்சைவைத்து உயிர்க்குயிராய்த் தழைத்தது எது மன வாக்கினில்**

**தட்டாமல் நின்றது எது சமயகோடிகள் எலாம் தம் தெய்வம் எம் தெய்வம் என்று**

**எங்கும் தொடர்ந்து எதிர்வழக்கிடவும் நின்றது எது எங்கணும் பெருவழக்காய்**

**யாதினும் வல்ல ஒரு சித்தாகி இன்பமாய் என்றைக்கும் உள்ளது எது அது**

**கங்குல் பகல அற நின்ற எல்லை உளது எது அது கருத்திற்கு இசைந்தது அதுவே**

**கண்டன எலாம் மோன உரு வெளியதாகவும் கருதி அஞ்சலிசெய்குவாம்**

**விளக்கம்**

எங்கும் ஒளியாய் ஆனந்த நிறைவாய் அருள் வெளியாய் ஆசை கொண்ட உயிராய்த் தழைத்தது எது? மனத்திலும் வாக்கிலும் தடையில்லாமல் நிற்பது எது கொள்ளுமாறு ஒரு சித்தாகவும் இன்பமாகவும் என்றென்றும் உள்ளது எது. அதுவே என் கருத்துக்கு இசைந்தது அது மோன உருவம் கொண்ட வெளி இதனைக் கருத்தில் கொண்டு வணங்குவோம்.

பாடல்: 2

**ஊர் அனந்தம் பெற்ற பேர்அனந்தம் சுற்றும் உறவு அனந்தம் வினையினால்**

**உடல் அனந்தம் செயும் வினை அனந்தம் கருத்தோ அனந்தம் பெற்ற பேர்**

**சீர் அனந்தம் சொர்க்க நரகமும் அனந்தம் நல் தெய்வமும் அனந்த பேதம்**

**திகழ்கின்ற சமயமும் அனந்தம் அதனால் ஞான சிற்சத்தியால் உணர்ந்து**

**கார் அனந்தம் கோடி வருஷித்தது என அன்பர் கண்ணும் விண்ணும் தேக்கவே**

**கருது அரிய ஆனந்தமழை பொழியும் முகிலை நம் கடவுளைத் துரிய வடிவைப்**

**பேர்அனந்தம் பேசி மறை அனந்தம் சொலும் பெரிய மௌனத்தின் வைப்பைப்**

**பேசு அரும் அனந்த பத ஞான ஆனந்தமாம் பெரிய பொருளைப் பணிகுவாம்**

**விளக்கம்**

ஊர், பேர், உறவு, உடல், வினை, கருத்து, சொர்க்கம், நரகம், தெய்வம், சமயம் முதலானவை பலப்பல இவற்றை ஞான சித்தியால் உணர்ந்துகொள்ள வேண்டும். அவர் ஆனந்த மழை பொழியும் முகில் கடவுள் துரிய வடிவம், பௌன வைப்பு அதற்குப் பல பெயர்களையும், மறைகளையும் சொல்கிறோம். அது பெரிய பொருள்.

**பாடல்: 3**

**அத்துவித வத்துவைச் சொப்ரகாசத் தனியை அரு மறைகள் முரசு அறையவே**

**அறிவினுக்கு அறிவு ஆகி ஆனந்த மயமான ஆதியை அநாதி ஏக**

**தத்துவ சொருபத்தை மத சம்மதம் பெறாச் சாலம்ப ரகிதமான**

**சாசுவத புட்கல நிராலம்ப ஆலம்ப சாந்தபத வ்யோம நிலையை**

**நித்த நிர்மல சகித நிஷ்ப்ரபஞ்சப் பொருளை நிர்விஷய சுத்தமான**

**நிர்விகாரத்தைத் தடத்தமாய் நின்று ஒளிர் நிரஞ்சன நிராமயத்தைச்**

**சித்தம் அறியாதபடி சித்தத்தில் நின்று இலகு திவ்ய தேசோமயத்தைச்**

**சிற்பர வெளிக்குள் வளர் தற்பரமதான பரதேவதையை அஞ்சலிசெய்வாம்**

**விளக்கம்**

தேவதை அத்துவைதப் பொருள் சொல் விளங்கும் கோயில் மறை மரசுகள் அவளை முழங்குகின்றன. அவள் அறிவுக்கு அறிவு ஆனந்த மயம் ஆதி அநாதி தத்துவ உருவம் முதலானவையாக விளங்குகிறாள்.

**பாடல்: 4**

**வாசா கயிங்கரியம் அன்றி ஒரு சாதனம் மனோ வாயு நிற்கும் வண்ணம்**

**வாலாயமாகவும் பழகி அறியேன் துறவு மார்க்கத்தின் இச்சை போல**

**நேசானுசாரியாய் விவகரிப்பேன் அந்த நினைவையும் மறந்த போது**

**நித்திரைகொள்வேன் தேகம் நீங்கும் என எண்ணிலோ நெஞ்சம் துடித்து அயருவேன்**

**பேசாத ஆனந்தம் நிட்டைக்கும் அறிவுஇலாப் பேதைக்கும் வெகு தூரமே**

**பேய்குணம் அறிந்து இந்த நாய்க்கும் ஒரு வழி பெரிய பேர்இன்ப நிட்டை அருள்வாய்**

**பாசாடவிக்குளே செல்லாதவர்க்கு அருள் பழுத்து ஒழுகு தேவதருவே**

**பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம்அற நிறைகின்ற பரிபூரணானந்தமே**

**விளக்கம்**

மனக் காற்றை நிறுத்த முடியவில்லை மனம் போலத் திரிகிறேன். தூங்கும் போதும் நெஞ்சம் ஓடுகிறது. எனக்கும் ஆனந்த நிட்டைக்கும் வெகுதூரம் பரிபூரண ஆனந்தமே! பேயும் நாயுமாகத் திரியும் எனக்குப் பேரின்ப அமைதி தருக.

**பாடல்: 5**

**தெரிவாக ஊர்வன நடப்பன பறப்பன செயல் கொண்டு இருப்பன முதல்**

**தேகங்கள் அத்தனையும் மோகம்கொள் பௌதிகம் சென்மித்த ஆங்கு இறக்கும்**

**விரிவாய பூதங்கள் ஒன்றோடொன்றாய் அழியும் மேற்கொண்ட சேடம் அதுவே**

**வெறு வெளி நிராலம்பம் நிறை சூன்யம் உபசாந்த வேத வேதாந்த ஞானம்**

**பிரியாத பேர்ஒளி பிறக்கின்ற அருள் அருள்பெற்றோர்கள் பெற்ற பெருமை**

**பிறவாமை என்றைக்கும் இறவாமையாய் வந்து பேசாமையாகும் எனவே**

**பரிவாய் எனக்கு நீ அறிவிக்க வந்ததே பரிபாக காலம் அலவோ**

**பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம்அற நிறைகின்ற பரிபூரணானந்தமே**

**விளக்கம்**

ஐம்பூதங்களும் ஒன்றோடு ஒன்றாக இருந்து அழிவது 'சேடம்' பிறவாமையே இறவாமை அதுவே பேசாமை ஆனந்தமே! இதனை எனக்கு அறிவிக்க வந்திருப்பது பக்குவமான காலம்.

**பாடல்: 6**

**ஆராயும் வேளையில் பிரமாதி ஆனாலும் ஐய ஒரு செயலும் இல்லை**

**அமைதியொடு பேசாத பெருமை பெறு குணசந்த்ரராம் என இருந்த பேரும்**

**நேராக ஒரு கோபம் ஒரு வேளை வர அந்த நிறைவு ஒன்றும் இல்லாமலே**

**நெட்டுயிர்த்துத் தட்டழிந்து உளறுவார் வசன நிர்வாகர் என்ற பேரும்**

**பூராயமாய் ஒன்று பேசும் இடம் ஒன்றைப் புலம்புவார் சிவராத்திரிப் போது**

**துயிலோம் என்ற விரதியரும் அறி துயில் போலே இருந்து துயில்வார்**

**பாராதி-தனில் உள்ள செயல் எலாம் முடிவிலே பார்க்கில் நின் செயல் அல்லவோ**

**பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம்அற நிறைகின்ற பரிபூரணானந்தமே**

**விளக்கம்**

பிரமன் முதலானோரும் செய்வது ஒன்றும் இல்லை. பேசாத குணவானாக இருந்தாலும் சினம் வந்தால் உளறிக் கொட்டுவர். சிவராத்திரி அன்று தூங்கா விரதம் இருப்போரும். அறிதுயில்போல உறங்குவா். ஆனந்தமே எண்ணிப் பார்த்தால் முடிவில் எல்லாம் நின்செயல்.

**பாடல்: 7**

**அண்ட பகிரண்டமும் மாயா விகாரமே அ மாயை இல்லாமையே**

**ஆம் என்னும் அறிவும் உண்டு அப்பாலும் அறிகின்ற அறிவினனை அறிந்து பார்க்கின்**

**எண் திசை விளக்கும் ஒரு தெய்வ அருள் அல்லாமல் இல்லை எனும் நினைவு உண்டு இங்கு**

**யான் எனது அறத் துரிய நிறைவாகி நிற்பதே இன்பம் எனும் அன்பும் உண்டு**

**கண்டன எலாம் அல்ல என்று கண்டனைசெய்து கருவி கரணங்கள் ஓயக்**

**கண் மூடி ஒரு கணம் இருக்க என்றால் பாழ்த்த கர்மங்கள் போராடுதே**

**பண்டை உள கர்மமே கர்த்தா எனும் பெயர்ப் பக்ஷம் நான் இச்சிப்பனோ**

**பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம்அற நிறைகின்ற பரிபூரணானந்தமே**

**விளக்கம்**

எல்லாம் மாயையின் விகாரம் அந்த மாயை இல்லாமல் யாம் என்னும் அறிவு உண்டு. தெய்வம் இல்லை என்னும் நினைவும் உண்டு. யான் எனது என்று அறிந்த நிறைவாய் நிற்பதே இன்பம் எனும் அன்பு கண்ணை மூடிக்கொண்டு இருந்தாலும் கரும நினைவுகள் பேராடுகின்றன கருமமே கருத்தா.

**பாடல்: 8**

**சந்ததமும் எனது செயல் நினது செயல் யான் எனும் தன்மை நினை அன்றி இல்லாத்**

**தன்மையால் வேறு அலேன் வேதாந்த சித்தாந்த சமரச சுபாவம் இதுவே**

**இந்த நிலை தெளிய நான் நெக்குருகி வாடிய இயற்கை திருஉளம் அறியுமே**

**இநிலையிலே சற்று இருக்க என்றால் மடமை இத சத்ருவாக வந்து**

**சிந்தை குடிகொள்ளுதே மலம் மாயை கன்மம் திரும்புமோ தொடுவழக்காய்ச்**

**சென்மம் வருமோ எனவும் யோசிக்குதே மனது சிரத்தை எனும் வாளும் உதவிப்**

**பந்தம்அற மெய்ஞ்ஞான தீரமும் தந்து எனைப் பாதுகாத்து அருள்செய்குவாய்**

**பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம்அற நிறைகின்ற பரிபூரணானந்தமே**

**விளக்கம்**

என்செயல் நின்செயல் நான் நீ. இல்லாமல் இல்லை. நானும் நீயும் வேறு அன்று. இதனை உணந்திருக்க முடியாமல் மடமை மயக்குகிறது. ஆனந்தமே, சிரத்தை வாளுடன் வந்து எனக்கு அருள் செய்.

**பாடல்: 9**

**பூதலயம் ஆகின்ற மாயை முதல் என்பர் சிலர் பொறி புலன் அடங்கும் இடமே**

**பொருள் என்பர் சிலர் கரண முடிவு என்பர் சிலர் குணம் போன இடம் என்பர் சிலபேர்**

**நாத வடிவு என்பர் சிலர் விந்துமயம் என்பர் சிலர் நட்டநடுவே இருந்த**

**நாம் என்பர் சிலர் உருவமாம் என்பர் சிலர் கருதி நாடில் அருவு. என்பர் சிலபேர்**

**பேதம்அற உயிர் கெட்ட நிலையம் என்றிடுவர் சிலர் பேசில் அருள் என்பர் சிலபேர்**

**பின்னும் முன்னும் கெட்டசூனியம் அது என்பர் சிலர் பிறவுமே மொழிவர் இவையால்**

**பாதரசமாய் மனது சஞ்சலப்படும் அலால் பரம சுக நிஷ்டை பெறுமோ**

**பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம்அற நிறைகின்ற பரிபூரணானந்தமே**

**விளக்கம்**

பூதலமாகிய மாயை பொறிபுலன் அடங்குமிடம் பொருள், செயல்முடிவு, குணம், இடம், நாதவடிவு, விந்துமயம், நாம், உரு, அரு, உயிர் கெட்ட நியைம், அருள், சூனியம் என்றெல்லாம் உன்னைச் சொல்லி மனம் சஞ்சலப்படுகின்றனர்.

**பாடல்:** 10

**அந்தகாரத்தை ஓர் அகம் ஆக்கி மின் போல் என் அறிவைச் சுருக்கினவர் ஆர்**

**அ அறிவு-தானுமே பற்றினது பற்றாய் அழுந்தவும் தலை மீதிலே**

**சொந்தமாய் எழுதப் படித்தார் மெய்ஞ்ஞான சுக நிஷ்டை சேராமலே**

**சோற்றுத் துருத்தியைச் சதம் எனவும் உண்டு உண்டு தூங்கவைத்தவர் ஆர்-கொலோ**

**தந்தை தாய் முதலான அகில ப்ரபஞ்சம்-தனைத் தந்தது எனது ஆசையோ**

**தன்னையே நோவனோ பிறரையே நோவனோ தற்காலம்-அதை நோவனோ**

**பந்தமானது தந்த வினையையே நோவனோ பரமார்த்தம் ஏதும் அறியேன்**

**பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம்அற நிறைகின்ற பரிபூரணானந்தமே**

**விளக்கம்**

என் அறிவைச் சுருக்கியது யார் அந்த அறிவைத் தலையில் எழுதிப் படித்ததுவர் யார், சோற்றுத் துருத்தியைத் தூங்க வைத்தது யார், தந்தை தாயோடு ஆசையையும் தந்தது யார், என்னை நொந்துகொள்வேனா, பிறரை நொந்துகொள்வேனா, காலத்தை நொந்துகொள்வேனா, வினையை நொந்து கொள்வேனா.

**பாடல்: 11**

**வாராது எலாம் ஒழிய வருவன எலாம் எய்த மனது சாட்சியதாகவே**

**மருவ நிலை தந்ததும் வேதாந்த சித்தாந்த மரபு சமரசமாகவே**

**பூராயமாய் உணர ஊகம்-அது தந்ததும் பொய் உடலை நிலை அன்று எனப்**

**போத நெறி தந்ததும் சாசுவத ஆனந்த போகமே வீடு என்னவே**

**நீராளமாய் உருக உள்ளன்பு தந்ததும் நின்னது அருள் இன்னும் இன்னும்**

**நின்னையே துணை என்ற என்னையே காக்க ஒரு நினைவு சற்று உண்டாகிலோ**

**பார் ஆதி அறியாத மோனமே இடைவிடாப் பற்றாக நிற்க அருள்வாய்**

**பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம்அற நிறைகின்ற பரிபூரணானந்தமே**

**விளக்கம்**

நம்மை வந்து சேர்வது எதுவாக இருந்தாலும் நம்மிடம் வருவது நம்மை வந்தே சேரும். நம்மிடம் வராத ஒன்று நம்மை வந்து சேர்வதும் இல்லை. பொய்யாக பிறரிடம் பேசும் பொய்யுடல் ஆனது நிலையில்லாதது ஆகும். ஆனந்த போகமே விடு பேற்றை அடைவது ஆகும். உள்ளத்தில் வரும் அன்பு தந்ததெல்லாம் உன்னுடைய அருள் ஆகும். நீயும் நானும் பற்றி நிற்க நின்னுடைய அருள் தந்து அருள்க பரிபூராணந்தமே!.

**பாடல்: 12**

**ஆழ் ஆழி கரை இன்றி நிற்கவிலையோ கொடிய ஆலம் அமுதாகவிலையோ**

**அக் கடலின் மீது வட அனல் நிற்கவில்லையோ அந்தரத்து அகில கோடி**

**தாழாமல் நிலைநிற்கவில்லையோ மேருவும் தனுவாக வளையவிலயோ**

**சத்த மேகங்களும் வச்ரதரன் ஆணையில் சஞ்சரித்திடவில்லையோ**

**வாழாது வாழவே இராமன் அடியால் சிலையும் மட மங்கை ஆகவிலையோ**

**மணிமந்த்ரம் ஆதியால் வேண்டு சித்திகள் உலக மார்க்கத்தில் வைக்கவிலையோ**

**பாழான என் மனம் குவிய ஒரு தந்திரம் பண்ணுவது உனக்கு அருமையோ**

**பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம்அற நிறைகின்ற பரிபூரணானந்தமே**

**விளக்கம்**

கடல் நீரானது எந்த ஒரு கரையும் இல்லாமல் நிற்கவில்லையா சிவனது தொண்டையில் நஞ்சு அமிழ்தமாக மாறவில்லையா, தண்ணீரில் வட அனல் எரியவில்லையா, அந்தரத்தில் அண்டங்கள் நிற்கவில்லையா, மேருமலையே வில்லாக வளைய வில்லையா இந்திரன் ஆணையால் மேகங்கள் உலவவில்லையோ, இராமன் காலடி பட்டுக் கல்லே பெண்ணாக மாறவில்லையா என இவை போல மந்திரச் சித்திகள் என் மனம் முழுதும் குவிய தந்திரம் செய்வது உனக்கு அருமையோ பரிபூராணந்தமே.

**பாடல்:** 13

**ஆசைக்கு ஓர் அளவு இல்லை அகிலம் எல்லாம் கட்டி ஆளினும் கடல் மீதிலே**

**ஆணை செலவே நினைவர் அளகேசன் நிகராக அம் பொன் மிக வைத்த பேரும்**

**நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர் நெடு நாள் இருந்த பேரும்**

**நிலையாகவே இனும் காயகற்பம் தேடி நெஞ்சு புண் ஆவர் எல்லாம்**

**யோசிக்கும் வேளையில் பசி தீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்**

**உள்ளதே போதும் நான் நான் எனக் குளறியே ஒன்றை விட்டு ஒன்று பற்றிப்**

**பாசகடற்குளே வீழாமல் மனது அற்ற பரிசுத்த நிலையை அருள்வாய்**

**பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம்அற நிறைகின்ற பரிபூரணானந்தமே**

**விளக்கம்**

உலகமெல்லாம் ஒரு குடைக்கீழ் ஆண்டாலும் கடலையும் ஆள விரும்புவர். குபேரன் போலச் செல்வம் இருந்தாலும் எல்லாவற்றையும் இரசவாத வித்தையால் பொன்னாக்க அலைவார்கள், நீண்ட நாள் வாழ்வோரும் இன்னும் வாழவேண்டும் என்று காயகல்பம் தின்ன நினைப்பார்கள். எண்ணி பாரத்தால் வாழ்க்கை என்பது பசி தீர உண்பதும் உறங்குவதுமாக இருக்கும். பாசக் கடலுக்குள் விழாமல் உள்ளதே போதும் என்ற மனத்தை எனக்கு அருள் புரிவாயாக பரிபூராணந்தமே!.

**பாடல்:** 14

**நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய் நிறைவாய் நீங்காச்**

**சுத்தமுமாய் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரிய நிறை சுடராய் எல்லாம்**

**வைத்திருந்த தாரகமாய் ஆனந்த மயம் ஆகி மன வாக்கு எட்டாச்**

**சித்து உருவாய் நின்ற ஒன்றைச் சுகாரம்பப் பெருவெளியைச் சிந்தைசெய்வாம்**

**விளக்கம்**

என்றும் நிலைத்து இருப்பது குற்றமற்றது இருப்பிடம் இல்லாதது நிறைவானது. நீங்காமல் இருப்பது தூய்மையானது சேய்மையும் அண்மையுமாய் இருப்பது துரியச் சுடராய் எரிவது. ஆனந்த மயமானது மன வாக்குக்கு எட்டாச் சித்துருவாய் விளங்குவது நலம் தரும் பேரொளி ஆகும்.

**பாடல்:** 15

**யாது மனம் நினையும் அந்த நினைவுக்கு நினைவு ஆகி யாதின்-பாலும்**

**பேதம்அற நின்று உயிருக்கு உயிர் ஆகி அன்பருக்கே பேர்ஆனந்தக்**

**கோதுஇல் அமுது ஊற்று அரும்பிக் குணம் குறி ஒன்று அறத்**

**தன்னைக் கொடுத்துக் காட்டும்**

**தீதுஇல் பராபரம் ஆன சித்தாந்தப் பேர்ஒளியைச் சிந்தைசெய்வாம்**

**விளக்கம்**

மனம் எதை நினைக்கிறதோ அந்த நினைவுக்கு நினைவாகி எந்த உயிரொடும் மாறுபாடு இல்லாமல் அந்த உயிருக்கு உயிராகி அன்பருக்கு ஆனந்த ஊற்றாக குணமும் குறியும் ஒன்றும்படித் தன்னைக் கொடுத்துத் தன்னைக் காட்டும் பேரொளியை நினைப்போம்.

**இராமலிங்க அடிகள் - பிள்ளை பெரு விண்ணப்பம்**

1823-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5-ஆம் தேதி சிதம்பரத்தில் உள்ள மருதூர் என்னும் சிற்றூரில் பிறந்தார். இவரது பெற்றோர் இராமையாபிள்ளை மற்றும் சின்னம்மை ஆவர். மேலும் வள்ளலாருக்கு சபாபதி பிள்ளை, பரசுராமன், உண்ணாமுலை என்ற சகோதரர்களும், சுந்தரம்மாள் என்ற சகோதரியும் இறுக்கிறார்கள். இவரது தந்தை இறந்த காரணத்தினால் வள்ளலார் அவரது அண்ணனுடைய வளர்ப்பில் தான் வளர்ந்து வந்தார். ஆகவே அவரது அண்ணன் தான் இராமலிங்க அடிகளாரை கல்வி படிக்க வைத்தார். ஆனால் வள்ளலாருக்கு கல்வி மீது இருந்த நாட்டத்தினை விட கடவுளாகிய முருகப்பெருமானது தியானத்தில் தான் அதிக ஈடுபாட்டுடன் காணப்பட்டார்.

மேலும் சிறந்த தமிழ் புலவராக திகழும் வகையிலும் நன்கு வல்லமை பெற்று இருந்தார். இதனை தொடர்ந்து குடும்பத்தில் உள்ளோரின் விருப்பத்திற்காக திருமணம் செய்து கொண்டாலே கூட திருமண வாழ்க்கையில் நாட்டம் இல்லாத காரணத்தினால் துறவியாக வாழ ஆரம்பித்தார்.

இராமலிங்க அடிகளார் சத்திய ஞான சபை, சமர சன்மார்க்க சங்கம், சத்திய தருமசாலை ஆகியவற்றை நிறுவினார். திருவருட்பா, சிவநேச வெண்பா, உண்மை நெறி, மனுநீதிச்சோழன் புலம்பல், நெஞ்சறிவுறுத்தல் மற்றும் மகாதேவமாலை என இத்தகைய நூல்களையும் எழுதினார்.

மனுமுறை கண்ட வாசகம் மற்றும் ஜீவகாருண்ய ஒழுக்கம் என்ற உரைநடை நூல்களையும் எழுதினார். மேலும் சிறப்பமிக்க பாடலான வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற பாடலையும் வள்ளலார் அவர்களே பாடினார்கள்.

இத்தகைய பாடலுக்கான பொருளாக ஒருவர் உணவு இல்லாமல் பசியினால் உடல் மெலிந்து இருப்பதனை பார்க்கும் போது நமது உள்ளம் எப்படி வருந்துகிறதோ, அதேபோல் மழை இல்லாமல் நெற்பயிர்கள் அனைத்தும் வாடி வதங்கி நிற்பதை பார்க்கும் போது உள்ளம் துன்படுகிறது என்று கூறியிருக்கிறார்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த வள்ளலாருக்கு புதுநெறி கண்ட புலவர், ஓதாது உணர்ந்த அருட்புலவர் மற்றும் திருவருட்பிரகாச வள்ளலார் என்ற சிறப்பு பெயர்களும் இருக்கிறது. கடைசியாக இராமலிங்க அடிகளார் அவர்கள் 1874-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ஆம் தேதி என்று இயற்கை எய்தினார்.

**பாடல்: 1.**

**தனிப்பெருஞ் சோதித் தலைவனே எனது தந்தையே திருச்சிற்றம் பலத்தே**

**கனிப்பெருங் கருணைக் கடவுளே அடியேன் கருதிநின் றுரைக்கும்விண் ணப்பம்**

**இனிப்புறும் நினது திருவுளத் தடைத்தே எனக்கருள் புரிகநீ விரைந்தே**

**இனிச்சிறு பொழுதும் தரித்திடேன் உன்றன் இணைமலர்ப் பொன்னடி ஆணை.**

**விளக்கம்**

ஒப்பற்ற பெரிய சோதியாகிய தலைவனே, எனக்குத் தந்தையே, திருச்சிற்றம்பலத்தே எழுந்தருளுகின்ற கனிவுடைய பெரிய கருணை யுருவாகிய கடவுளே,. அடியவனாகிய யான் எண்ணி யுரைக்கும் விண்ணப்பத்தை இனிமை மிகும் நின்னுடைய திருவுளத்தின்கண் ஏற்றுக் கொண்டு எனக்குத் திருவருளை விரைந்து செய்தல் வேண்டும் இனி யான் சிறிது போதும் துயர் பொறுக்க மாட்டேன் இது நின்னுடைய இரண்டாகிய மலர் போன்ற பொன்னார் திருவடி ஆணை.

**பாடல்: 2.**

**திரிபிலாப் பொருளே திருச்சிற்றம் பலத்தே திகழ்கின்ற தெய்வமே அன்பர்**

**பரிவுறுந் தோறும் விரைந்துவந் தருளும் பண்பனே பரையிடப் பாகா**

**பெரியபொற் சபையில் நடம்புரி கின்ற பேரருட் சோதியே எனக்கே**

**உரியநல் தந்தைவள்ளலே அடியேன் உரைக்கின்றேன் கேட்டருள் இதுவே.**

**விளக்கம்**

விகாரமில்லாத பரம்பொருளே, தில்லைச் சிற்றம்பலத்தின்கண் எழுந்தருளி விளங்குகின்ற கூத்தனாகிய தெய்வமே., அன்பராயினார் வருத்தமுறுந் தோறும் விரைந்து போந்தருளி நலம் செய்யும் பண்புடையவனே, உமாதேவியை இடப்பாகத்தே உடையவனே, பெருமையையுடைய பொன்னம்பலத்தின்கண் ஞான நடனம் செய்கின்ற பெரிய அருட் சோதியாண்டவனே, என்னுடைய உரிமைத் தந்தையே, வள்ளன்மையுடையவனே, உன் திருவடியை நெஞ்சில் உடைய யான் எண்ணுவதை யுரைக்கப் புகுகின்றேன் இதனைக் கேட்டருள்க.

**பாடல்: 3.**

**தானலா திறையும் உயிர்க்கசை வில்லாத் தலைவனே திருச்சிற்றம் பலத்தே**

**வானலால் வேறொன் றிலைஎன உரைப்ப வயங்கிய மெய்யின்ப வாழ்வே**

**ஊனலால் உயிரும் உளமும்உள் உணர்வும் உவப்புற இனிக்குந்தெள் ளமுதே**

**ஞானநா டகஞ்செய் தந்தையே அடியேன் நவில்கின்றேன் கேட்டருள் இதுவே.**

**விளக்கம்**

தன்னையல்லது வேறு எதனாலும் உயிர்கட்கு அசைவு உளதாக்காத தலைவனே, திருச்சிற்றம்பலத்தின்கண் சிதாகாசமன்றி வேறே யாதும் இல்லை என அறிந்தோர் எடுத்துரைக்க விளங்குகின்ற மெய்ம்மை யின்பமே நுகர்தற்கு அமைந்த வாழ்வானவனே, உடம்பேயன்றி உயிரும், உள்ளமும், உள்ளத்துள்ளுறும் உணர்வும் மகிழ்வுற இன்புறுத்தும் தெளிந்த அமுதாகியவனே, ஞான நாடகத்தைப் புரிந்தருளும் தந்தையே, அடியனாகிய யான் சொல்கின்ற இதனைக் கேட்டருள்க.

**பாடல்: 4.**

**என்னுயிர்க் குயிராம் தெய்வமே என்னை எழுமையும் காத்தருள் இறைவா**

**என்னுளத் தினிக்கும் தீஞ்சுவைக் கனியே எனக்கறி வுணர்த்திய குருவே**

**என்னுடை அன்பே திருச்சிற்றம் பலத்தே எனக்கருள் புரிந்தமெய் இன்பே**

**என்னைஈன் றெடுத்த தந்தையே அடியேன் இசைக்கின்றேன் கேட்கஇம் மொழியே.**

**விளக்கம்**

எனக்கு உயிர்க் குயிராகிய தெய்வமானவனே, எழுபிறப்பும் என்னை ஆண்டருள்கின்ற இறைவனே, என் மனத்துக்கு இன்பம் தருவதாகிய இனிய சுவையுடைய கனி போல்பவனே, எனக்கு நல்லுணர்வை அறிவுறுத்தும் ஆசிரியனே, என் அன்புக்குப் பொருளானவனே, திருச்சிற்றம்பலத்தின்கண் எழுந்தருளி எனக்கு மெய்யின்பம் அருள் புரிந்த பெருமானே, என்னைப் பெற்றெடுத்த தந்து போல்பவனே, அடியவனாகிய யான் எடுத்துரைக்கும் இவ்விண்ணப்பத்தைக் கேட்டருள்க.

**பாடல்: 5.**

**கருணையார் அமுதே என்னுயிர்க் குயிரே கனிந்தசிற் றம்பலக் கனியே**

**வருணமா மறையின் மெய்ப்பொருள் ஆகி வயங்கிய வள்ளலே அன்பர்**

**தெருள்நிறை உளத்தே திகழ்தனித் தலைமைத் தெய்வமே திருவருட்சிவமே**

**தருணம்என் ஒருமைத் தந்தையே தாயே தரித்தருள் திருச்செவிக் கிதுவே.**

**விளக்கம்**

திருவருளுருவாகிய அருமையான அமுதாகிய பெருமானே, எனது உயிர்க்கு உயிராய் இலங்குபவனே, முதிர்ந்த திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளும் செங்கனி போல்பவனே, நால்வகைப்பட்ட வேதங்களின் மெய்ம்மைப் பொருளாய் விளங்குகின்ற அருள் வள்ளலே, அன்பர்களின் தெளிவார்ந்த வுள்ளத்தில் தோன்றியருளும் ஒப்பற்ற தலைமைத் தெய்வமே, திருவருளோடு கூடிய சிவ பரம்பொருளே, காலமறிந் துதவும் ஒருமைத் தந்தையே, நின் செவியின்கண் எனது இவ் விண்ணப்பத்தை ஏற்றருள்க.

**பாடல்: 6.**

**என்னைஆண் டருளி என்பிழை பொறுத்த இறைவனே திருச்சிற்றம் பலத்தே**

**என்னைஆண் டஞ்சேல் உனக்குநல் அருளிங் கீகுதும் என்றஎன் குருவே**

**என்னைவே றெண்ணா துள்ளதே உணர்த்தி எனக்குளே விளங்குபே ரொளியே**

**என்னைஈன் றளித்த தந்தையே விரைந்திங் கேற்றருள்திருச்செவிக்கிதுவே.**

**விளக்கம்**

என்னுடைய குற்றங்களைப் பொறுத்து என்னையும் ஆட்கொண்ட இறைவனே, தில்லைச் சிற்றம்பலத்தின்கண் எனக்கு அறிவு தந்து அஞ்சுதல் ஒழிக் உனக்கு வேண்டிய அருள் ஞானத்தை இங்கே நல்குவேம் என அறிவுறுத்தருளிய எனது ஞான

குருவே என்னை வேறாக நினையாமல் உண்மையை யுணர்த்தி என்னுடைய உள்ளத்தில் நின்று திகழும் அறவொளி யானவனே என்னைப் பெற்றளித்த ஞானத் தந்தையே இப்பொழுது என்னுடைய இவ்விண்ணப்பத்தை ஏற்றருள்க.

**பாடல்: 7.**

**இரும்புநேர் மனத்தேன் பிழையெலாம் பொறுத்தென் இதயத்தில் எழுந்திருந் தருளி**

**விரும்புமெய்ப் பொருளாம் தன்னியல் எனக்கு விளங்கிடவிளக்கியுட் கலந்தே**

**கரும்புமுக் கனிபால் அமுதொடு செழுந்தேன் கலந்தென இனிக்கின்றோய் பொதுவில்**

**அரும்பெருஞ் சோதி அப்பனே உளத்தே அடைத்தருள் என்மொழி இதுவே.**

**விளக்கம்**

இரும்பு போன்ற மனமுடையேனாகவும் என் குற்றங்களைப் பொறுத்தருளி என் மனத்தின்கண் எழுந்தருளி யிருந்து அறிவு விரும்பும் மெய்ம்மைப் பொருளாகிய சிவ பரத்துவத்தை நன்கு விளங்குமாறு என்னுட் கலந்து காட்டிக் கரும்பின் சாறும், முக்கனிப் பிழிவும் ஆன்பாலாகிய அமுதொடு தேன் பெய்து கலந்தாற் போல இனிக்கின்ற பெருமானே, அம்பலத்தில் ஆடுகின்ற அரிய பெரிய சோதி யுருவாகிய அப்பனே, என் விண்ணப்பத்தைத் திருவுளத்தில் ஏற்றருள்க.

**பாடல்: 8.**

**மலத்திலே கிடந்தேன் தனையெடுத் தருளி மன்னிய வடிவளித் தறிஞர்**

**குலத்திலே பயிலுந் தரமுமிங் கெனக்குக் கொடுத்துளே விளங்குசற் குருவே**

**பலத்திலே சிற்றம் பலத்திலே பொன்னம் பலத்திலே அன்பர்தம் அறிவாம்**

**தலத்திலே ஓங்கும் தலைவனே எனது தந்தையே கேட்கஎன் மொழியே.**

**விளக்கம்**

கேவலத்தில் மலத்திற் கிடந்த என்னை எடுத்து சகலத்தில் மக்களினத்திற் புகுத்தி அறிவுடையோர் கூட்டத்தில் பயிலுகின்ற தகுதியும் அளித்து என் சிந்தைக்குள்ளே இருந்தருளும் சற்குருவே, ஞான வன்மையில் தங்கி, சிற்றம்பலத்திலும் பொன்னம்பலத்திலும் மெய்யன்பரது அறிவாகிய கோயிலிலும் வீற்றிருந்தருளும் தலைவனே, எனக்குத் தந்தையாகிய பெருமானே, என் விண்ணப்பத்தைக் கேட்டருள்க.

**பாடல்: 9.**

**விண்டபோ தகரும் அறிவரும் பொருளே மெய்யனே ஐயனே உலகில்**

**தொண்டனேன் தன்னை அடுத்தவர் நேயர் சூழ்ந்தவர் உறவினர் தாயர்**

**கொண்டுடன் பிறந்தோர் அயலவர் எனும்இக் குறிப்பினர் முகங்களில் இளைப்பைக்**

**கண்டபோ தெல்லாம் மயங்கிஎன் னுள்ளம் கலங்கிய கலக்கம்நீ அறிவாய்.**

**விளக்கம்**

நுண்பொருள்களை விளக்க வல்ல ஆசிரியர்களாலும் அறிந்துரைக்க அரிதாகிய நுண்பொருளாகியவனே, மெய்ம்மையும் தலைமையும் உடையவனே, இவ்வுலகில் நினக்குத் தொண்டானாகிய என்னைச் சார்ந்தவர்களும், நண்பர்களும், சூழ்ந்திருப்பவரும், உறவினரும், தாயரும், உடன் பிறந்தோரும், அயலிருப்பவரும் என இங்கே தொடர்புக் குறிப்புடையவர் முகங்களில் சோர்வுக் குறிகளைக் காணும் போதெல்லாம் அறிவு மயங்கி நான் மனம் கலங்கிய கலக்கத்தை நீ அறிவா யன்றோ.

**பாடல்: 10.**

**சீர்த்தசிற் சபைஎன் அப்பனே எனது தெய்வமே என்பெருஞ் சிறப்பே**

**ஆர்த்தஇவ் வுலகில் அம்மையர் துணைவர் அடுத்தவர் உறவினர் நேயர்**

**வேர்த்தமற் றயலார் பசியினால் பிணியால்மெய்யுளம்வெதும்பியவெதுப்பைப்**

**பார்த்தபோ தெல்லாம் பயந்தென துள்ளம் பதைத்ததுன் உளம்அறி யாதோ.**

**விளக்கம்**

சிறப்பு மிக்க ஞான சபையில் எழுந்தருளும் என் தந்தையே, எனக்குத் தெய்வமே, யான் பெற விரும்பும் சிறப்புக்குப் பொருளாகியவனே, பாசத்தாற் பிணிக்கப்பட்ட இவ்வுலகில் தாயரும், துணைவரும், என்னை யடைந்தவரும், உறவினரும், வணங்கும் தெய்வங்களும், வெறுத்து நோக்கும் அயலவரும் பசி நோயாலும் வேறு பிணிகளாலும் மேனியும் மனமும் வெய்துற்று வருந்திய வருத்தத்தைக் கண்ட போதெல்லாம் என் நெஞ்சம் அஞ்சிப் பதைத்த திறத்தை உன் திருவுள்ளம் நன்கு அறியுமே.

**பாடல்: 11.**

**பரைத்தனி வெளியில் நடம்புரிந் தருளும் பரமனே அரும்பெரும் பொருளே**
**தரைத்தலத் தியன்ற வாழ்க்கையில் வறுமைச் சங்கடப் பாவியால் வருந்தி**
**நரைத்தவர் இளைஞர் முதலினோர் எனையோர் நண்பன்என் றவரவர் குறைகள்**
**உரைத்தபோ தெல்லாம் நடுங்கிஎன் னுள்ளம் உடைந்ததுன் உளம்அறி யாதோ.**

**விளக்கம்**

திருவருள் வெளியில் திருக்கூத்தாடும் பரம்பொருளே, எய்துதற்கரிய பெரிய பொருளே, நிலவுலகில் நடைபெறுகின்ற மக்கள் வாழ்வில் வறுமையாகிய தீங்கு புரியும் பாவியினால் துன்புற்று முதியவரும் இளைவருமாகிய பிறரும் என்னை நண்பனென்று கருதித் தத்தமக்குள்ள குறைகளை எடுத்துச் சொல்லக் கேட்டபோதெல்லாம் என் மனநிலை கலங்கி யுருகியது தேவரீர் அறிந்த தன்றோ.

**பாடல்: 12.**

**அன்னையே அப்பா திருச்சிற்றம் பலத்தென் ஐயனே இவ்வுல கதிலே**

**பொன்னையே உடையார் வறியவர் மடவார் புகலும்ஆடவர்இவர் களுக்குள்**

**தன்னையே அறியாப் பிணியினால் ஆவி தளர்கின்றார் தருணம்ஈ தெனவே**

**சொன்னபோ தெல்லாம் பயந்துநான் அடைந்த சோபத்தை நீஅறி யாயோ.**

**விளக்கம்**

உயிர்த் தொகைகட்கு அம்மையும் அப்பனுமாகிய பெருமானே, திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளும் தலைவனே, இவ்வுலகத்திற் பொன்னையே மிகுதியாக உடையவரும், இல்லாத வறியவரும், இள மகளிர் விரும்பும் ஆடவரும் ஆகிய இவர்கள் ஒவ்வொருவரும் தன்னையறியாமல் பிணி வாய்ப்பட்டுத் தளர்ச்சி உறுகின்றார்கள் அவர்கள் தமது நோயை எடுத்துச் சொல்லிய போதுகளில் அஞ்சி நான் அடைந்த மெலிவை நீ நன்கு அறிவாய்.

**பாடல்: 13.**

**உண்டதோ றெல்லாம் அமுதென இனிக்கும் ஒருவனே சிற்சபை உடையாய்**

**விண்டபே ருலகில் அம்மஇவ் வீதி மேவும்ஓர் அகத்திலே ஒருவர்**

**ஒண்டுயிர் மடிந்தார் அலறுகின் றார்என் றொருவரோ டொருவர்தாம் பேசிக்**

**கொண்டபோ தெல்லாம் கேட்டென துள்ளம் குலைநடுங் கியதறிந் திலையோ.**

**விளக்கம்**

உண்ணுந் தோறும் இனிக்கும் அமுது போல இனிமை விளைவிக்கும் ஒப்பற்ற பெருமானே, ஞான சபையை யுடையவனே, பெருமையாகப் பேசப்படும் உலகில், இத்தெருவில் உள்ள ஒரு வீட்டில் ஒருவர் உடலோடு ஒன்றிய உயிர் துறந்தார் என்று அலறி அழுகின்றார்கள் எனச் சிலர் ஒருவரோ ஒருவர் பேசிக்கொள்வது கேட்டு எனது உள்ளமும் உடம்பும் நடுங்கியதை நீ அறிந்துள்ளாய் அல்லவா?

**பாடல்: 14.**

**காவிநேர் கண்ணாள் பங்கனே206 தலைமைக் கடவுளே சிற்சபை தனிலே**

**மேவிய ஒளியே இவ்வுல கதில்ஊர் வீதிஆ திகளிலே மனிதர்**

**ஆவிபோ னதுகொண் டுறவினர் அழுத அழுகுரல் கேட்டபோ தெல்லாம்**

**பாவியேன் உள்ளம் பகீரென நடுங்கிப் பதைத்ததுன் உளம்அறி யாதோ.**

**விளக்கம்**

காவி மலர் போன்ற கண்களையுடைய உமாதேவியை ஒரு கூறாக உடையவனே, தலைமை சான்ற கடவுளே, ஞான சபையின்கண் எழுந்தருளும் ஒளியாகியவனே, இந்த நாட்டில் தெரு முதலியவற்றில் மனிதர் இறந்தது காரணமாக உறவினர் கூவியழுத அழுகுரல் கேட்ட போதெல்லாம் பாவியாகிய என் மனம் பகீரென அதிர்ந்து நடுங்கித் துடித்தது நினது திருவுள்ளம் தெரிந்த தன்றோ.

**பாடல்: 15.**

**நாதனே என்னை நம்பிய மாந்தர் ஞாலத்தில் பிணிபல அடைந்தே**

**ஏதநேர்ந் திடக்கண் டையகோ அடியேன் எய்திய சோபமும் இளைப்பும்**

**ஓதநேர் உள்ள நடுக்கமும் திகைப்பும் உற்றபேர் ஏக்கமா திகளும்**

**தீதனேன் இன்று நினைத்திட உள்ளம் திடுக்கிடல் நீஅறிந் திலையோ.**

**விளக்கம்**

தலைவனாகிய சிவபிரானே, இவ்வுலகில் என்னை விரும்பிய மக்கள் நோய்கள் பலவுற்றுத் துன்பமடைவது கண்டு நினக்கு அடியவனாகிய யான் அடைந்த வருத்தத்தையும் மேனியிளைப்பையும் கடலலை போல் பொருந்திய மனநடுக்கத்தையும் திகைப்பையும் மிக்க பெரிய ஏக்கம் முதலியவற்றையும் கடையவனாகிய நான் இப்பொழுது நினைக்கினும் திடுக்கிட்டு வருந்தும் திறத்தை நீ அறிவாயன்றோ.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | திருப்புகழில் அருணகிரிநாதர் கூறும் செய்தியினை விவரி? | K4 | CO5 | PO4 |
| 2 | கந்தாலங்காரத்தில் கூறப்படும் கருத்தினை கூறுக. | K3 | CO3 | PO2 |
| 3 | தாயுமானவர் பாடலில் இடம்பெறும் செய்தியினை விளக்குக. | K2 | CO2 | PO1 |
| 4 | இராமலிங்க அடிகள் பிள்ளைப் பெரு விண்ணப்பத்தில் கூறப்படும் கருத்துக்களை | K1 | C43 | PO2 |
| 5 | ஆண்டாளின் பக்தி திறத்தினை விவரி? | K5 | CO3 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | அருணகிரி நாதர் திருப்புகழில் முருகனைப் போற்றிப்பாடும் விதத்திணைப் பற்றி விவரி. | K2 | CO2 | PO4 |
| 2 | சுந்தரலிங்காரதில் இறைவணை விளித்து பாடிய முறையினைப் பற்றித் தொகுத்துரைக்க | K4 | CO1 | PO5 |
| 3 | தாயுமாணவர் பாடல் மூலம் அறிந்த கருத்துக்களைப் பற்றி விவரி | k4 | CO5 | PO2 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | பிள்ளையப் பெருவிண்ணப்பத்தில் இராமலிங்க அடிகளார் கூறும் சீவகாருணீய முறையிணைத் தெளிவுப்படுத்துக. | K3 | CO4 | PO1 |
| 5 | இராமலிங்க அடிகளாரின் இறைநெறியினைப் பற்றி விளக்குக. | K2 | CO3 | PO3 |

.

## அலகு - 5

## குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள் - ஆனந்தக்களிப்பு

குணங்குடி மஸ்தான் சாகிபு இராமநாதபுரம் தொண்டிக்கு வடமேற்கில் பத்து மைல் தொலைவிலுள்ள குணங்குடி என்னம் சிற்றூரில் 1792 ஆம் ஆண்டு பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சுல்தான் அப்துல் காதிர் என்பதாகும். இளமையிலேயே குர்ஆன் மற்றும் ஆலிம் (சமயக் கல்வி அறிஞர்) என்னும் பட்டம் பெற்றார்.

**பாடல்: 1**

**கொடிகட்டிக் கொண்டெழு கோடி - தனங்**

**குவித்தந்த மகிழ்ச்சியாற் கூத்துக வாடி**

**கொடுபுத்தி யுடையோரைக் கூடி - யானுங்**

**கெட்டலை யாமலே கெதிபெற நாடி**

**விளக்கம்**

கொடியைக் கட்டிக்கொண்டு ஏழுகோடி தனம் சேர்த்து அந்தச் சந்தோஷத்தினால் கூத்துக்கள் ஆடி கெட்ட புத்தியுடையவர்களோடு சினேகித்து நானும் கெட்டு அலையாதபடி கெதியை அடைய வேண்டி,

**பாடல்: 2**

**சொற்கடங் காச்சுக ஞானம் - தன்னிற்**

**சும்மாவிருக்குஞ் சுகமதே மோனம்**

**எப்கிடை யாயினும் பானந் - தன்னை**

**எடுத்துண்டிருப்பதற் கிச்சித்தே யானும்**

**விளக்கம்**

சொல்லுக்கு அடங்காத சுகத்தை விளைவிக்கின்ற ஞானத்தில் சும்மா விருப்பதே மௌனம், ஆகையால் எள்ளைவாவது பானம் எடுத்து உண்டிருப்பதற்கே நான் விரும்பினேன்.

**பாடல்: 3**

**வஞ்சிய ராசையைத் தாட்டி - விட்டு**

**வழிபெற்றுக் களிப்புற்று வாசியைப் பூட்டி**

**துஞ்சாத னறிவினைச் சூட்டி - அற்புதத்**

**தொல்லுல சரசை துணித்துவிட்டோட்டி**

**விளக்கம்**

பெண்களுடைய ஆசையைத் தாண்டிவிட்டு நல்ல வழியைப் பெற்றுக் களிப்பையடைந்து வாசியைப் பூட்டி கெடாத அறிவைமாட்டி அற்பமாகிய பழைய உலக ஆசையைக் கெடுத்துவிட்டு ஒட்டி

**பாடல்: 4**

**அஞ்சுதூ ணாட்டிய மாடி - அது**

**அஞ்சோடு நாலோட்டை யடையாமலோடி**

**பிஞ்சழிந் திடுமென்று நாடி - யானும்**

**பேரின்ப விட்டினைப் பிரியமாய்த் தேடி**

**விளக்கம்**

அஞ்சு தூண்கள் நாட்டப்பட்ட மாடியானது அஞ்சுடன் நாலோட்டையடையாமல் ஓடி, பிஞ்சானது அழியுமென்று நாடியானும் பேரின்ப மோட்சவீட்டை ஆசையுடன் தேடி.

**பாடல்: 5**

**நற்பூச்சந் தவைத்தா் பூசி - மிக**

**நன்றாக வைத்தாலும் நாற்றமே வீசி**

**எப்போதுங் கொடுமைசெய் தேரி - என்றே**

**இவ்வுடல் வாழ்வுக ளியாவையும் வீசி**

**விளக்கம்**

நல்ல புஷ்பங்கள் (மலர்கள்) சந்தன, அத்தர், இவைகளைப்பூசி, மிகவும் நன்றாக வைத்தாலும் நாற்றம் வீசி எப்பொழுதும் கொடுமைகளைச் செய்கின்ற நற்பேறு அற்றவன் என்ற இந்தச் சார வாழ்வுகள் யாவையும் எறிந்து.

**பாடல்: 6**

**மாளிகை மேல்வீடு கட்டி - மனை**

**வாழ்வை நிலையென்று வாழ்கின்ற மட்டி**

**நாளையெமன்வந்த தட்டிக் - கொண்டு**

**நடப்பானென்றறியானை யடுப்பதை வெருட்டி**

**விளக்கம்**

மாளிகை மேல்வீடு, இவைகளைக் கட்டி மனை வாழ்க்கையை நிலையென்ற மட்டி, நாளைக்கு எமனாவைன் வந்து அதட்டிக்கொண்டு போவான் என்று அறியாதவனைச் சேர்வதை மயக்கி,

**பாடல்: 7**

**பட்டும்பணிகளும் பூண்டு - கொண்டு**

**பாழான வாழ்வினைப் பலனென மாண்டு**

**கெட்டவர்களைக்கண்டு மீண்டு - கதி**

**கிடைக்கும் படிக்கு நடப்பதற் கீண்டு**

**விளக்கம்**

பட்டுவஸ்திரம், ஆபரணங்கள் இவைகளைத் தரித்து பாழ்பட்ட வாழ்க்கையைப் பலனென்று கொண்டு மாண்டு கெட்டவர்களைப் பார்த்து நீங்கி, ஈண்டு கெதிகிடைப்பதற்கு நடப்பதற்கு,

**பாடல்: 8**

**காமக்கு ரோதங்க ளற்று - சூழுங்**

**கருவி காணஞ்சகலமு மற்று**

**நேம நிஷ்டைகளையு மற்று - நின்ற**

**நிலையு மறந்து குருவடி பெற்று**

**விளக்கம்**

காமம் குரோதங்கள் ஒழிந்து சூழ்கின்ற கருவி, காரணங்கள் சகலமும் அற்று, நியமம், நிஷ்டைகள் நீங்கி நின்ற உண்மை நிலையையும் மறந்து ஞானசிரியனுடைய திருவடிகளைப் பெற்ற.

**பாடல்: 9**

**எத்தனை யெத்தனை காலம் - இந்த**

**என்பு தசையா லெடுக்கின்ற தூலம்**

**மெத்தன வாழுமிஞ் ஞாலம் - அதை**

**மேவாது மேவாதெ டுத்திந்தக் கோலம்**

**விளக்கம்**

எத்தனை காலம் எலும்பு, சதை முதலிய எடுக்கின்ற ஸ்தூலம், மிருதுவாக வாழ்கின்ற இவ்வுலகம், அதை அடையாமல் இந்தக் கோலம் எடுத்து,

**பாடல்: 10**

**எந்நிலை தன்னை யறிந்தே - என்னுள்**

**இருந்தாடுஞ் சூத்திரம் பொருந்தாட மறிந்தே**

**அன்னிய நிலைகளைத் துறந்தே - குரு**

**அருளினா லநுதின மருளெலா மறிந்தே**

**விளக்கம்**

எம்முடைய நிலையை உணர்ந்து எனக்குள்ளிருந்து ஆடுகின்ற சூத்திரம் பொருந்து ஆட்டததையறிந்து அன்னியருடைய நிலைமைகளை விட்டு ஞானாசிரியனுடைய கிருபையினால் தினந்தோறும் அருளெல்லாவற்றையும் அறிந்து.

## வேதநாயக சாத்திரியார்

வேதநாயகம் சாஸ்திரியார் (செப்டெம்பர் 7, 1774 - ஜனவரி 24, 1864) (வேதநாயகக் கவிராயர்) கிறிஸ்தவ தமிழறிஞர். கிறிஸ்தவக் காப்பியமான நோவாவின் கப்பல் பாட்டு எழுதியவர். கிறிஸ்தவ இசைப்பாடல்களை இயற்றியவர். இவர் பெயரில் நாநூறுக்கும் மேற்பட்ட தனிப்பாடல்களும் 133 நூல்களும் உள்ளன.

வேதநாயகம் (இயற்பெயர்: வேதபோதகம்) செப்டம்பர் 19, 1774 (புரட்டாசி 7) அன்று தேவசகாயம் பிள்ளை, ஞானப்பூ அம்மாளுக்கு திருநெல்வேலியில் பிறந்தார். இவருடன் சூசையம்மாள் பாக்கியம்மாள் என இரு உடன் பிறந்தவர்கள். தேவசகாயம் கவிராயர் அருணாச்சலம் பிள்ளையாக இருந்து மதம் மாறி கிறிஸ்தவ போதகராக ஆனவர். தம் மதக் குருவின் பெயராகிய ’ ‘வேதபோதகம்’ என்னும் பெயரை தன் மகனுக்குச் சூட்டினார். பின் மதிப்புக் கருதி வேதநாயகம் என அழைத்தார். சூசையம்மாள், பாக்கியம்மாள் என இரு சகோதரிகள்.

வேதநாயகம் தன்னுடைய ஆறு வயதில் தாயை இழந்து, தாத்தா சவேரிராயன் செட்டியாரின் பாதுகாப்பில் 9 வயதுவரை வளர்ந்தார். பின்னர் இவரின் தந்தை மறுமணம் புரிந்து இவரை அழைத்துக்கொண்டு திருநெல்வேலிக்கு குடிபெயர்ந்தார்.

வேதநாயகம் தன் ஐந்து வயதில் இலக்கண வித்துவான் வேலுப்பிள்ளையிடம் கல்வியைத் தொடங்கினார். வேதநாயகத்தின் ஒன்பது வயதில் திருநெல்வேலிக்கு அருகிலுள்ள புளியங்குடியில் இலக்கணமும், அரிச்சுவடியும் கற்க சேர்ந்தார். பின் பாளையங்கோட்டையிலுள்ள பள்ளியில் சேர்ந்து கல்வியைத் தொடர்ந்தார்.

ஜனவரி 1785-ல் தஞ்சையிலிருந்த ஸ்வார்ட்ஸ் ஐயர் (Rev.C.F.Schwartz)என்னும் ஜெர்மானிய மதபோதகர் திருநெல்வேலி வந்த போது வேதநாயகத்தின் தந்தையின் சம்மதத்துடன் அவரை மதப்போதகக் கல்விக்காக அழைத்து வந்தார். அப்போது தஞ்சை மராட்டிய மன்னரின் மகனான நான்காவது சரபோஜியும் வேதநாயகத்துடன் பயின்றார்.

1789-ம் ஆண்டு தாரங்கம்பாடியிலுள்ள இறையியல் கல்லூரியில் சேர்ந்து மேற்படிப்பு பயின்றார். தாரங்கம்பாடியில் டாக்டர் ஜான், டாக்டர் பிரடெரிக் கிலெய்ன், டாக்டர் கேமரர், டாக்டர் ராட்லர் போன்ற ஜெர்மானிய அறிஞர்களிடம் கல்வி கற்றார்.

### 1. ஆர் இவர் ஆரோ ஆர் இவர் ஆரோ

**ஆர் இவர் ஆரோ ஆர் இவர் ஆரோ**

**ஆர் இவர் பரன் வார்த்தை மாமிசம்**
**ஆயினர் இவரோ**
**ஈர் ஐந்து குணம் இல்லாதோர் போலே**
**பாரினில் ஓர் எளிய கன்னிகையின்**
**பாலர் ஆனாரோ**
**ஊரில் ஓர் இடமும் உகந்திட இல்லையோ**
**சீர் அல்லாக் குடியிற் பிறந்தார் அதி**
**சயம் ஆனவரோ**
**கர்த்ததத்துவமோ காணாது தோள் மேல்**
**சுற்றிவைக்கப் பழந்துணியோ இவர்**
**தூங்கப்புல் அணையோ**
**சேனைதூதர் இதோ சிறப்புடன் பாட**
**கானகக் கோனர் காணவர இவர்**

கர்த்தர் ஆவாரோ

## 2. வானம் பூமியோ? பராபரன் மானிடன்

வானம் பூமியோ? பராபரன் மானிடன் ஆனாரோ? என்ன இது?

ஞானவான்களே, நிதானவான்களே, – என்ன இது? – வானம்

1. பொன்னகரத் தாளும், உன்னதமே நீளும்

பொறுமைக் கிருபாசனத்துரை,

பூபதி வந்ததே அதிசயம்! – ஆ! என்ன இது? – வானம்

2. சத்ய சருவேசன், துத்ய கிருபைவாசன்,

நித்ய பிதாவினோர்ம

கத்துவக் குமாரனோ இவர்? – ஆ! என்ன இது? – வானம்

3. மந்தைக் காட்டிலே மாட்டுக்கொட்டிலிலே

கந்தைத் துணியைப் பொதிந்த சூட்சி,

நிந்தைப் பாவிகள் சொந்தக் கண்காட்சி! – ஆ!

என்ன இது? – வானம்

4. வேறே பேரல்ல, சுரர் விண்ணவர் ஆருமல்ல

மாறில்லாத ஈறில்லாத

வல்லமைத் தேவனே புல்லில் கிடக்கிறார்! – ஆ!

என்ன இது? – வானம்

5. சீயோனின் மாதே இனி க்ஷெணந்தரியாதே

மாயமென்ன? உனக்குச் சொல்லவோ?

வந்தவர் மணவாளனல்லவோ? – ஆ! என்ன இது? – வானம்

3. கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன்

கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன் – எங்கள்

குருவேசுநாதர் பதங் கும்பிடுகிறேன்

சரணங்கள்

1. அம்புவி படைத்தவனைக் கும்பிடுகிறேன் – எனை

ஆண்டவனை, மீண்டவனைக் கும்பிடுகிறேன்

நம்புமடி யார்க்கருளைக் கும்பிடுகிறேன் – பவ

நாசனைக் க்ருபாசனைக் கும்பிடுகிறேன்

தம்பமெனக் கானவனைக் கும்பிடுகிறேன் – நித்திய

சருவ தயாபரனைக் கும்பிடுகிறேன்

உம்பர் தொழும் வஸ்துவையே கும்பிடுகிறேன் – தொனித்

தோசன்னா வோசன்னாவென்று கும்பிடுகிறேன் — கும்பிடு

2. ஒரு சருவேசுரனைக் கும்பிடுகிறேன் – ஒன்றும்

ஒப்பதில்லா மெய்ப்பொருளைக் கும்பிடுகிறேன்

திருவுருவானவனைக் கும்பிடுகிறேன் – தவிது

**சிம்மாசனாதிபனைக் கும்பிடுகிறேன்**

**குருவென வந்தவனைக் கும்பிடுகிறேன் – யூதர்**

**குருகுல வேந்தனைக் கும்பிடுகிறேன்**

**அருமை ரட்சகனைக் கும்பிடுகிறேன் – என**

**தாத்துமாவின் நேசர்தனைக் கும்பிடுகிறேன் — கும்பிடு**

## 4. நெஞ்சே நீ கலங்காதே

**பல்லவி**

நெஞ்சே நீ கலங்காதே-சீயோன் மலையின்

ரட்சகனை மறவாதே-நான் என் செய்வேனென்று.

**அனுபல்லவி**

வஞ்சர் பகை செய்தாலும், வாரா வினை பெய்தாலும் – நெஞ்சே

**சரணங்கள்**

1. **வினைமேல் வினை வந்தாலும், - பெண்சாதி பிள்ளை,**

**மித்ரு சத்ருவானாலும்,**

**மனையொடு கொள்ளை போனாலும், வானம் இடிந்து**

**வீழ்ந்தாலும். – நெஞ்சே**

2. **பட்டயம், பஞ்சம் வந்தாலும், -அதிகமான**

**பாடு நோவு மிகுந்தாலும்,**

**மட்டிலா வறுமைப் பட்டாலும், மனுஷர் எல்லாம்**

**கைவிட்டாலும் – நெஞ்சே**

3. சின்னத்தனம் எண்ணினாலும், - நீ நன்மை செய்யத்

தீமை பிறர் பண்ணினாலும்,

பின்னபேதகம் சொன்னாலும், பிசாசு

வந்தணாப்பினாலும் – நெஞ்சே

4. கள்ளன் என்று பிடித்தாலும், - விலங்கு போட்டுக்

காவலில் வைத் தடித்தாலும்,

வெள்ளம் புரண்டு தலை மீதில்

அலைமோதினாலும். – நெஞ்சே

## 5. இயேசு நாயகா! சாமி மனம்

என் இயேசு நாயகா

உம்மையே நான் பார்த்து-2

எனக்கு நியமித்த ஓட்டத்தில்

ஓடவே பெலன் தாரும்-2

பொறுமையோடே ஓடவே

கரம் பிடித்து ஓடவே

சேரும் வரை ஓடவே

ஒத்தாசை தாரும் தேவனே-2

இயேசுவை பார்த்து ஓடினால்

கிரீடம் உறுதி

மனிதனை பார்த்து ஓடினால்

விழுவதோ சடுதி-2

புனிதவரே இனியவரே இயேசுவே

உதவுமே இறுதிவரை-2

பொறுமையோடே ஓடவே

கரம் பிடித்து ஓடவே

சேரும் வரை ஓடவே

ஒத்தாசை தாரும் தேவனே

தாருமே தேவனே நாள்தோறும்

ஆத்துமாதய பாரம்

கல்வாரி சிலுவையை பாரும்

உண்டு பரிகாரம்-2

என சொல்லி யாவரையும் உம்மிடம்

ஈர்க்க வரம் தாரும்-2

பொறுமையோடே ஓடவே

கரம் பிடித்து ஓடவே

சேரும் வரை ஓடவே

## வேதநாயகர்

## சர் சமய சமரசக் கீர்த்தனைகள்

### 1. இராகம் - செஞ்சுருட்டி, ஆதிதாளம்

**பல்லவி**

ஐயனே உன் ஆழகைக்காண

ஆசைநான் கொண்டேனே ஐயனே

**அநுபலலவி**

வையகமீதுபல அழகையும்

வகைவகையா வந்துகாட்டும் ஐயனே

**சரணங்கள்**

1. உதயசூரியன் சோமன் தாரகை

உன்முன்னே மின்மினியே

நிதிநவமணி யென்னலும்குப்பைகள்

நிகருமோஉனை இனியே ஐயனே

2. கனியுந்தேனும் பாலும் சீனியும்

கற்கண்டும் கரும்பும் சிறுமை

இனிஉனது தரிசனத்தின்முன்

இவைகள்யாவும் வெறுமை ஐயனே

3. செழுமையாகி வண்ணமர்கொள்
சிங்கார வனக்காட்சி
அழகின்ஆலய உன்முன்
அதற்கெத்தனையோ தாட்சி ஐயனே

4. அதிசயவுந்தர மயில்குயில்கிளி
யாதிபறவைக் கூட்டம்
வெட்கிபஞ்சுபோ லோட்டம் ஐயனே

5. சத்தஸ்பரிச ரூபகந்தந்
தான் அல்லாத பொருளே
எத்தன்மையுன் னுருவென்றறிய
இன்பக்காட்சி அருளே ஐயனே

6. பதிலல்நீசெய் பலபொருள்களைப்
பார்க்கபார்க்க வடிவே
அதிசயம்தரும் எந்தன்அற்புத
அழகினுக்குண்டோ முடிவே ஐயனே

7. பிறந்தநாள் முதல் தாயைக்காணாப்

பிள்ளைதளை ஒத்தேனே

சிறந்தவேத நாயகா உன்மேல்

சிந்தையாவும் வைத்தேனே ஐயனே

**2. இராகம் - மோகனம், தாளம் - ஆதி.**

**பல்லவி**

ஏனின்னம் தாமதமையா

என்னிடம் வர ஏனின்

**அநுபலலவி**

தானே உமக்குமுத்தித் தலமொன்றுநிலையோ

வானமுத்தரைவிட்டு வரமனமிலையோ ஏனின்

**சரணங்கள்**

1. சூரியனைதூண்ட அகன்றீரோ அந்தச்

சோமானுக்கொளிதரச் சென்றீரோ

பாரினைப்புரட்டியே நின்றீரோஅதில்

பகல்இரவுண்டாக முயன்றீரோ

காரிலிருந்துகனகமழை சொரிந்தீரோ

கா்ப்பத்தில்சிசுக்களையே புரிந்தீரோ

சாரும்பல்லுயிர்க்குபிராய் விரிந்தீரோ

சா்வரோககாரியஞ் செய்தீரோ ஏனின்

2. அண்டகோடிகளைத் தூக்கினீரொ நலம்

ஆகச்சில அண்டம் ஆக்கினிரோ

கண்டகர்உலகை நீக்கினீரோ கடல்

கரையைகடவாமல் தேக்கினீரோ

அண்டும்பல்லுயிர்க்கமு தூட்டுகின்றீரோ

ஐம்பூதங்கட்கும்வேலை காட்டுகின்றீரோ

மண்டுகளிக்குச்சுவை கூட்டுகின்றீரோ

மலருக்குப்பலவண்ணந் தீட்டுகின்றீரோ ஏனின்

3. மரஞ்செடிபயிர்கள் நிறைத்தீரோ அவை

வளரவேதண்ணீரை இறைத்தீரோ

சுரர்கள்இதைகேட்டுக் களித்தீரோ நல்ல

தொண்டர்இதயத்தில் ஒளித்தீரோ

பரமகிருபாகர பரஸிதநேசரே

பரமதகண்டன் பாபவிநாயகரே

சருவவிநோத சராசரவாசரே

தாசன்வேதநாயகன் தன்பிராயேசயே ஏனின்

### 3. அபயயம் நீ யருளுவாய் (74)

**பல்லவி**

அபயம்நீயருளுவாய் ஆதியே அநுதினம்

**அனுபல்லவி**

உபயபாதம் நம்பினேன் ஒ அநாதியே அநுதினம்

**சரணங்கள்**

1. அலைகடற்சிறு துரும்புபோலே அலைந்துவாடினேன்

உலைமெழுகென உள்ளமுருகி உன்னைநாடினேன் தினமும்

2. நீர்குமிழியை நகரும்வாழ்வை நிலையென்றெண்ணினேன்

மூர்க்கமாக கொடியபாவமுழுதும் பண்ணினேன் தினமும்

3. பாசக்காற்றுப்பஞ்சுபோலப் பறந்துதபங்கினேன்

ஆசைக்கடலில் மூழ்கி அறிவுமயங்கினேன் தினமும்

4. ஆண்டவனீ அடிமைநான் எனை ஆளவொண்ணாதோ

நீண்டவுலகம் ஏழையென்றெனை நிந்தனைபண்ணாதே தினமும்

5. புவனரக்ஷணகாரணார்த்த பருஷவேஷனே

பலவிமோசன வேதநாயக பலவிசேஷனே தினமும்

**4. இராகம் - கலியாணி அடதாளசாப்பு**

**பல்லவி**

உன்னையெனக்குக்காட்டையா - காட்டாமல்சும்மா

ஒளித்தென்னவிளையாட்டையா.

**அனுபல்லவி**

தன்னைப்பாராமலே தன்பிள்ளைகண்மூடி

தனம்ஊட்டுந்தாயுண்டோசாமிநீதயைகூடி

**சரணங்கள்**

1. கறவைதனைப்பிரிந்த கன்றுகதறல்போலும்

கணவன்தனைப்பிரிந்து கலங்கும்உத்தமிபோலும்

இறகுகள்பறிகொடுத் தேங்கும்பறவைபோலும்

இருகண்ணுந்தெரியாத ஈனக்குருடர்போலும்

ஏங்கினேன்சுகம் - நீங்கினேன்துயர்

தாங்கினேன்மனம் - வீங்கினேன் - நீ.

2. நினைக்கநினைக்களன்தனெஞ்ச மெல்லாம்ருசிக்கும்

நின்னைப்புகழும்வாயடு நித்தியாமிர்தம்புசிக்கும்

கனக்கும்நின்னடிகாணக் கண்கள்தினம்பசிக்கும்

கர்த்தனேஉனைக்கண்டாற் கவலையெல்லாம்ருசிக்கும்

கணத்திலேனுங் கணத்திலேனுமென்

மனத்திலேனும் சொர்பபனத்திலேனும்நீ

3. விண்ணேநினையல்லாமல் வேறொன்றைத்தொடுவேனோ

மேதினியெங்குந்தேடி வேதனைபடுவேனோ

கண்ணேமணியேநினைக் கண்டால்நான்விடுவேனோ

கட்டிக்கொண்டானந்தங் கலக்கப்பின்னிடுவேனோ

கருத்தில்மூடுவன் - வருத்தம்போடுவன்

நிருத்தமாடுவன் - விருத்தம்பாடுவன்

4. தேவனேஉனைக்கண்டால் திட்டிதோஷந்தொடுமோ

திவ்யதேஜோமயம் என்தேகந்தனைச்சுடுமோ

கூவுங்கோழிமிதித்தாற் குஞ்சுமுடம்படுமோ

கொல்லுஞ்சிங்கமானாலுங் குட்டிகள் அஞ்சிடுமோ

கோலனே அநு - கூலனேபரி

பாலனேகன - மூலனேநீ.

5. ஆணல்லபெண்ணல்ல ஐம்பூதஞ்சுடரல்ல

அரியயன்சிவனல்ல அதுவல்லஇதுவல்ல

காணருமுன்திவ்ய காந்திவிரியும்நல்ல

கனவடிவினைக்காணக் காதல்கொண்டேன்வல்ல

காரணாசுக - பூரணாகுண

தாரணா - கன - ஆரணாநீ.

6. தேனேகனியேதெவிட் டாததெள்ளமிர்தமே

சீனியேகரும்பே தித்திக்கும்இரதமே

வானேபுவியேசுக வாழ்வேபெரும்பதமே

மதிக்கும்வேதநாயகன் மகிழுமனோரதமே

வாடினேன் கவி - பாடினேன் உனை

நாடினேன் தினந் - தேடினேன் - நீ.

**5. இராகம் - குந்தனவராளி, ஆதிதானம்.**

**பல்லவி**

மனமேநீ ஈசனாமத்தை வாழ்த்துவாய் தினம்

வாழ்த்துவாய் மனமே

**அநுபல்லவி**

அனவரதமும்நீ அரும்பதபாடிக்

கனசுகமேவிடக் கலந்துகொண்டாடி மனமே

**சரணங்கள்**

1. வம்புவார்த்தைகளே பொரும்பாபம்

வாய்க்குச்சேதமெல்லாப என்னலாபம்

எம்பிரான்திரு மகிமைபிரதாபம்

எடுத்துப்பேசுவது சத்காலக்ஷேபம் மனமே

2. ஏகமாஉள் ளுருகியேபரிய

இருகண்ணானந்த பாஷ்பங்கள்சொரிய

தேகபரவசம தாயன்புரிய

சிரகராதிகள் அஞ்சலிபுரிய மனமே

3. கரும்புதின்னக்கை கூலியும்மஏனோ

கற்கண்டோ அமுதோ பசுந்தேனோ

விரும்பும்பிரமானந்தமே யதுதானோ

வேதநாயகன்போக் கிணைசொல்லநானோ மனமே

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | குணங்குடி மஸ்தான் சாகிப்புவின் வாழ்க்கை குறிப்புனைப் பற்றிக் கூறுக. | K4 | CO5 | PO4 |
| 2 | குணங்குடி மஸ்தான் சாகிபு பாடலில் கூறப்படும் கருத்துக்களை விவரி. | K3 | CO3 | PO2 |
| 3 | வேதநாயக சாத்திரியரின் பாடலில் இடம்பெறும் செய்திகளை விவரி. | K2 | CO2 | PO1 |
| 4 | வேதநாயகம் பிள்ளையின் வாழ்க்கை வரலாற்றினைக் கூறுக. | K5 | C43 | PO2 |
| 5 | ஏனின்னம் தாமதமையா் எனத் தொடங்கும் பாடலின் கூறும் | K1 | CO3 | PO3 |

| | | | | |
|---|---|---|---|---|
| | கருத்தினைக் கூறுக. | | | |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | ஆனந்தக்களிப்பில் குணங்குடி மஸ்தான் சாகிபு கூறும் இறைத்தன்மைப் பற்றி ஆராய்க. | K4 | CO2 | PO4 |
| 2 | யாா் அவள் ஆரோ? யாா் இவா் ஆரா? என்ற பாடலின் மூலம் அறிந்த கருத்தினைக் கூறுக. | K3 | CO1 | PO5 |
| 3 | சா்வ சமய சமரசக் கீா்த்தனைகளைப் பற்றி விவாி | k4 | CO5 | PO2 |
| 4 | ஐயனே உன் அழகைக்காண எனத் தொடங்கும் பாடலில் சொல்லப்படும் செய்தினைத் தொகுத்து எழுதுக. | K5 | CO4 | PO1 |
| 5 | மனமே நீ. ஈசணாமத்தை எனத் தொடங்கும் பாடலில் சொல்லப்படும் செய்தினைப் புலப்படுத்துக. | K2 | CO3 | PO3 |


**முனைவர் செ.சரவணப்பெருமாள்**
உதவிப்பேராசிரியர்,
தமிழியல்துறை,
பி.எட். தொலைநெறி தொடர்கல்வி இயக்ககம்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
Mail ID: saravanperumalmsu@gmail.com
தொலைபேசி எண். 9047929744


| Text Book(s) | |
|---|---|
| | **இளங்கோவடிகள்இயற்றியசிலப்பதிகாரம் (மூலமும்அரும்பதஉரையும்) அடியார்க்குநல்லார்உரையுடன், உ.வே.சா. பதிப்பு, டாக்டர்உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, பதினொன்றாம்பதிப்பு: 2008** |
| | **கடைச்சங்கப்புலவருள்ஒருவராகியமதுரைக்கூலவாணிகன்சீத்தலைச்சாத்தனார்அருளிச்செய்தமணிமேகலை,** |

| | |
|---|---|
| | மகாமகோபாத்தியாயதாக்ஷிணாத்தியகலாநிதிடாக்டர்உ.வே. சாமிநாதையரவர்கள்பலபிரதிகளைக்கொண்டுபரிசோதித்துநூதனமாகஎழுதியஅரும் பதவுரையுடனும்பலவகைஆராய்ச்சிக்குறிப்புக்களுடனும்கூடியது, மகாமகோபாத்தியாயடாக்டர்உ.வே. சாமிநாதையர்நூல்நிலையம், சென்னை, முதற்பதிப்பு: 1898, ஏழாம்பதிப்பு: 1998. |
| | திருத்தக்கதேவரியற்றியசீவகசிந்தாமணிமூலமும்நச்சினார்க்கினியருரையும், மகாமகோபாத்தியாயதாக்ஷிணாத்தியகலாநிதிடாக்டர்உ.வே. சாமிநாதையரவர்கள்எழுதியபலவகைஆராய்ச்சிக்குறிப்புக்கள்கொண்டது, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், நிழற்படப்பதிப்பு: நவம்பர் 1986. |
| | கம்பராமாயணம் (இராமாவதாரம்) சுந்தரகாண்டம், வெளியிடுவோர்: எஸ். ராஜம், சென்னை, முதற்பதிப்பு: 1958. |
| | கம்பராமாயணம், கம்பன்கழகம், சென்னை. |
| | சேக்கிழார்சுவாமிகள்அருளியபெரியபுராணம்எனவழங்கும்திருத்தொண்டர்புராணம் (மூலம்), காசித்திருமடம், திருப்பனந்தாள், பதினொன்றாம்பதிப்பு: 2009. |
| | சீறாப்புராணம் – முதற்பாகம், இரண்டாம்பாகம், உமறுப்புலவர், விளக்கவுரை: செய்குத்தம்பிப்பாவலர், பதிப்பு: நாச்சிகுலத்தார்உதயமார்த்தாண்டபுரம், 1999. |
| | இரட்சணியயாத்திரிகம், எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை, பொதுப்பதிப்பாசிரியர்: ஜி. ஜான்சாமுவேல், பதிப்பாசிரியர்: மா. மதியழகன், ஆசியவியல்நிறுவனம், சென்னை, மறுபதிப்பு: 1998. |
| Reference Books | |
| | இளங்கோஅடிகள்அருளியசிலப்பதிகாரம் (மூலமும்தெளிவுரையும்), உரையாசிரியர்: சிலம்பொலிசு. செல்லப்பன், பாரதிநிலையம், சென்னை, முதற்பதிப்பு: டிசம்பர் 2016. |
| | தமிழில்காப்பியக்கொள்கைமுதற்பகுதி, து. சீனிச்சாமி, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு: சூலை 1985. |
| | கம்பன்கலை, அ.ச. ஞானசம்பந்தன், கங்கைபுத்தகநிலையம், சென்னை, முதற்பதிப்பு: நவம்பர் 1996. |
| | கம்பனும்ஆழ்வார்களும், ம.பெ. சீனிவாசன், மீனாட்சிபுத்தகநிலையம், மதுரை, முதற்பதிப்பு: டிசம்பர் 2011. |
| | தேசியஇலக்கியம் (பெரியபுராணம்பற்றியவிளக்கம்), அ.ச. ஞானசம்பந்தன், கங்கைபுத்தகநிலையம், சென்னை, கங்கைமுதற்பதிப்பு: 1997. |
| | சேக்கிழார்தந்தசெல்வம், அ.ச. ஞானசம்பந்தன், கங்கைபுத்தகநிலையம், சென்னை, முதற்பதிப்பு: 1997. |
| | மணிமேகலைகாட்டும்மனிதவாழ்வு, சாமிசிதம்பரனார், |

| | |
|---|---|
| | சிவகாமிசிதம்பரனார்இலக்கியநிலையம், சென்னை, முதற்பதிப்பு: பிப்ரவரி 1960, மூன்றாம்பதிப்பு: சூலை 1975. |
| | இஸ்லாமியத்தமிழ்இலக்கியவரலாறு (தொகுதிஒன்று), ம. முகம்மதுஉவைஸ், பீ.மு. அஜ்மல்கான், மதுரைகாமராசர்பல்கலைக்கழகம், மதுரை, முதற்பதிப்பு: 1986. |
| **Web Sources** | |
| • **Tamil Heritage Foundation- www.tamilheritage.org <http://www.tamilheritage.org>** | |
| • **Tamil virtual University Library- www.tamilvu.org/ library http://www.virtualvu.org/library** | |
| • **Project Madurai - www.projectmadurai.org.** | |
| • **Chennai Library- www.chennailibrary.com <http://www.chennailibrary.com>.** | |
| • **Tamil Universal Digital Library- www.ulib.prg <http://www.ulib.prg>.** | |
| • **Tamil E-Books Downloads- tamilebooksdownloads. blogspot.com** | |
| • **Tamil Books on line- books.tamil cube.com** | |
| • **Catalogue of the Tamil books in the Library of British Congress archive.org** | |
| **Tamil novels on line - books.tamilcube.com** | |

| Expected Course Outcomes: இப்பாடத்தைக்கற்பதால்விளையும்பயன்கள் | |
|---|---|
| இப்பாடத்தைக்கற்பதால்பின்வரும்பயன்களைமாணவர்அடைவர். | |
| 1. | தமிழில்சமயங்களுக்கும்காப்பியங்களுக்கும்இடையிலானஉறவை, பங்களிப்பைஅறிதல். |
| 2. | சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம்முதலியகாப்பியஇலக்கியங்களில்புலமைபெறல். |
| 3. | காப்பியஇலக்கியங்களின்நோக்கும்போக்கும்குறித்ததெளிவானபார்வையைப்பெறுதல். |
| 4. | காப்பியங்களின்அமைப்பு, யாப்பு, பொருண்மை, இலக்கியநலன்கள்முதலியவற்றைத்திறனாய்வுப்பார்வையோடுநன்கறிந்திருத்தல். |
| 5. | தமிழ்க்காப்பியங்களின்தனித்தன்மைகளைஆழமாகஅறிதல். |

| | PO 1 | PO 2 | PO 3 | PO 4 | PO 5 | PO 6 | PO 7 | PO 8 | PO 9 | PO 10 | PSO 1 | PSO 2 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **CLO1** | 3 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 3 | 2 | **3** | **3** | 3 |
| **CLO2** | 3 | 2 | 3 | 2 | 2 | 3 | 2 | 3 | 2 | 2 | 3 | **1** |
| **CLO3** | 2 | 3 | 2 | 3 | 3 | 2 | 3 | 2 | 3 | 3 | 2 | **3** |
| **CLO4** | 3 | 2 | **3** | 3 | 2 | **3** | 3 | 2 | 3 | 3 | 2 | **2** |
| **CLO5** | 3 | 3 | 2 | 3 | 2 | 3 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 |